


KALKI 19-10-75 75 காசு



எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்

பிலிப்ஸ்



பிலிப்ஸ் பல்புகள்

பிலிப்ஸ்—லாம்ப் மற்றும் ஒளித்துறையில் முன்னோடிகள்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்



ராதா சில்க் எம்போரியம் மயிலாப்பூர், சென்னை-600 004
ராதா சில்க் எம்போரியம் 29, கோவிந்த் மஹல், 86-B, மரைன் டிரைவ், பம்பாய்-400 002
சார்பு நிறுவனம்: ராதா சில்க்ஸ் தன் பில்டிங்ஸ், மவுண்ட் ரோடு, சென்னை-600 002

தீபாவளி வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு

EP-RASI-107



வின்டாஸ்-PZ.VI.2-140 TM (R)



கல்கி


ராக்ஷஸ
ஐப்பசி 2

○

அக்டோபர் 19
1975

○

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



முடியுமா உங்களால்?

மேலேயுள்ள பத்து முகங்களில் இரண்டு முகங்கள் மட்டுமே ஒன்று போலிருக்கும். அவை எந்தெந்த முகங்கள் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

(விடை: மூன்றும் பத்தும்)

ஞாபகத்துக்கு ஒரு பரீட்சை. இந்தப் படத்தை ஒரு நிமிஷம் உற்றுப் பாருங்கள். பிறகு புத்தகத்தை மூடி வைத்துவிட்டுப் பார்த்த பொருள்களை நினைவுபடுத்திப் பாருங்கள். எத்தனை பொருள்களை உங்களால் நினைவுபடுத்திக் கூற முடிகிறதோ அத்தனைக்கு நீங்கள் நிபுணர்தான்!



கறுப்புச் சந்தையும் கம்யூனிஸ நாடுகளும்

கம்யூனிஸ்ட்டுகள் என் முதல் எதிரி என்றார் ராஜாஜி. கம்யூனிஸ்ட் தோழர்களிடம் அவருக்குத் தனிப்பட்ட விரோதம் ஏதும் கிடையாது. அவர்களுடைய கொள்கைகள் நாட்டுக்கு நலம் பயப்பன அல்ல என்ற காரணத்தால் அப்படிச் சொன்னார்.

ராஜாஜி கார்ல் மார்க்ஸையும் அறிந்தவர். லூட்விக் எர்ஹார்டையும் புரிந்து கொண்டவர். இரண்டு கொள்கைகளையும் சீர்தூக்கிப் பார்த்த பின்னர்தான் கூறினார், துரிதமான தொழில் வர்த்தக வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் அதன் விளைவான மக்களின் சுபிட்ச வாழ்வுக்கும் சுதந்திரப் பொருளாதாரமே சாலச் சிறந்தது என்று.

ஏட்டுச் சுரைக்காய் அல்ல. பிரத்யட்ச உதாரணங்களும் இருக்கின்றன. சுதந்திரப் பொருளாதாரத்தின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக ஜப்பானும் மேற்கு ஜெர்மனியும் இன்னும் சமீபத்தில் மலேஷியாவும் உள்ளன.

பொருளாதார ரீதியில் மார்க்ஸியம் அடைந்த படுதோல்விக்கு உதாரணமாக இன்று பர்மா திகழ்கிறது.

'ஏஷியா மாகஸின்' என்ற பத்திரிகையில் வெளியான கட்டுரையின் சுருக்கத்தை ஆகஸ்ட் மாத 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'டில் பலர் படித்திருக்கலாம். படிக்காதவர்களுக்குச் சிலவற்றை மட்டும் எடுத்துக் கூறுகிறோம் :

பர்மா கனிவளங்கள் மிகுந்த நாடு. இயற்கைச் செல்வங்கள் கொழிக்கும் நாடு. செழிப்பான பூமியை உடைய தேசம். ஆயினும் என்ன? நாற்பதாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இன்று நாட்டின் பல பாகங்களில் ஏழைமை அதிகரித்திருக்கிறது!

ஜப்பானைப் போல் இரண்டு மடங்கு பெரிதான நாட்டில் ஜப்பானின் ஜனத் தொகையில் பாதி அளவே உள்ளபோதிலும் பொருளாதாரச் சீர்குலைவு. யுத்தத்துக்கு முன் அரிசி ஏற்றுமதி செய்த நாட்டில் இன்று உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு. அதற்காகக் கலாட்டா.

பரபரப்பும் சுருசுருப்பும் மிகுந்து பளபளத்த ரங்கூன் நகரம் இன்று அழுது வடிந்து சோம்பிக் கிடக்கிறது. ராணுவ ஆட்சியில் அரசாங்கம் கிட்டத்தட்ட திவாலா நிலைக்கு வந்தாகிவிட்டது.

இந்நிலைக்கு அடிப்படைக் காரணம் என்ன? நி வின், ராணுவத்தின் கெடுபிடியுடன் சகலத்தையும் அரசுடைமையாக்கியதுதான்.

'பர்மிய பாணி சோஷலிஸம்' என்று தலைப்பிட்டு அரசு அறிக்கை விட்டது. 'மார்க்ஸியத்தில் நம்பிக்கை வையுங்கள்; புதிய சமுதாயம் அமைப்போம்' என்றது.

புதிய சமுதாயம்தான். ஆனால் அது எத்தனை ஏமாற்றமளிப்பதாகிவிட்டது, மக்களுக்கு! இல்லாதபோனால், ஆஸ்திரேலியாவில் பர்மியர் குடியேற அனுமதி வழங்கப்படும் என்பதாக வதந்தி பரவிய சில மணி நேரத்தில் ரங்கூனிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தை 1500 பர்மியர் சூழ்ந்து முற்றுகை யிடுவார்களா?

பத்தாவது முறையாகப் பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்தளித்த நி வின் அரசாங்கத்தில் லஞ்ச ஊழல் பரவலாக இருக்கிறது.

குருட்டு நம்பிக்கையுடன் மார்க்ஸீயத்தைப் பின்பற்றும் பர்மிய ஆட்சியில் எல்லா வித உணவுப் பொருள்களுக்கும் மக்கள் நீண்ட கியூவில் நிற்பது வெகு சகஜம். அதைவிடக் கறுப்புச் சந்தை சர்வ சாதாரணம். ஒரு கொக்கோகோலா ஒன்பது ரூபாய்!

கம்யூனிஸ நாடுகள் அனைத்திலுமே கறுப்புச் சந்தைப் பொருளாதாரம் என்பதாக ஒன்று தனித்து இயங்குகிறது என்பதைச் சில வாரங்களுக்கு முன்பு 'ஹிந்து' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரை விரிவாக எடுத்துரைக்கிறது.


இவற்றையெல்லாம் உணர்ந்தறிந்து எச்சரிக்கையாக இருப்போம். கம்யூனிஸ்டுகளை நாம் விரோதித்துக் கொள்ள வேண்டியதில்லை; ஆனால் அதற்காகக் கம்யூனிஸத்தை நாம் ஏற்க வேண்டுமென்பதுமில்லை.

கல்கி.

மலர் 35

இதழ் 12

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்


துன்பத்தில்
நண்பர்கள்!
காமராஜ்
காங்கிரஸ்

வருந்துகிறோம்

ஸ்ரீ குண்டப்பா

அச்சமற்ற ஆணித்தரமான எழுத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வேறு பல அரசியல் விமர்சகர்கள் அதைப் படித்து ஆன்ம பலம் பெற உதவி வந்த ஒரு பெருந்தகை காலமாகி விட்டார். பொது விஷயங்களுக்காக கோகலே கழகம் நடத்தி வந்த சிறு ஏட்டிலே டி. வி. ஜி. என்ற மூன்றெழுத்துக்களுக்குரியவராய திரு டி. வி. குண்டப்பா தமது கடைசி நாட்கள் வரை சமூக, அரசியல் பிரச்னைகளை விருப்பு வெறுப்பின்றி அலசிக் கொண்டிருந்தார்.



87 வயது வரை வாழ்ந்து பெருவாழ்வு கண்ட குண்டப்பா இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பொது வாழ்வில் ஈடுபட்டார். பல்கலைக் கழகப் பட்டம் பெறப் படிக்காவிட்டாலும் அரசியல், கலைகள், இலக்கியம் ஆகியவற்றில் நிபுணராக விளங்கினார். பன்மொழிப் புலவராகவும் சிறந்த சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தார். பிரசித்தி பெற்ற மைசூர் திவான்கள் விச்வேச்வரய்யா, மிர்ஸா இஸ்மாயில் போன்றோர் அவரிடம் அடிக்கடி ஆலோசனை கேட்டுப் பெறுவார்கள்.

பத்திரிகைகளை நடத்தியும் ஏராளமான நூல்களை எழுதியும் பெரும் புகழ் பெற்ற குண்டப்பா மைசூர் பத்திரிகையாளர் சங்கத்தைத் தொடங்கியவர்; சாகித்திய அகாதமி பரிசும் பெற்றவர்.

குண்டப்பா அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதெனில் அச்சமற்றுத் தீமைகளை எதிர்க்கப் பழகுவதே சிறந்த உபாயம்.

ஸ்ரீ சக்கரபாணி

சக்கரமாகச் சுழன்று உழைத்த ஒருவர் ஓய்ந்துவிட்டார். அவர்தாம் அம்புலி மாமா ஆசிரியர்.

பெரியவர்களுக்காகப் பத்திரிகை நடத்துவதை விடக் குழந்தைகளுக்காக நடத்துவதில் சிரமம் அதிகம். குழந்தைகளை எளிதில் திருப்திப்படுத்தி விடலாம்; ஆனால் இதில் பொறுப்பு அதிகம். அந்தப்பொறுப்பு மிக்க பணியில் பழுத்த அனுபவம் பெற்றவர் திரு சக்கரபாணி. அம்புலிமாமாவை ஒரு மொழியில் அல்ல; பதினொரு மொழிகளில் வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். வண்ணச் சித்திரங்களுடன் வீர தீர சாகஸங்களை விவரிக்கும் கதைகள் இதில் இடம் பெற்று நெஞ்சுறுதியை வளர்த்தன. புராணக் கதைகள் இளம் நெஞ்சங்களில் இறையுணர்வையும், சீலத்தையும் புகுத்தின.



சக்கரபாணி அவர்கள் இயற்கை எய்தி விட்டாலும் அம்புலி மாமா தொடர்ந்து சிறுவர் உலகுக்குச் சிறப்புப் பணியாற்றி வரும். அவருக்குத் தக்கதொரு நினைவுச் சின்னமாகவும் அமையும்.

வாஹினி அதிபர் திரு நாகிரெட்டியுடன் இவருக்கு ஏற்பட்ட அசைக்க முடியாத ஆழ்ந்த நட்பு பாபெரும் வெற்றிப் படங்களை உருவாக்க உதவியது. வெற்றிப் படங்களுடன் சௌகார், மிஸ்ஸியம்மா போன்ற லட்சியப் படங்களையும் எடுத்தது சக்கரபாணியின் திறமைக்கும் நாகிரெட்டியுடன் அவருக்கு ஏற்பட்ட நெருங்கிய நட்புக்கும் எடுத்துக் காட்டாய் விளங்குகின்றன.

ராஜாஜி சிந்தனை

யோகம்

பணியாற்றுவது பற்றியே உன் சிந்தனை இருக்க வேண்டும். அதிலிருந்து உனக்குக் கிடைக்கும் லாபத்தை எண்ணக் கூடாது. உனக்கு என்ன பலன் கிடைக்கும் என்பதில் உன் மனத்தை லயிக்க விடாதே. நீ செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றப் பாடுபடு. பலனைக் கடவுளிடம் விட்டுவிடு. யோகியரின் உபதேசங்களைத் தப்பர்த்தம் செய்து கொள்ளாதே. உழைக்காமலிருக்க வேண்டும் என்று எண்ணாதே. அது சோம்பலை வளர்க்கும். கடமைகளைப் புறக்கணிப்பதாகும். சுய கட்டுப்பாடும் பற்றற்ற நிலையும் உன் காரியங்களை யெல்லாம் ஆட்கொள்ள வேண்டும். வெற்றி தோல்விகளைச் சமமான மனப் பக்குவத்துடன் ஏற்றுக்கொள். இந்தச் சம நோக்கைத்தான் யோகியர் யோகம் என்பார்கள்.

கீதா மண்டல் பிரசங்கம், ரத்னகிரி, ஏப்ரல் 27, 1963



Creative Unit-A 1981-Tam

உங்கள் குறைவும் என் நிறைவும்

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்.


புது நாகரிக வழியைக் கொஞ்சத்தில் கொஞ்சம் விட்டால்கூட, விடுவதற்கு முயற்சி செய்தாலே கூட, அந்த மட்டில் நல்லதுதான். இன்றைய போக்கில் இந்தத் திசையில் எண்ணம் வருவதே பெரிசு என்றுதான் நினைக்கிறேன். இங்கே இப்படித் தர்ம சம்பந்தமான உபந்நியாசம், ஒரு பூஜை, கிஜை என்று இவ்வளவு தூரமாவது நீங்கள் வருவதே பெரிசு. இப்போது ஜனங்கள் மனசை இழுக்கிறதற்கு எத்தனையோ ருசியான விஷயங்கள் ஏற்பட்டுப் போச்சு. ஒரு பாட்டுக் கச்சேரி கேட்டால் ஆனந்தமா யிருக்கிறது. கண்ணுக்கும் ஆனந்தமாக விசித்திரமான படங்கள் (ஸினிமா), நாடகங்கள், நாட்டியங்கள் இப்படி எத்தனையோ வந்திருக்கின்றன. இந்திரியங்களுக்குத் தற்கால ருசி உண்டாக்குகிற சமாசாரங்களில் ஜனங்கள் சுபாவமாக நிறையச் சேர்ந்து விடுகிறார்கள். தர்மம், மதம், ஆத்மா, தத்துவம் என்று சொல்லி ஜனங்களைச் சேர்க்கிறது அவ்வளவு சுலபமில்லை. அனந்தராம தீக்ஷிதர் ஒரு கதை சொல்கிறார், சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் பாகவதம் சொல்கிறார், இதெல்லாம் தர்ம விஷயமானாலும் இங்கேயும் ஜனங்கள் கூடுகிறார்களே என்றால் இங்கேயும் ருசியாக ஒரு கதையை வைத்துக் கொண்டு — கதா த்வாரா தான் அங்கங்கே தர்மத்தைச் சொல்கிறதால் பொதுஜனங்களிடம் இவற்றுக்கும் வசீகரம் இருக்கிறது. இதெல்லாம் தவிர ஜனங்கள் கவனம் இப்போது பாலிடிக்ஸில் நிறையத் திரும்பியிருக்கிறது. ராஜாங்கம், கட்சிகள், அநேக 'இஸம்'கள் என்று இருந்து கொண்டு, அது ஒவ்வொன்றிலும் ஜனங்களை இழுக்கும்படியான பெரிய மநுஷ்யர்கள் இருந்து கொண்டு நிறையப் பிரசாரம் பண்ணுவதால் பலவிதமான கட்சி அபிமானங்கள் சமூகத்தில் பரவிவிட்டது. இதனால் அப்படிப்பட்ட பெரிய மநுஷ்யர் ஒருத்தர் வருகிறார், பேசுகிறார் என்றால் அங்கே கூட்டம் திரளுகிறது. இதுவும் இப்போது ருசிகரமாக ஆகியிருக்கிறது. இத்தனைவிதம் ருசியான பொழுது போக்குகளுக்கு நடுவில், இங்கே அந்த மாதிரி சுவாரசியமாக எதுவும் இல்லாவிட்டாலும், கதையும் இல்லை, பாட்டும் இல்லை, கூத்தும் இல்லை, கட்சியும் இல்லை, ராஜாங்க சம்பந்தமும் இல்லை — வெறும் ஸத் விஷயங்களைக் கேட்க நீங்கள் இப்படிக் கூட்டம் கூட்டமாக வந்ததே பெரிசு, அதுவே ஒரு நல்ல திருப்பம் என்றுதான் நினைக்கிறேன். கார்த்தாலேயிலிருந்து இரா வரையில் பட்டண வாழ்க்கையில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஆபீஸ், கடை கண்ணி என்று அலைய வேண்டியிருக்கிற போது, ஸத் விஷயங்களுக்கு என்று நேரம் பண்ணிக் கொண்டு எத்தனையோ சிரமத்துக்கிடையில் நீங்கள் எல்லோரும் வந்திருக்கிறீர்கள். அதிலேயே எனக்கு ரொம்ப சந்தோஷம், திருப்தி. அதோடுகூட எனக்கு என் அபிப்பிராயங்களில் தெளிவு ஏற்படவும் அநுகூலம் பண்ணியிருக்கிறீர்கள்; உபகாரமாக இருந்திருக்கிறீர்கள். நீங்கள் எல்லாரும் க்ஷேமமாக இருக்க வேண்டும்.

உங்களிடம் ஒன்றைப் பண்ணு என்று சொல்வதும் தப்பு. இத்தனை நாள் இருந்துவிட்டு உங்கள் குறை நிவிருத்தியாவதற்கு ஒன்றுமே சொல்லாமல் போனாலும் தப்பு. அதனால், தர்ம சம்பந்தமாகக் கேட்டதை எல்லாம் **நடத்திக்** காட்டுங்கள் என்று சொல்லாமல், அவற்றை அவ்வப்போது **ஞாபகப் படுத்திக்** கொள்ளுங்கள் என்கிறேன். அவ்வளவுதான். ஞாபகப்படுத்திக் கொண்டாலே போதும். வேதத்திலேயே இதற்கு ஆதாரம் இருக்கிறது. வேதத்தில் அச்வமேத யாகத்தைப் பற்றிச் சொல்லும் போது, ''இந்த அச்வமேதத்தை எவனொருத்தன் பண்ணுகிறானோ, அவன் மகா பாபங்களையெல்லாம் தாண்டி விடுகிறான். இந்த யாகத்தைப் பண்ணுகிறவன் மாத்திரம் இல்லை; அச்வமேதப் பிரகரணம் என்ன என்று, அதாவது இந்த யாகத்தை எப்படிப் பண்ண வேண்டும் என்று வெறுமே தெரிந்து கொண்டிருக்கிறவன்கூடப் பிரம்மஹத்தி போன்ற பெரிய பாபங்களையும் தாண்டி விடுகிறான்'' என்று வருகிறது. மனசில் ஒன்றை நினைத்து நினைத்துப் பார்ப்பதற்கே ஒரு சக்தி இருக்கிறது. நான் சர்ச்சை பண்ணிப் பண்ணித் தெளிவாக்கிக் கொண்டது போல நீங்களும், ''நாம் எப்படி இருக்க வேண்டும்? இப்போது நாம் இருப்பது எப்படி? நம்முடைய வாழ்க்கை இப்படி இருக்கிறதே, இதில் நமக்குப் பூரண நிறைவு உண்டா? இதனால் லோக க்ஷேமம் உண்டாகிறதா? அந்த நிறைவும் க்ஷேமமும் ஏற்பட வேண்டுமானால் நாம் எப்படி இருக்க வேண்டும்? அதற்கும் இதற்கும் எவ்வளவு தூரம் வித்தியாசம் இருக்கிறது? அவ்வளவு தூரமும் போக நம்மால் முடியுமா, முடியாதா? எவ்வளவு தூரம்தான் நம்மால் முடியும்? முடியாது போனாலும் அதுதானே நல்லது?'' என்று மனசில் முடிந்தபோதெல்லாம் அலசிக் கொண்டிருந்தாலே போதும் என்பதுதான் என் அபிப்பிராயம். நானே என்னை முழுக்க மாற்றிக் கொண்டால்தான் உங்களையும் அப்படி ஆகச் சொல்லத் தகுதி உண்டு. நான் வந்திருக்கிற லெவலுக்குத்தான் உங்களையும் நான் வரச் சொல்லலாம். அதனால் முதலில் எப்படி இருக்க வேண்டும் என்பதை மனசுக்குள் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள் என்கிறேன். (தொடரும்)

1959ல் சென்னை பிரிவுபசாரத்தில் அருளிய உரை.

பாருங்கள் எப்படி ப்யூரிடாஸ் :.பில்ட்டர்கள் சாதாரணக் குழாய் நீரை வடிகட்டி அசுத்தங்களை நீக்கி நூற்றுக்கு நூறு தீங்கற்ற நல்ல குடி நீராக ஆக்கிவிடுகிறது

நீர்வழிப் பரவும் நோய்களான காலரா, டை:.பாயிடு, சீத பேதி, இரைப்பை-குடல் அழற்சி முதலியவற்றைத் தடுத்துக் காக்க இதைவிட மேலான உத்தரவாதம் எதுவுமில்லை.



1. மேற்புற அறைக்குள் ஊற்றப்படுகிறது குழாய் நீர்.

2. ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை பெற்ற கேண்டல் :.பில்ட்டர் எல்லாக் கிருமிகளையும் நீரிலிருந்து வடிகட்டி ஒதுக்கிவிடுகிறது.

3. இணைப்புத் தடமற்ற, இரசாயனப் பொருள்களை எதிர்க்கும் தன்மையுள்ள, கீறல் விழ முடியாத எபாக்ஸி-பூசகப் பெற்ற அலுமினியம் அறை.

4. கீழ்ப்புற அறையினுள் நூற்றுக்கு நூறு தூய நீர் குடிக்கத் தயாராகத் திரண்டிடும்.

உங்கள் ஆதரவுக்குரியவர்களுக்கு ஆதரவளியுங்கள். இன்றே பெறுவீர் ஒரு ப்யூரிடாஸ்.

அசல் ப்யூரிடாஸ் :.பில்ட்டர்களையே வாங்குகிறீர்கள் என்பதை உறுதி செய்ய மேற்புற அறைக்கு மேலுள்ள ப்யூரிடாஸ் முத்திரையைப் பார்த்து வாங்குங்கள். ப்யூரிடாஸ் பெயரும் பதிவு எண் 196501ம் அடிப்புற உலோகத்தின் மீது இருப்பதையும் கவனியுங்கள்.



ப்யூரிடாஸ் இலேசானது. உடையவே உடையாது. தூக்கிச் செல்ல வாகானது. துப்புரவாக்க இலகுவானது.



பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு நவீனமான வசதிகள்

BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
43, ... 400 001

CHAITRA BLS19 TAM Rev.

அண்ணலுக்கு அஞ்சலி! வள்ளலாருக்கு விழா!





இடமிருந்து வலமாக:
நா. மகாலிங்கம், துரைமுருகன்,
ம. பொ. சி. இந்திரா பிரசாத்.

திருவருட் பிரகாச வள்ளலாரையும், காந்தி ஜயந்தியையும் இணைத்து எட்டு நாள் பெரும் விழா ஆண்டுதோறும் நடத்துகிற பெருமை பொள்ளாச்சி தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்களுக்கே உரியது. காந்திமகான் பிறந்த தினத்தில் நடந்த காலை நேர விழாவில் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள், காந்திமகானும் வள்ளலாரும் அதிகம் படித்தவர்கள் அல்ல; ஆனால் கற்றதை அறக் கற்றவர்கள்; கசடறக் கற்றவர்கள்; அவ்வாறு கற்றபின் அதற்குத் தக்கபடி நடந்து காட்டியவர்கள் என்றார். இதை உபமானங்களுடன் விளக்கினார். ஒரு நாடகத்தைப் பார்த்து விட்டு அதன் மூலம் பொய்யாமை விரதம் மேற்கொண்டவர் யாரையேனும் இதுவரையில் கண்டிருக்கிறீர்களா? அப்படிப்பட்ட ஒரே ஒரு மனிதர் காந்தி மகான்தான்.

அதேபோல, தன்னுயிரைப் போலவே பிற உயிர்களையும் நினைப்பவர் யாரையேனும் கண்டதுண்டா? வள்ளலார் ஒருவர்தான் அவ்வாறு வாழ்ந்தவர்; பிற மனிதர்களிடமும் ஏனைய உயிர்களிடமும் மாத்திரம் அல்ல, புல், பூண்டு, செடி கொடிகளிடமும் மட்டற்ற அன்பு காட்டியவர் வள்ளலார். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய"வர் அவர்; "பசியினால் இளைத்தே வீடுதோறிரந்தும் பசியறாது அயர்ந்த வெற்றரைக் கண்டு உள்ளம் துடித்தவர்" என்று திருவருட்பிரகாச ராமலிங்கப் பெருமானைப் பற்றிப் பேசினார்.

அன்று காலையின் கடைசிப் பேச்சாகப் பொள்ளாச்சி மகாலிங்கம் காந்தியப் பொருளாதாரம் பற்றி அரியதொரு சொற்பொழிவாற்றினார்..... கிராமத்திலிருந்துதான் பொருளாதார அபிவிருத்தியைத் தொடங்க வேண்டும். நகரத்தில் பொருளாதாரம் அபிவிருத்தி அடைவதனால் எவ்விதப் பயனும் இல்லை. கிராமப்புறத்துக் கைத் தொழில் செய்பவர்கள் வேலையின்றித் தவிக்கிறார்கள். அதே நகரத்தில் இருக்கும் கைவேலை செய்பவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் வேலையும் கிடைக்கிறது; கூலியும் கிடைக்கிறது. இந்த நிலை கிராமங்களிலும் ஏற்பட வேண்டும். நம் பாரத நாட்டில், ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஏழு லட்சம் கிராமப்புற மக்களையும் புறக்கணித்துவிட்டு நாம் நகரங்களின் சுபிட்சத்தை வளர்க்க முற்படுகிறோம். விளக்கமாகச் சொல்லப் போனால், கிராமத்து மக்களைச் சுரண்டித்தான் நகர்ப்புறத்து மக்கள் வாழ்கிறார்கள். இந்த நிலை மாறினாலன்றி நம் நாட்டில் பொருளாதார அபிவிருத்தியைக் காண முடியாது. பொருளாதார சுபிட்சம் ஏற்படுவதுதான் உண்மையான சுதந்திரத்தின் பயனாகும் என்று மிகவும் தெளிவாக விளக்கினார்.

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி எஸ். கிருஷ்ணசாமி ரெட்டியார் ஒரு நாள் மாலை தலைமை வகித்துக் கூட்டத்தை நடத்தினார்.

காந்தி அடிகளின் அஹிம்சை, வள்ளலாரின் ஜீவகாருண்யம் இரண்டையும் ஒப்பிட்டு, இரண்டு கண்களும் பார்வையின்போது ஒன்றுயிருக்கின்றன என்று விளக்கினார். பசிப் பிணியின் கொடுமையைப் பற்றிக் குறிப்பிடும்போது சுவாமி விவேகாநந்தரின் வாழ்

வில், அவரது பூர்வாசிரமத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார்.

சுவாமி விவேகானந்தர் கல்கத்தாவில் பட்டப் படிப்பை முடித்து வேலையில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த போது தம் தம்பி, தங்கைகளுக்கு உணவு அளித்துவிட்டுத் தாம் பல நாட்களுக்குப் பட்டினி இருந்திருக்கிறார். அப்படிக் கடும் பசியோடு அவர் அவதிப்பட்டுக் கொண்டிருந்த போது ஒரு நாள் பிற்பகல் வீட்டைவிட்டு வெளி வந்து பசித் துயரை மறக்க நந்தவனத்துக்குப் போனார். அங்கு அவருக்குத் தெரிந்த பணக்கார இளைஞன் நன்றாய்ச் சாப்பிட்டுவிட்டு குஷியாக ஒரு மரத்தடியில் அமர்ந்து கடவுளை துதித்துப் பாடிக் கொண்டிருந்தான்.

இதைக் கண்ட விவேகானந்தர், பசித் துயரையும் சற்று மறந்து கடும் கோபம் கொண்டார். உடனே அந்த இளைஞனின் கன்னத்தில் பளீரென்று அறைந்து, "கடவுள் இத்தனை ஜீவராசிகளையும் படைத்துப் பசியையும் ஏன் படைத்தான்? அதைப் பற்றிப் பாடு! நான் பசியின் கொடுமையை உணர்ந்தவன். என் எதிரில் வெறுமனே கடவுளைத் தோத்திரம் பண்ணிப் பாடாதே" என்றார். ஆக பசிக்கொடுமை இறையுணர்ச்சியைக் கூட மழுங்கச் செய்துவிடும் என்பதை உணர்ந்துதான் வள்ளலார் பசிப் பிணியை நீக்குவதையே தமது முழு நேரத் தொண்டாகக் கொண்டிருந்தார் என்பதை நீதிபதி அழகாக விவரித்தார்.

எட்டு நாள் விழாவில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அனைத்தையும் இங்கு கவனிப்பது சாத்தியமல்ல. திரு கிரிதாரிப் பிரசாத் பசிப் பிணி தீர்த்தவர், மருத்துவர், ஞானி, தத்துவ மேதை, அரசியல் வித்தகர் என்று பல கோணங்களில் வள்ளலாரைக் கண்டு அரிய கருத்துரைகளை வழங்கினார். திருஅருட்பாவிலிருந்து கடல் மடைதிறந்தாற்போல் பலப் பல பாக்களை ஒரே மூச்சில் பாடித் தீர்த்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுச் சமய இலக்கியங்களில் மூழ்கித் திளைத்திருக்கும் திரு கிரிதாரி பிரசாத் அவர்களை வள்ளலார் கோட்பாடுகளை விளக்க மேல்நாடுகளுக்கும் அனுப்பவிருக்கின்றார் இராமலிங்கர் பணி மன்றத் தலைவர் திரு மகாலிங்கம் என்பது இவ்விழாவின் போது தெரியவந்த செய்தி.


மேல்நாடுகளில் நிகழ்த்தப் போகிற உரைகளை முன்கூட்டியே திட்டமிட்டு ஒரு கட்டுக் கோப்பில் அடக்கிக் கொள்வார் திரு கிரிதாரி பிரசாத் என நம்புகிறோம். தமிழகத்து மக்களைக் கவர்வதற்கும் மேல்நாட்டினரை வசப்படுத்துவதற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. அவையோரின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல நேரம் ஒதுக்கிக் கொள்ளவும் வேண்டும்.


ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற வள்ளலார், மகாத்மா காந்தி விழாவில் தமிழ் இதழ்கள் கண்காட்சியும் உண்டு. 2000 ஏடுகளுக்கு மேல் காட்சி தந்தன. நின்றுபோன பத்திரிகைகளும், இதுவரை கேள்விப்படாத பல பத்திரிகைகளும்கூட இடம் பெற்றிருந்தன. இந்தக் கண்காட்சி மிகப் பயனுள்ளது என்பதற்கு அங்கே ஒரு ஸ்டூலைப் போட்டுக் கொண்டு அமர்ந்து அவ்வை திரு நடராஜன் சில ஏடுகளிலிருந்து குறிப்புக்கள் எடுத்துக் கொண்டிருந்ததே சான்று.

திரு பட்டாபிராமன் தயாரிப்பான இந்தத் தமிழ்ப் பத்திரிகைக் கண்காட்சியில் நம் கவனத்தைக் கவர்ந்த இரு தகவல் துணுக்குகள்:

உலகில் முதல் நாளிதழ் கி. பி. ஆறும் நூற்றாண்டில் சீனத் தலைநகரான பீகிங்கில் வெளியான 'டினிப்பவோ' என்ற அரசவைச் செய்தித் தாள். எழுத்துக்களைச் செதுக்கி 'பிளாக்' செய்து வெளியிட்டனர்.

1975ம் வருஷம் ஜூன் முடிய உலகில் உள்ள பத்திரிகைகள் 77,43,000. இந்தியாவில் 20,100 பத்திரிகைகள்; தமிழ் நாட்டில் 1100 பத்திரிகைகள். —ஸோமாஸ்; பி.எஸ்.எம்.





"சென்னையில் சங்கீத வாத்தியங்களுக்கான அபிவிருத்தி கேந்திரம் இருப்பதே பலருக்குத் தெரியுமோ, தெரியாதோ?" என்றார் டைரக்டர் மிஸ்ரா. "ஆமாம்! இந்தக் கேந்திரம் ரொம்பவும் அபூர்வம்! அதனால்தான் அதன் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது பிரும்மப் பிரயத்தனமாயிருந்தது!" என்றார் தேடி அலுத்துக் கடைசியில் ஒரு வழியாகக் கண்டு பிடித்து வந்து சேர்ந்த பத்திரிகைப் பிரதிநிதி. 1956ம் வருஷமே தொடங்கப்பட்டுள்ள இந்தச் சங்கீத வாத்தியங்கள் அபிவிருத்திக் கேந்திரம் சங்கீத வாத்தியங்களைத் தயாரித்து அளிப்பதோடு, சங்கீத வாத்தியங்களைக் குறைந்த செலவில் தயாரிக்கும் ஆராய்ச்சிகளையும் செய்து வருகிறது! சில வருஷங்கள் தொழிற் பயிற்சி முகாமும் நடத்தியது. பீரோக்களில் பலவித மாதிரிகள் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன: தேர்ச்சி பெற்ற வித்வான்களின் கரங்கள் துடிக்கும்!


இளமை
எழிலிற்கும்
இனிய தீபாவளி
நினைவிற்கும்
லக்ஷ்மணஸா
பட்டுப் புடவைகள்
PBL
RAE/910
அபூர்வராகம்
அதிசயராகம்
ஆனந்தராகம்
கலர்கள்
நவரத்ன
டிஸைன்
P.B. லக்ஷ்மணஸா
& பிரதர்ஸ்
(ஏர்கண்டிஷண்ட்)
பனகல் பார்க், தி.நகர்,
சென்னை-17.
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.
தயாரிப்பு நிலையம்:
15, மேட்டுத் தெரு, காஞ்சிபுரம்.

குழந்தைச் செல்வங்கள் எப்பொழுதும் முன்னணியில் நின்றிட அதிக சக்தியின் தேவையை நிறைவு செய்யுங்கள்

கொலம்பஸின் மறுபிறவி:- சாகசச் செயல்கள் செய்யும் இவன் புதிய வழி கண்டு பிடிப்பான் நிச்சயம் — பள்ளியிலிருந்து வீடு திரும்ப இது அவனால் எப்படி முடிகிறது என்று வியக்கிறீர்கள்.



படு சுட்டிப்பெண்:- வீட்டுப் பாடமோ அல்லது வகுப்பிலோ — அவள் விடை எப்பொழுதும் சரிதான். வீட்டிலும் வரவு செலவு கணக்கில் அப்பாவிற்கு உதவி செய்கிறாள்.



நீங்களும் உங்கள் குழந்தைக்கு நாள்தோறும் போர்ன்விடா கொடுங்கள்

உங்கள் குழந்தை முன்னணியில் நின்றிட அதிக சக்தியின் தேவையை பூர்த்தி செய்ய வல்லது மால்ட், பால் சர்க்கரை, கோகோ அடங்கியுள்ள போர்ன்விடா [illegible] ஊட்டத்திற்கு அதி தேவையான புரதம், கார்போஹைட்ரேட்கள், கலோரிகள் அடங்கியுள்ளது. அதனாலேயே உங்கள் குழந்தைக்கும் பிரதி தினமும் போர்ன்விடா கொடுங்கள் — இரண்டு வேளைகளிலும். உங்களுக்கும் அது உகந்தது. போர்ன்விடா குடும்பத்தில் எல்லோரும் விரும்பும் ஒரு பானம்.

காட்பரிஸ்

போர்ன்விடா

சக்திக்கும் வலிமைக்கும் மற்றும் தீஞ்சுவைக்கும்



OBM-4033R TM

சிவகாமியின் சபதம்

முப்பத்தேழாம் அத்தியாயம்

சத்ருக்னன் பீதி

சக்கரவர்த்தியிடம் சேனாபதி கூறிய வண்ணமே அன்று சூரியன் அஸ்தமித்த ஒரு முகூர்த்த நேரத்துக்கெல்லாம் யுத்த பேரிகை முழங்கியது. வாதாபிக் கோட்டையைச் சுற்றி நாற்புறமும் சூழ்ந்திருந்த பல்லவ வீரரின் மகா சைனியம் இடம் பெயர்ந்து கோட்டை மதிலை நோக்கி முன்னேறத் தொடங்கியது. காற்றில் அசைந்தாடும் கொடிகளாகிய அலைகளோடு கூடிய அந்தச் சேனா சமுத்திரமானது வாதாபிக் கோட்டையை மூழ்க அடிக்கும் நோக்கத்துடன் பொங்கி முன்னேறுவது போலக் காணப்பட்டது.

பல்லவ சைனியத்தின் யானைப் படை நாலு கோட்டை வாசல்களையும் நோக்கிச் சென்ற காட்சி கருங் குன்றுகள் இடம் பெயர்ந்து செல்லும் காட்சியை ஒத்திருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்துக்காகவே வெகு நாட்களாகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த பிரம்மாண்டமான யானைகள் துதிக்கைகளில் இரும்பு உலக்கைகளையும் வைரம் பாய்ந்த மரத் தூண்களையும் தூக்கிக் கொண்டு அசைந்து

அமரர் கல்கி

அசைந்து சென்றபோது பூமி அதிர்ந்தது. புழுதிப் படலங்கள் கிளம்பி வானத்தை மறைத்தன.

ஓர் இலட்சம் வீரர்களும், பத்தாயிரம் யானைகளும் சேர்ந்தாற்போல் இடம் பெயர்ந்து சென்றதனால் ஏற்பட்ட ஓசை, சண்டமாருதம் அடிக்கும்போது மகா சமுத்திரத்தில் உண்டாகும் பெருங் கோஷத்தை ஒத்திருந்தது.

சற்று நேரம் வரையில் அவ்வளவு சைனியமும் இருட்டிலேயே இடம் பெயர்ந்து சென்றது. திடீரென்று இங்கொன்று அங்கொன்றுமாகத் தீவர்த்திகளும் தீப்பந்தங்களும் தோன்றலாயின. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவை பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம் என்ற கணக்கில் எரியத் தொடங்கின. அந்தத் தீவர்த்திகளிலும் தீப்பந்தங்களிலும் எழுந்த புகை நாற்புறமும் பரவிச் சூழ்ந்து ஒரு பயங்கரமான மாயாலோகக் காட்சியை அளித்தது.



சேனாதிபதி பரஞ்சோதி தமது கூடாரத்துக்கு வெளியில் நாற்புறமும் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் அமைதியின்றி அங்குமிங்கும் நடந்ததையும், கத்தியினால் பூமியைக் கீறிக் கோலம் போட்டதையும் பார்த்தால் அவர் யாரையோ எதையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. அப்போது சடையனும் இன்னும் நாலு பேரும் வாதாபிக் கோட்டை வாசலிலிருந்த கணபதியைத் தூக்கிக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். விக்கிரகத்தைக் கூடாரத்துக்குள் கொண்டு போய் வைக்கும்படி பரஞ்சோதி கட்டளை இட்டார். அவர்கள் பின்னால் பரஞ்சோதியும் உள்ளே சென்று சடையனைப் பார்த்து, ''அப்பனே! நீயும் உன்னுடைய ஆட்களும் இங்கேயே இருந்து இந்தக் கணபதிராயனைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேணும். என்னுடைய மனோரதம் நிறைவேறினால், சிவகாமி தேவிக்கு எவ்வித தீங்கும் நேரிடாமல் வாதாபிக் கோட்டைக்குள்ளேயிருந்து பத்திரமாகக் கொண்டு சேர்த்தேனேயானால், இந்த விநாயகப் பெருமானை என் கிராமத்துக்குக் கொண்டு போய்க் கோவில் கட்டி வைத்துத் தினம் மூன்று வேளை பூஜை செய்விப்பதாக வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறேன்!'' என்றார்.


மீண்டும் அவர், ''சடையப்பா! இங்கே இருந்து நீங்கள் இந்த விக்கிரகத்தைக் காத்துக் கொண்டிருப்பதனால் வாதாபிக் கொள்ளையில் உங்களுக்குப் பங்கு இல்லாமல் போய்விடும். அதற்கு நான் ஈடு செய்து கொடுக்கிறேன்!'' என்றார்.

''சுவாமி! ஆக்ஞை எப்படியோ அப்படியே நடந்து கொள்ளுகிறோம்!'' என்றான் சடையப்பன்.

சேனாதிபதி பரஞ்சோதி பின்னர் கணபதியின் விக்கிரகத்தை நோக்கிக் கைகூப்பிக் கொண்டு கண்களை மூடிய வண்ணம் சிறிது நேரம் பிரார்த்தனை செய்தார்.

அதே சமயத்தில் வெளியில் யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது. அடுத்த கணம் சத்ருக்னன் தலைவிரி கோலமாய் உள்ளே ஓடி வந்தான். அவனுடைய முகம் பேயடித்தவன் முகம் போல் இருந்தது.

பரஞ்சோதி அவனைத் திரும்பிப் பார்த்து, ''சத்ருக்னா! இது என்ன கோலம்? ஏன் இப்படிப் பீதி கொண்டவனைப் போல் இருக்கிறாய்? ' ஏதாவது பெரிய ஆபத்து



நேர்ந்ததா? போன காரியத்தில் வெற்றி கிடைக்கவில்லையா?'' என்று கேட்டார்.

''சேனாதிபதி! என் வாழ்க்கையில் எத்தனையோ பயங்கரமான ஆபத்துக்களில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். ஆனால், நேற்றும் இன்றும் எனக்கு ஏற்பட்ட ஆபத்தைப் போல் இதுவரையில் ஏற்பட்டதில்லை'' என்று சொல்லிவிட்டுப் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்தான்.

அந்தக் குறிப்பை உடனே உணர்ந்து சேனாதிபதி அவர்களை வெளியில் போகச் சொன்னார். அவர்கள் போனவுடனே சத்ருக்னனைப் பார்த்து. ''சத்ருக்னா! கோட்டையைத் தாக்க ஆரம்பித்தாகி விட்டது. சிறிதும் தாமதிக்க நேரமில்லை. உன்னுடைய கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடி! போன காரியத்தில் வெற்றி அடைந்தாயா, இல்லையா?...அதை முதலில் சொல்!'' என்றார்.

''சேனாதிபதி! கோட்டைக்குள் போக இரகசியச் சுரங்க வழி இருக்கிறது. அது இருக்கும் இடத்தையும் கண்டு பிடித்துவிட்டேன். ஆனால், அதன் வழியாகக் கோட்டைக்குள் போவது சுலபமான காரியமில்லை. கோட்டைத் தாக்குதலோ ஆரம்பமாகி விட்டது, இனி சுரங்க வழியில் போய்த்தான் என்ன பிரயோஜனம்? எல்லாவற்றுக்கும் தங்களிடம் யோசனை கேட்டுக் கொண்டு போக வந்தேன்!'' என்று சொல்லிப் பிறகு தான் வந்த வரலாற்றைக் கூறினான்.

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

பயங்கரக் குகை

சேனாதிபதி பரஞ்சோதியிடம் ஒற்றர் தலைவன் சத்ருக்னன் என்றுமில்லாத பதைபதைப்போடு கூறிய வரலாறு வருமாறு:

சேனாதிபதியும், சக்கரவர்த்தியும் கட்டளையிட்டபடி சத்ருக்னனும் குண்டோதரனும் நகரத்துக்குள் போவதற்கு இரகசியச் சுரங்கவழி இருக்கிறதா என்று கோட்டையைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் தேட ஆரம்பித்தார்கள். காபாலிகர்களின் பலி பீடத்துக்கு அருகில் உள்ள மேடும் பள்ளமுமான பாறைகளிலே தான் சுரங்க வழி இருந்தால் இருக்க வேணுமென்று அந்தப் பாறைகளிலே யெல்லாம் நுணுக்கமாகத் தேடிக் கொண்டிருந்தார்கள். அப்படித் தேடி வரும்போது ஒருநாள் இரவில் ஏதோ தீ எரிவதைப் பார்த்து அதன் அருகே சென்றார்கள். தீயின் அருகில் ஒரு மனிதனும் ஒரு ஸ்திரீயும் காணப்பட்டனர். அந்த மனிதன் நாகநந்தி பிக்ஷு என்று தெரிந்தது. ஸ்திரீயோ பயங்கரத் தோற்றம் கொண்ட காபாலிகை. அவர்களுடைய சம்பாஷணையை மறைந்திருந்து ஒற்றுக் கேட்டதில் விளக்கமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால், புலிகேசி, சிவகாமி என்ற பெயர்கள் அடிக்கடி கேட்டன. காபாலிகையைத் தமக்காக ஏதோ ஒத்தாசை செய்யும்படி நாகநந்தி கேட்டுக் கொண்டிருந்ததாக மட்டும் தெரிந்தது. பொழுது விடியும் சமயத்தில் பிக்ஷுவும் காபாலிகையும் ஒரு குகையை மூடியிருந்த பாறையை உருட்டித் தள்ளிவிட்டுக் குகைக்குள்ளே போனார்கள். அவர்கள் உள்ளே போனதும் குகைத் துவாரம் மறுபடியும் மூடப்பட்டது.

சத்ருக்னனும் குண்டோதரனும் வெகு நேரம் காத்திருந்து பார்த்த பிறகு அந்தப் பாறையைத் தாங்களும் பெயர்த்துத் தள்ளிவிட்டுக் குகைக்குள்ளே போகலாம் என்று எண்ணினார்கள். அதே சமயத்தில் உட்புறமிருந்து பாறை அசைக்கப்பட்டதைக் கண்டு நல்ல வேளையாக ஓடி ஒளிந்து கொண்டார்கள்.







காபாலிகை மட்டும் வெளியில் வந்தாள். அவள் குகை வாசலைவிட்டு அப்பால் போகும் சமயத்தில் குகைக்குள்ளே போய்ப் பார்க்கலாம் என்று காத்திருந்தார்கள். பகலெல்லாம் அவள் குகைத் துவாரத்தைவிட்டு அசையவில்லை. சாயங்கால வேளையில் அவள் கொஞ்சம் அப்பால்போன சமயம் குண்டோதரனை வெளியில் நிறுத்திவிட்டுச் சத்ருக்னன் மட்டும் குகைக்குள் நுழைந்தான். அப்பா! அந்தக் குகையின் பயங்கரத்தை நினைத்தால் இனிமேல் வாழ்நாள் முழுதும் இரவில் தூக்கமே வராது. அப்படி மனிதரின் மண்டை ஓடுகளும் எலும்புகளும் அங்கே குவிந்து கிடந்தன. நாற்றமோ சகிக்க முடியவில்லை. குகைக்குள்ளே ஒரே இருட்டாக இருந்தபடியால் அதற்குள் சுரங்க வழி இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. திடீரென்று கொஞ்சம் தெரிந்த வெளிச்சமும் மறைந்துவிட்டது. சத்ருக்னன் தான் நுழைந்து வந்த துவாரம் எங்கே என்று பார்த்தான். துவாரம் இருந்த இடம் தெரியவில்லை. காபாலிகை வெளியில் இருந்தபடியே குகைத் துவாரத்தை அடைத்து விட்டாள் என்று ஊகித்ததும் அவன் அடைந்த திகிலைச் சொல்லி முடியாது. கபாலங்களும் எலும்புகளும் கும்மிருட்டும் துர்நாற்றமும் நிறைந்த அந்தப் பயங்கரக் குகைக்குள்ளே அவன் எத்தனை நேரம் கழித்தானோ, தெரியாது. எவ்வளவோ முயற்சி செய்தும் துவாரம் இருந்த இடத்தையே அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நாலு யுகங்கள் என்று தோன்றிய காலம் அவன் அந்த இருண்ட குகைக்குள்ளே அங்குமிங்கும் பயனின்றி அலைந்து உழன்ற பிறகு திடீரென்று சிறிது வெளிச்சம் ஒரு பக்கத்தில் காணப்பட்டது. குகையின் துவாரம் திறந்தது. காபாலிகை உடனே உள்ளே நுழைந்தாள். அவள் கையில் ஒரு மனிதக் கபாலமும் எலும்புகளும் கொண்டு வந்தாள். சத்ருக்னன் குகையின் ஒரு கோடியில் சென்று பாறைச் சுவரோடு ஒட்டிக் கொண்டு நின்றான். காபாலிகை கையில் கொண்டு வந்த கபாலத்தையும் எலும்புகளையும் ஓரிடத்தில் தனியாகப் பத்திரப்படுத்தி வைத்த பிறகு குகையின் மத்தியில் தரையில் உட்கார்ந்து ஒரு பெரிய பாறுங்கல்லைப் பெயர்த்தான். பெயர்த்த இடத்தில் அவள் இறங்கியபோது, அது தான் சுரங்க வழியாயிருக்க வேண்டும் என்று சத்ருக்னன் ஊகித்துக் கொண்டான். இத்தனை நேரம் அந்தப் பயங்கரக் குகையில் ஆகாரம் தண்ணீர் இன்றிக் காத்திருந்தது வீண் போகவில்லை என்று எண்ணிச் சந்தோஷப்பட்டான். சுரங்கத்தில் இறங்கிய காபாலிகை தன் மனத்தை மாற்றிக் கொண்டாள் என்று தோன்றியது. மறுபடியும் மேலே ஏறினாள். திறந்த சுரங்கவாயை மறுபடியும் மூடிவிட்டு அதன் மேல் படுத்துத் தனக்குத் தானே பேசிக் கொண்டிருந்தாள். அவளுடைய பேச்சிலிருந்து சில முக்கிய விஷயங்கள் தெரிய வந்தன. அவள் நாகநந்தி என்கிற புத்த பிக்ஷுவைக் காதலித்தாள் என்றும், அதன் காரணமாகச் சிவகாமியைத் துவேஷித்தாள் என்றும், புலிகேசி இறந்துவிட்டான் என்றும், அவனுடைய எலும்பையும் கபாலத்தையும் அவள் சற்று முன் குகைக்குள் கொண்டு வந்தாள் என்றும், நாகநந்தி பிக்ஷு புலிகேசியைப் போல் வேஷம் போட்டு நடித்து வாதாபிச் சக்கரவர்த்தியாகி, சிவகாமியைச் சக்கரவர்த்தினியாக்க விரும்புகிறார் என்றும் அதைத் தடுக்க இந்தக் காபாலிகை கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாள் என்றும் தெரிந்தது. வெகுநேரம் இப்படி அவள் தனக்குத் தானே பிதற்றிக் கொண்டிருந்த பிறகு மௌனமானாள். அவள் தூங்குகிறாள் என்று எண்ணிய சத்ருக்னன் அந்தச் சமயத்தில் தப்பி வெளியேறத் தீர்மானித்தான். திறந்திருந்த குகைத் துவாரத்தை நோக்கி மெள்ள மெள்ள அடி வைத்து நடந்தான். துவாரத்துக்கருகில் வந்ததும் விரைவாக அதில் நுழைந்து வெளியில் குதித்தான். குதித்த அதே சமயத்தில் அவனுடைய ஒரு கையைக் குகைக்குள்ளிருந்து யாரோ பற்றினார்கள். சத்ருக்னன் திடுக்கிட்டுப் பார்த்தான். காபாலிகை குகையின் உட்புறத்தில் நின்றபடி அவனுடைய ஒரு கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பயங்கர



குதூகல விழாக் காலங்களின்
இனிய தொடக்கத்தில்
கண்கவர் சாந்தி சில்க் அளிக்கும்
கவினுறு புதிய வண்ணப் படைப்புகள்!
உயர்ந்த ரகப் பட்டுச்சேலைகள்
மற்றும் கைத்தறி மில் துணிகள்
RAJATHI
மயிலாப்பூர்
சாந்தி சில்க்
எம்போரியம்
5, சன்னதி தெரு, மயிலாப்பூர்,
சென்னை-4 போன்: 74403
103, தாணுத் தெரு, புரசைவாக்கம்,
சென்னை-7 போன்: 664215
SHANTHI SILK EMPORIUM
கலை நயமுடையது
விலை நியாயமானது
நீடித்து உழைப்பது
நிறைவு தருவது
"சாந்தி"
பட்டுச் சேலைகள்
ஞாயிறு கடை உண்டு. இலவச பிகே போனஸ் கூப்பன்கள் வழங்குகிறோம்.

OSR

மர்க் கூறுமினுள். சத்ருக்னனுடைய சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. 'செத்தோம்' என்று எண்ணிக் கொண்டான். ஆயினும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக் கடைசி முயற்சியாகக் கையைத் திமிறினன். எனினும், காபாலிகையின் இரும்புப் பிடியிலிருந்து அவனல் விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

காபாலிகை அப்போது, ''லம்போதரா ! லம்போதரா !'' என்று கூவினள். ''இதோ வந்து விட்டேன், தாயே !'' என்று குண்டோதரன் பக்கத்துப் பாறை மறைவிலிருந்து ஓடி வந்ததைப் பார்த்ததும் சத்ருக்னனுக்கு வியப்பினல் வாய் அடைத்துப் போயிற்று. சத்ருக்னனைப் பார்த்துக் குண்டோதரன் கண்களினல் சமிக்ஞை செய்து கொண்டே அவன் அருகில் ஓடி வந்தான். குகையின் உள்ளே நின்ற காபாலிகை, ''லம்போதரா! இந்தத் திருட்டு ஒற்றனைச் சற்றே பிடித்துக் கொள். கத்தியை எடுத்துக் கொண்டு வருகிறேன். விட்டுவிடமாட்டாயே?'' என்ருள். ''ஒருநாளும் விடமாட்டேன், அம்மா ! இவனை முதல் பலி நானே கொடுக்கப் போகிறேன் !'' என்று சொல்லிச் சத்ருக்னனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான், குண்டோதரன். காபாலிகை உள்ளே சென்ருள் உடனே குண்டோதரன் சத்ருக்னனுக்குச் சமிக்ஞை காட்டிப் பிடியையும் தளர்த்த, சத்ருக்னன் தன்னை விடுவித்துக் கொண்டு ஓடினன். குண்டோதரன் பெருங் கூச்சல் போட்ட வண்ணம் அவனைத் துரத்திக்கொண்டு ஓடினன். கொஞ்ச தூரத்தில் ஒரு பாறை மறைவுக்கு வந்ததும் குண்டோதரன் நின்று, ''சுவாமி! உங்களுடைய கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்வதற்காக இந்தக் காபாலிகையின் சிஷ்யப் பிள்ளை ஆனேன். என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் இங்கிருந்து இவளைச் சமாளித்துக் கொள்கிறேன். நீங்கள் சீக்கிரம் போங்கள். கோட்டைத் தாக்குதல் ஆரம்பம் ஆகிவிட்டதாகத் தோன்றுகிறது !'' என்ருன்.

''குகைக்குள்ளே சுரங்க வழி இருக்கிறது, குண்டோதரா ! நான் போய்ச் சேனுதிபதியிடம் சொல்லி ஆட்களுடன் வந்து சேருகிறேன். அது



வரை நீ இந்த ராட்சஸியை எப்படியாவது சமாளித்துக் கொண்டிரு. அவளைச் சுரங்க வழியில் போகவிடாதே!'' என்று சத்ருக்னன் சொல்லி விட்டு ஓட்ட ஓட்டமாகச் சேனுதிபதியைத் தேடி ஓடி வந்தான். பிறகு குண்டோதரனுடைய கதி என்ன ஆயிற்று என்று சத்ருக்னனுக்குத் தெரியாது.

மேற்கூறிய வியப்பும் பயங்கரமும் நிறைந்த வரலாற்றைக் கேட்டதும், சேனுதிபதி பரஞ்சோதி, ''சத்ருக்னு! ரொம்பவும் அவசரமான சமயத்தில் இப்படிப்பட்ட முக்கிய செய்தியைக் கொண்டு வந்திருக்கிருய். நன்ருய் யோசிப்பதற்குக்கூட நேரம் இல்லை. கோட்டைத் தாக்குதலோ ஆரம்பமாகி விட்டது. நாளைப் பொழுது விடிவதற்குள் கோட்டைக்குள் பிரவேசித்துவிடுவோம். எல்லாவற்றுக்கும் நீ நூறு வீரர்களுடன் அந்தக் காபாலிகையின் குகை வாசலுக்குப் போ! சுரங்க வழி மூலமாக யாரும் வெளியில் தப்பித்துக் கொண்டு போகாமல் பார்த்துக்கொள். முடிந்தால் நீயும் குண்டோதரனும் சுரங்க வழியாகக் கோட்டைக்குள்ளே வந்து சேருங்கள். கோட்டை வாசல் திறந்ததும் நான் நேரே சிவகாமி தேவியின் வீட்டுக்குச் செல்கிறேன். கணேசரின் கருணை இருந்தால் சிவகாமி தேவியைக் காப்பாற்றி ஆயனரிடம் ஒப்புவிக்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்'' என்று கவலையோடு கூறினர்.

(தொடரும்)

தவளைகளுக்காகத் தனிப் பிரார்த்தனை !



டோக்கியோவில் ஆண்டுதோறும் புத்தர் கோவில்களில் 'மௌன' பௌத்த பிட்சுக்கள் ஒரு தனியான பிரார்த்தனை செய்கிறார்கள். இது உலகமெங்கும் மருத்துவப் பரிசோதனையின் பொருட்டுக் கொல்லப்படும் தவளைகளுக்காகவே ஆகும். —ரமா ராம்நாத்

உன் மனம் நான் அறிவேன்..

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

"இந்தப் புடவை எனக்கு எப்படி இருக்கிறது? நீயேதான் பார்த்துச் சொல்லேன்" என்று புடவையின் முழு உயரத்தையும் தன் மீது படிய வைத்துக் கொண்டு கேட்டாள் அந்த நடு வயதினளான மாது. அவள் கண்கள் பிறர் பார்க்காமல் இருக்க அவசரமாய்ச் சுழன்றது. குரல் கெஞ்சிற்று.

"நன்றாக இருக்கிறது அம்மா. அதுவும் உங்கள் உயரத்துக்கும் உருவத்துக்கும் சரியான பொருத்தமாக இருக்கும்!" என்றாள் சாரதா, தன் குரலில் தொனித்த பொய்ம்மையை அடக்கிக் கொண்டு. அவளுடைய வேலை விற்பனை செய்வது; உண்மையை விளக்குவது அல்ல.

"நானும் அப்படித்தான் நினைத்தேன்" என்று முகத்தில் முழுத் திருப்தி ஒளிவிட அதை எடுத்து வைத்துக் கொண்டு, கண்ணாடிக் கதவுக்கு வெளியே காத்திருந்த கணவனிடம் காட்டக் கொண்டு போனாள் அவள். வழுவழுப்பான மேடையின் மீது விரித்துப் போட்டிருந்த மற்றப் புடவைகளை ஒவ்வொன்றாக, இதழ்களில் பூத்த புன்னகை வாடாமல், எடுத்து அடுக்கி வைக்கத் தொடங்கினாள் சாரதா.

அதைவிட மலிவான எத்தனையோ புடவைகளை அவள் காட்டியும், அந்த அம்மாள் எடுத்துக் கொள்ளவில்லை. முக மெருகிலும் அணிந்த நகைகளிலும் தெரிந்த அந்தஸ்தின் முத்திரை. அவள் எதை எடுத்துக் கொண்டு வந்தாலும் பணம் கொடுக்கத் தயாராக இருந்த கணவன் வெளியே காத்து நின்று காரிலிருந்து எட்டிப் பார்த்த வெண்ணிற நாய்க்குட்டி.

பில் போட்டுப் பணத்தை வாங்கிக் கொடுத்துவிட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள் சாரு. மார்பில் ஒரு பெருமூச்சு அலை பூரித்து அடங்கிற்று. வாழ்க்கையில் வசதி, சௌக்கியம் எல்லாம் இளமைப் பருவத்தில் உழைப்பும் தியாகமும் நிறைய வேண்டும். சுகத்தை அனுபவிக்கும் நிலையை அடைவதற்குள் இளமைப் பருவம் நீழலாக ஓடி விடும். அந்தத் தம்பதியரும் அப்படித்தானோ என்னவோ?

அவர்கள் எப்படி இருந்தாலும், அவளைப் பொறுத்தவரையில் அதுதான் உண்மை. ஒரு மாதத்துக்குமுன் அவளும் ரவியுமாக மகாபலிபுரம் போன போது, பாறை ஒன்றில் இருவருமாக உட்கார்ந்து எதிர்காலத் திட்டங்களை ஒவ்வொன்றாக, கற்பனையில் எடுத்துக் கட்டடம் கட்டியது நினைவுக்கு வருகிறது.

சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு ரவி அவள் மடி மீது தலையை வைத்துக் கொண்டு படுத்துவிட்டான். செல்லம் கனியும் குரல். "போதும் சாரு! எனக்கு வேறு எதுவுமே வேண்டாம். நீ மட்டும் என்னோடு எப்போதும் இருந்தால் போதும்."

அவள் கைகள் அவனைச் சுற்றி இறுகின. அவன் நினைவோட்டத்தையே பிரதிபலிப்பது போல, அவளுடைய கண்களில் அரும்பொளி மின்னிற்று.

பட்டப் படிப்புக்குப் பிறகு, வேறு எவ்வளவோ வேலைகள் அவளுக்குக் காத்திருந்தன. அவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டு இந்த வேலைக்கு வந்து சேர்ந்தாள் சாரு. கண்ணுக்குப் பிடித்த எத்தனையோ புடவைகளைப் பார்த்தும் தொட்டும் உணரும் அனுபவம். மனம் குளிர எத்தனையோ விதமான பெண்களை, எத்தனையோ இளம் தம்பதியரைச் சந்திக்கும் வாய்ப்பு. இரண்டுமே அவளுக்குப் பிடித்தவைதாம்.

"இத்தனை விதமான புடவைகளைப் பார்க்கிறாயே, சாரு? உனக்கு அவற்றை விதம் விதமாக அணிந்து கொள்ள வேண்டும் என்று ஓர் ஆசை ஏற்படுவதில்லை?" அவளுடைய தோழிகள் அவளை இப்படிக் கேட்பதுண்டு. ஜரிகைச் சுடரின் மின்மினுப்பாய் அவளிடமிருந்து ஒரு புன்னகை உதிரும். "அப்படி ஒன்றும் இல்லை. விதம் விதமாக எத்தனையோ 'ஸ்வீட்' தின்பண்டங்கள் விற்கும் கடையில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒவ்வொன்றையும் சாப்பிடத் தோன்றுமா? திகட்டித்தானே போகும்? அதைப் போலத்தான் இந்த அனுபவமும்."


அவள் வார்த்தைகள் பொய்யில்லை. அவள் உணர்ந்ததும் அப்படித்தான். ஆனால் அந்த உணர்ச்சிக்கும் ஒரு சோதனை வந்து சேரும் என்று அவள் நினைக்கத்தான் இல்லை.

அன்று புதிதாகப் புடவை பார்சல்கள் வந்து சேர்ந்திருந்தன. அவற்றைப் பிரித்துக் கொண்டு வந்து கம்பளத்தின் மீது வரிசையாக அடுக்கிக் கொண்டிருந்தான் பங்காரு. அவள் அவற்றைக் கணக்குப் பார்த்து, நிறம் பிரித்து, விலைகளை வகைப்படுத்தி, அடுக்கி வைக்க வேண்டும்.

அவள் கண் பார்வை அந்தப் புடவையின் மீது விழுந்தது. அப்புறம் கண்ணை எடுக்கவே முடியவில்லை. விரல்கள் அதை எடுத்து வைக்க மனம் வராமல் அசைவற்று நின்றன. அலமாரியில் எடுத்து அடுக்கிய பிறகும், மீண்டும் மீண்டும் அதையே கடைக் கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தாள்.

மயில் கழுத்து நிறம். அதற்கேற்ற பனிச் சென்ற ஜரிகைக் கரை. பூங்கொத்துகள் குலுங்கிய 'டிஸைன்'. அவள் நிறத்துக்கு அது எடுப்பாகப் பொருத்தமாக இருக்கும். அவள் விதம் விதமாக வாயில், நைலான் புடவைகள் அணிந்து கொண்டாலும் பட்டுப் புடவை அணியும் போதுதான் உள்ளூற ஒரு மகிழ்ச்சியில் திளைத்துப் போவாள். ரவிக்கும் அது தான் மிகவும் பிடிக்கும்.

"பட்டுப் புடவைதான் உனக்கு அமைந்தாற்போலிருக்கிறது சாரு. நீ இருக்கிற வாட்ட சாட்டம், உயரத்துக்குப் பாங்கப் படிய ஜோராயிருக்கு!"



அவனுடைய ரஸனை உண்மைதான். இந்தப் புடவையைப் பார்த்தால் அவனும் மகிழ்ச்சியில் நனைந்துதான் போவான் நிச்சயமாக. கற்பனையில் அதை அவளுக்கு அணிவித்துக் குதூகலித்து நிற்பான்.

ஆனால் அதன் விலை? முந்நூற்று ஐம்பது ரூபாய்! அவர்களைப் போன்ற எளிய வாழ்க்கையை நம்பியவர்களுக்கு எட்டாத உயரம்.

எட்டி அந்தப் புடவையைக் கையில் எடுத்தாள். படிப்படியான மடிப்புப் பிரிந்து விழுந்தது. இடையின் வளைவில் அதைப் படிய வைத்துப் பார்த்தாள். எதிரும் புதிருமாக இருந்த நிலைக்கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தை, ஒவ்வொரு கோணமாகப் பார்த்து ரசித்தாள். புடவையை லாகவமாகப் பிரியாமல் கையில் எடுத்து, மார்பில் குறுக்காக வைத்துப் பின்புறம் தொங்க விட்டுக் கொண்டாள். முன்னும் பின்னுமாக அழகு பார்த்துக் கொண்டாள்; திரும்பித் திரும்பி அலகால் கோதியபடி ரசிக்கும் பச்சைக் கிளியைப் போல.

"நைஸ். உங்களுக்கு ரொம்ப நன்றாகத்தான் இருக்கும். சொல்லப் போனால், யார் யாரையோ வைத்து இவர்கள் புடவை விளம்பரம் செய்கிறார்களே? ஏன் உங்களை 'மாடலாக' வைத்து விளம்பரம் போடக் கூடாது?"

அக்கௌண்டெண்ட் ரகுநாதன், தக்காளி அரிந்தாற் போன்ற, வெற்றிலைக் காவி நிறைந்த வாய் தெரியச் சிரித்தபடி நின்றார். அவளுக்கு ரொம்ப வெட்கமாகப் போயிற்று. சட்டென்று புடவையை மடிப்புக் கலைவு தெரியாமல் சரி செய்து எடுத்த இடத்திலேயே அடுக்கினாள்.

மழை பெய்து ஓய்ந்திருந்தது. குங்குமச் சாறு வெள்ளம் கணுக்கால் அளவுக்குக் கிளுகிளுத்துக் கொண்டு ஓடிற்று. அவள் மனத்தில் நெய்தாற் போலக் குவிந்த நினைவுகள். தை மாதம் அவர்கள் மணம் செய்து கொள்வதாகத் தீர்மானம் செய்திருந்தார்கள். ரவியின் கம்பெனியில் கடன் கொடுத்துத் தவணை வசதியில் 'ஃப்ளாட்' கட்டிக் கொள்ள உதவி இருந்தார்கள். அந்த வீட்டுக்கான சாமான்களை வாங்கி, ஒவ்வொன்றாகச் சேகரித்து, வீட்டை உருவாக்குவதில் இருவருமே முனைந்திருந்தார்கள்.

ரவியின் பங்குக்கு அவன் வாங்கிக் கொடுத்த கடன் தொகை. அவள் பங்குக்குச் செய்த சிறு சேமிப்புக்கள். இருவருக்கும் அதில் இருந்த தீவிரத்தில் எல்லாச் செலவுகளையுமே குறுக்கிக் கொண்டிருந்தார்கள். அவற்றுக்கு நடுவே இப்படி ஓர் ஆசையா? அதற்கு எங்கே இடம்?

மறு வாரக் கடைசியில் சமையல் அறைக்காக, முழுதும் மின்சாரத்தில் இயங்கும் சமையல் அடுப்பு ஒன்றை வாங்குவதாக இருந்தது. சாருவிடம் அதை வாங்கிக் கொண்டு வருவதாக ரவி சொல்லி இருந்தான். பாங்கில் அதற்காகப் பணம் சேர்த்து தயாராகக் காத்திருந்தது. இப்போது — இந்தப் புடவையை வாங்குவதானால் —

அது சுயநலமாக இருக்கலாம். ஆனால் சில சமயம் வாழ்க்கையில் சில ஆசைகளைப் பிடுங்கித்தான் அனுபவிக்க வேண்டி இருக்கிறது. எப்படியும் இது வீண் செலவு இல்லை. பின்னால் எவ்வளவோ நாட்களுக்குப் பயபோகப் படும்..... தன்னுள் ஒரு கேலிச் சிரிப்பு கேட்டது. இதைப்போலக் கடையில் விற்பனை செய்யும் போது எவ்வளவு பேரிடம் அவன் பேசி இருக்கிறான்?

ஆரம்ப நாட்களில் ரவி அவளுக்காக எத்தனை விதமான பரிசுகள் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறான்? விலையுயர்ந்த எத்தனையோ அழகுப் பொருட்கள், அலங்காரச் சாமான்கள், துணிகளும்கூட.....

அவர்களிடையே அப்படி ஓர் உணர்ச்சி அரும்பாக நின்ற நாட்களில் இருந்த வசியம் இப்போது மறைந்துதான் போய் விட்டது. சந்தித்துப் பேசும் போதும்கூட இந்தக் கடமைகளின் பொறுப்பு கனத்து



அம்மா : அடி பாமா! மாடியிலே என்னடி பண்றே ?

பெண் : உன் மாப்பிள்ளைக்குக் கால் வலியாம்! இதமாகப் பிடித்து விட்டுக் கொண்டிருக்கிறேன்.


திற்கும் வார்த்தைகள்தாம் பரிமாறலாக உதிர்கின்றன.

ஏதோ ஓர் உள்ள எழுச்சியில் தொண்டையை அடைத்தது.

புதன் கிழமை மாலை. வேலை முடிந்து திரும்பும் வழியில், பஸ் நிற்குமிடத்தில் அவனுக்காகக் காத்துக் கொண்டு, கட்டவிழ்ந்த பொட்டலம் போலக் கலைந்து கொண்டே இருக்கும் கூட்டத்தின் நடுவே நின்று கொண்டிருந்தாள். ரவி வந்து சேர்ந்ததும் இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். இருவருமாகச் சில சாமான்களை வாங்கக் கடைக்குப் போவதாக ஒரு திட்டம்.

தான் வாங்கப் போகும் சமையல் சாதனத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினாள் சாரு. பின்னால் வரும் பேச்சுக்கு அதுவே ஓர் ஆரம்பமாகத்தான் இருக்கட்டுமே?

'' அதெல்லாம் பெண்கள் இலாகா. எனக்குத் தெரிய வேண்டாம்'' என்றான் ரவி ஒரு புன்னகையுடன்.



ஜோக்ஸ் - 'பாலி'

'' எல்லாத்தையுமே பூப்பூன்னுட்டா, அப்புறம் என்னதான் இருக்கிறது ?''

'' சரி. சொல்லுங்கள் மாடம் !''

கோலமிடுவது போலப் பேச்சுத் தொடர்ந்து வளைய வந்தது. கடைசியாக வந்து முடிந்த புள்ளி அந்தப் புடவையைப் பற்றித்தான். அவன் புன்னகை சட்டென்று மறைந்தது.

'' குழந்தைத்தனமாகப் பேசாதே, சாரு! இப்போது நமக்கு இருக்கும் நெருக்கடியில் முந்நூற்று ஐம்பது ரூபாய்க்கு எங்கே போவது? கல்யாணம் ஆகட்டும். அப்புறம் உனக்கு ஒவ்வொன்றாக வாங்கித்தருகிறேன்.''

கடைக்குக் காரில் வந்து இறங்கிய அந்தநடுத்தர வயது மாதின் நினைவு வந்தது. ஆசைகள் எதையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாத இளமைப் பருவத்தின் பசுமையினால் என்ன லாபம்? உழைத்து, முதிர்ந்து, உணர்ச்சிகள் வாடிய பிறகு, வசதிகள் கிடைத்துத்தான் என்ன பயன் ?

பேச்சுக் கசந்து நின்று விட்டது. அவள் கடைக்குக்கூடப் போகவில்லை. மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. அதுவும் நல்லதாயிற்று. பஸ்ஸில் ஏறிக் கொண்டு வீடு திரும்பி விட்டாள்.

அடுத்த நாலைந்து நாட்களுக்கு அவர்கள் சந்திக்கவே யில்லை. ஆனால் உள்ளே முள் உறுத்தலாக அந்த ஏமாற்றத்தின் வேதனை. மற்ற உருவங்களை அழித்து மறைக்கும் பனித் திரையாய், அந்த உணர்வு எதிலுமே சுவாரசியம் இல்லாமல் செய்துவிட்டது. இரண்டு நாட்கள் லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே இருந்து விட்டாள்.

அன்று காலையில் கடைக்குப் போனபோது அவள் மனத்தில் ஒரு தீர்மானம் உருவாகியிருந்தது. அவளாகவே முயற்சி எடுத்து அந்தப் புடவையை ஏன் வாங்கிவிடக் கூடாது ? அவள் அது வரையில் முதலாளியிடம் எந்த உதவியும் கேட்டதில்லை. இப்போது இந்தப் புடவையை வாங்கிக் கொண்டு மாதம் கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைக் கொடுத்துவிடலாம். இந்தச் சிறு உதவியை அவர் மறுக்க நியாயம் இல்லை.

கடைக்குள் நுழைந்ததும் அவள் கண்கள் 'ஷெல்பி'ல் அந்தப் புடவையைத்தான் தேடின. அது இருந்த இடம் காலியாக இருந்தது!

ரகுநாதனிடம் கேட்டபோது அவர் சொன்னார். ''நீ வாங்கப் போவதாகச் சொல்லவே இல்லையே ? நீ இல்லாதபோது நான்தான் இங்கே விற்பனையைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அது விற்றுப் போய்விட்டதே ? ச்சொ ! ச்சொ !''

''பரவாயில்லை'' என்று இழுத்தாற்போலச் சொன்னாள். ஒரு சமாதானமும் கூடத் தோன்றிற்று. அவள் தன் முடிவை ரவியிடம் சொல்லி யிருக்க முடியாது. அவனுக்குத் தெரியாமல் எதையும் செய்ய அவள் மனம் நயங்கிற்று. இப்படி நேர்ந்து போனதும் ஒரு வகையில் நல்லதுதான்.

மறுநாள் பாங்கிலிருந்து பணத்தை எடுத்து அவள் அந்த மின்சார அடுப்புச் சாதனத்தை வாங்க வேண்டும். ரவியுடன் அந்த ஃப்ளாட்



ஹரால்ட்வேர்

சமைத்துப் பரிமாறப் பாத்திரங்கள்



நேரான பக்கங்களோடு, தட்டையான அடிபாகம், பளபளப்பு நேர்த்தியான அமைப்பு

ஹரால்ட்வேர் நீடித்துழைக்கும்:
அது கனமான சுத்த அலுமினியத் தகட்டாலானது.

ஹரால்ட்வேர் விரைவில்சூடேறும்:
உட்குழிந்த அடிபாகம், ஒரே சீராக துரிதமாக சூட்டைப் பரப்புகிறது.

ஹரால்ட்வேர் சௌகரியமானது:
அதை கழுவிக்காத்தல் மிக எளிது.

ஹரால்ட்வேர் பன்முகப்பயனுடையது:
அதன்மூடியே ஸ்டாண்டாகப் பயன்படும்.

ஹரால்ட்வேரின் வகைகள்:
ஃப்ரையிங்பான்கள் ஸாஸ் பான்கள், காஸரோல்கள், கெட்டில்கள் எனப்பல வகைகள், பல ஸைஸ் களில் கிடைக்கிறது. ஹரால்ட்வேர் எந்த சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற பரிசு.

இன்றே சமையலறையை ஹரால்ட்வேரால் அழகு செய்க
சமைத்துப் பரிமாற சிறந்த பாத்திரங்கள். உங்கள் சமையலறைக்கு சிறந்த அன்பளிப்பு.

தயாரித்து, விற்பனைக்கு விடுப்போர்:
லல்லுபாய் அமீசந்த்
ப்ரை. லிட்.
225/27, ஜெ. தாதாஜீ ரோட்
பம்பாய்-400 007

60 ஆண்டுகளுக்கும் மேலாக,
அலுமினியத்தில் நம்பகமான பெயர்

அனுமதி பெற்ற மொத்த விற்பனையாளர்: தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் பாண்டிச்சேரிக்கு: பொப்பர் ஜமால் & ஸன்ஸ், ஜமால் பில்டிங், 182, பிராட்வே, சென்னை-600 001

DAZZAL/LA/T/01

டுக்குப் போக வேண்டும். அங்கேயே அதைச் சமையல் அறையில் வைத்துச் சரிபார்த்து விடலாம்.

'போனி'ல் அவனுடன் பேசினாள். ஒரு வாரத்துக்குப் பிறகு அவனுடன் பேசியபோது குரலில் தனியான இன்பம் இழை பிரிந்து நின்றது. குதூகலமான ஒரு நினைவு சன்னமான சல்லாப் போல் அவளைச் சுற்றிலும் மோதி அலைந்து மிதந்தது.

இடையில் அந்தப் பெரிய பார்சலுடன் ரவிக்காகக் காத்திருந்தாள். அவன் டாக்ஸியில் வந்து இறங்கினான். அவன் கையிலும் பெரிய பெட்டி ஒன்று இருந்தது. அவள் கண்கள் அதன் மீது தங்கியபோது. ''மின் விளக்குக்காகச் சில சாமான்கள் வாங்கினேன். தெரிந்தவர் ஒருவர் கொஞ்சம் மலிவாக வாங்கிக் கொடுத்தார்'' என்று சொன்னான்.

வாசற் கதவு மூலையிருட்டில், தாழ்ப்பாள் மேல் தங்கிய அவள் கை மீது அவன் கை பொத்திற்று.

''மறுபடியும் அந்த மாதிரி செய்ய மாட்டாயே, சாரு ?''

'' எந்த மாதிரி ?''

''அன்று திடீரென்று என்னை விட்டுவிட்டுப் போனாயே? அப்புறம் ஒரு வாரம் — ''

அவன் உணர்ச்சியின் வேகம் அவள் உடலில் 'விர்' என்று இறங்கிற்று. என்னவோ சொல்ல நினைத்தாள். அப்புறம் சொல்லிக் கொள்ளலாம், எல்லாவற்றையுமே ? இப்போதுதான் அந்தப் பிரச்னைக்கே இடம் இல்லையே ?

''எனக்குப் பதில் இல்லையே சாரு ?''

அவள் மேல் உராய்ந்தாற்போலச் சட்டென்று திரும்பி, ஒரு முறை உதட்டைச் சுளித்து அழகு காட்டினாள். அவன் 'பக்' கென்று சிரித்தான்.

உள்ளே போனதும் சமையல் அறையில் அந்தப் பார்சலை மேடையின் மீது எடுத்து வைத்தாள். ''இதைப் பிரித்து வையுங்கள். அதற்குள் நான் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்துவிடுகிறேன்.''

''எனக்கு இதைப் பற்றித் தெரியாது.''

''தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் அப்படிச் சொல்கிறேன். மணமான பிறகு நீங்களும் சமையல் செய்ய வேண்டியிருக்கும் !''

அவள் திரும்பி வந்தபோது அடுப்பை வெளியே எடுத்துப் பொருத்தி வைத்திருந்தது. கடையில் பார்த்ததைவிட இப்போது மேடையில் எவ்வளவோ அழகாக, பொருத்தமாகத் தோன்றிற்று. வெண்ணிற அடுப்பின் மேலே மூடியுடன் ஒரு சிறு 'ஷெல்ப்'.

''இது எதற்குச் சாரு ?''

'' ஏதாவது வைத்துக் கொள்ளலாம் '' என்று பெருமையுடன் அதைத் திறந்தாள். உள்ளே பார்த்ததும் அவள் கண்கள் மெதுவாய்த் தாழ்ந்தன. சிரிப்பு உதட்டில் ஓர் ஓரத்தில் ஆரம்பித்து, வர்ணத்தால் இழுத்த கோடுபோல, மறு நுனியில் போய் முடிந்தது.

அங்கே அவள் ஆசைப்பட்டு, கை நழுவிப் போன, மயில் கழுத்து நிறப் பட்டுப் புடவை திரும்பி வந்து காத்துக் கொண்டிருந்தது......



அகிலனுக்குப் பத்தாயிரம் !

தமிழ்நாட்டில் எழுத்தாளர்களுக்கு ஒரு புதிய பரிசுத் திட்டத்தை எம். ஏ. ஸி. அறக் கட்டளை நிறுவனம் அறிவித்தது. பிரபல தொழில் அதிபர் திரு எம். ஏ. சிதம்பரம் தம் தந்தை டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் நினைவுப் பரிசாகப் பத்தாயிரம் ரூபாய் ஆண்டுதோறும் வழங்குகிறார். எடுத்த எதிர்ப்பில் இந்தப் பரிசு பிரபல நாவலாசிரியர் அகிலனை வந்து அடைந்திருக்கிறது. பரிசுக்குரிய நாவல்: கல்கியில் அவர் எழுதிய ''எங்கே போகிறோம் ?''

நூலகத்தின் வெள்ளி விழா

இந்தியாவில் 35,000 நூலகங்கள் உள்ளன. வெள்ளி விழாக் கண்ட பிரிட்டிஷ் கௌன்சில் நூலகம் 1950ம் ஆண்டு சர் ஆர்ச்பால்ட் நை அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது! இரண்டாயிரம் புத்தகங்களுடன், ஒரே நூலகர் ஸ்ரீமதி கமலா குமாருடன் தொடங்கப்பட்டது இந்த நூலகம். இன்று 91,000 புத்தகங்களைக் கொண்ட இந்நூலகத்தில் பதினைந்து தேர்ந்த நூலகர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கத்தினர்களின் எண்ணிக்கை 268 லிருந்து இன்று பதின்மூன்றாயிரமாக உயர்ந்துள்ளது. படம்: வெள்ளிவிழா வைபவத்தில் திரு ஆதிசேஷய்யா பேசுகிறார்.



நான் வணங்கும் மனித தெய்வம் 11

உள் நோக்கி ஓர் ஆன்மிக யாத்திரை

ராணுவத்தில் வேலையிலிருந்த என் கணவரின் ஆங்கிலேய நண்பர் மேஜர் ஸிம்மன்ஸ் என்பவர் அடிக்கடி, 'கடவுள் நேரடியாகச் செய்யமுடியாத காரியங்களை மகான்கள்



மூலம் எளிதில் முடித்து வைக்கிறார்' என்று கூறுவார். அது முற்றிலும் உண்மை என்று நான் அறிந்திருக்கிறேன்.

பல ஆயிரக்கணக்கில் கடன் உபாதைகளால் மன நிம்மதியை அடியோடு இழந்த எங்களுக்கு, எதிர்பாராத விதமாக ஒரு மனித தெய்வத்தின் அருள் பார்வை கிட்டிக் கஷ்டங்கள் எல்லாம் விடிந்தன.

பஞ்சாபிலிருந்து ஓய்வுபெற்ற எஞ்சினீயர் ஒருவர் என் கணவருக்கு நண்பரானார். அவர் பெயர் கபூர். குடும்பத்தின் பரிதாபகரமான நிலையைக் கண்டு மனம் வேதனை அடைந்தார். அச்சமயம் எங்கள் அதிர்ஷ்டவசமாக அவரின் மத குருவான பூஜ்ய ஸ்ரீ சரண்சிங்ஜி குருமஹராஜ் சென்னைக்கு முதன் முதலாக விஜயம் செய்திருந்தார். என் கணவரைக் கபூர் அவரிடம் அழைத்துச் சென்றார். பல ஆயிரக் கணக்கில் மக்கள் அவரைத் தரிசனம் செய்யக் கூடியிருந்தனர். மேடைக்கு வந்த குருதேவரின் கடாட்சம் முதன் முதலில் என் கணவரிடம் விழுந்தது. அவருடைய முகவிலாசத்திலிருந்து கிளம்பிய ஒளிக் கதிர்களில் மூழ்கியிருந்த என் கணவர் வாயடைத்துக் கம்பமாய் நின்றபோது குருதேவர் சரண்சிங்ஜி என் கணவரை நோக்கிப் புன்முறுவல் பூத்தார்.

வாடி வதங்கிக் கொண்டிருக்கும் செடிக்கு ஜில்லென்று குளிர்ந்த தண்ணீர் பாய்ச்சுவது போலிருந்தது என் கணவருக்கு. அந்த நாளிலிருந்து நம்பிக்கை பிறந்தது. அந்தப் புனித முகூர்த்தத்திலிருந்து பல நண்பர்களும் முன் பின் தெரியாது, கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே அனுதாபம் கொண்ட சில பிரமுகர்களும் உதவி புரிய ஆரம்பித்தனர். காலேஜுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் சென்று கொண்டிருந்த குழந்தைகளின் படிப்பு தடைப்படாமல் நடந்தது. கடன்காரர்களின் பாரங்கள் சிறிது சிறிதாக அநேகமாகக் குறைந்துவிட்டன. என் பெரிய பிள்ளைகள் இருவருக்கும் நல்ல வேலையும் கிடைத்து விட்டது. பெரிய பெண்ணும் உத்தியோகத்தில் அமர்ந்துவிட்டாள். எல்லாம் பூஜ்யஸ்ரீ சரண்சிங்ஜி குருதேவரின் சில நிமிட கடாட்ச பலத்தினால் தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பஞ்சாபில் அமிருதஸரஸ் மாவட்டத்தில் உள்ள பியாஸ் நதிக் கரையில் பியாஸ் என்ற நகரத்திலுள்ளது பூஜ்ய ஸ்ரீ சரண்சிங்கின் மந்திர்.

இரண்டு வருடங்களுக்குமுன் கடும் ஜுரத்தினால் நான் பாதிக்கப்பட்டிருந்தேன். பல நாட்கள் படுக்கையிலேயேகிடந்து டாக்டர்கள் பயப்படும் அளவில் என் உடல்நிலை மோசமாகிக் கொண்டிருந்தது. அச்சமயம் ஸ்ரீகுரு மகராஜ் சரண்சிங்ஜி ஞாபகம் ஏற்பட அவரைத் தியானித்த சில நிமிடங்களுக்குள் நான் கண்டிராத பியாஸில் உள்ள குரு மந்திர் என் கண்ணுக்குப் பட்டு, ஸ்ரீ சரண்சிங் மகராஜ் என் அருகில் வந்து தம் கைக் குட்டையால் மூன்று தரம் என் முகத்தில் வீசி, சிரித்த முகத்துடன் உற்று நோக்கிவிட்டு உடனே மறைந்து விட்டார். அந்தக் கணத்திலிருந்து என் ஜுரம் இறங்கிவிட்டது. வெகு விரைவில் படுக்கையை விட்டு எழுந்து நடமாடவும் என்னால் முடிந்தது.

இம்மாதிரி எத்தனையோ அதிசயங்கள் நடந்திருக்கின்றன.


சத்குரு சரண்சிங்ஜி அநேக புத்தகங்கள் எழுதியிருக்கிறார். பல சத்சங்கங்கள் நடத்தியுள்ளார். உள்நோக்கி ஆன்மீக யாத்திரை நடத்துவதற்குரிய மார்க்கங்களை எளிய நடையில் விஞ்ஞான முறையில் நாம் அனுஷ்டிக்கத் தகுந்த சுலபமான உபாயங்களுடன் சொல்கிறார். சீனாவைத் தவிர மற்ற எல்லா நாடுகளுக்கும் அவர் விஜயம் செய்திருக்கிறார். மக்கள் சாரி சாரியாக அவரைக் கண்டு அமிருத தாரையாகப் பொழியும் அவரது உபதேசங்களைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்து வருகிறார்கள்.

பஞ்சாபில் தோன்றிய மகான்கள் அனைவரின் சக்திகளும் திரண்டு இன்று சத்குரு சரண்சிங் குரு மகராஜாக நம்மிடையே பிரகாசிக்கிறார்.

— கிரிஜா ஸ்ரீநிவாசன்

கோத்ரெஜின்

புதிய டர்கிஷ் பாத்



அமோகமான சோப், நம்பமுடியாத விலையில்

Rs. 1·10 மட்டுமே (வரிகள் தனி)

கோத்ரெஜ் மட்டுமே அளிக்கக் கூடிய சோப் அபரிமிதமான நுரை...நீடித்த உபயோகம்...புத்துணர்ச்சியளிக்கும் நறுமணம் மற்றும் சிக்கன விலை.

கோத்ரெஜின் டர்கிஷ் பாத்

Interpub/GTB/1/75/TAM

'சிரித்து மகிழ வைக்கும் சிங்காரச் சித்திரம்' என்று இப்படத்தின் பாட்டுப் புத்தகம் கூறுகிறது. ஆரம்பத்திலிருந்து ஒரே நகைச் சுவையாயிருந்தால் ரசிக்கலாம். அபத்தமாகி விட்டால்....!

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஒரு வக்கீலின் மகன்; வக்கீலுக்குப் படிக்கும் மாணவன். தகப்பனாரின் ஒரே ஆசை, தன் விரோதி வக்கீல் ராமசாமியைத் தன் மகன் ஆட்டி வைக்க வேண்டும் என்பதுதான். ஆனால் ராமசாமியின் மகள் தேவி அவனை ஆட்டு ஆட்டென்று ஆட்டி வைக்கிறாள்.

மஞ்சுளாவும் சிவாஜியும் முதன் முதலில் சந்திக்கும் காட்சி மிகவும் சுவையாய்ப் புனையப்பட்டிருக்கிறது. தகப்பனாருக்குத் தெரியாமல் விரோதியின் மகளைக் கல்யாணம் செய்துகொள்வது; அந்தச் சமயம் பார்த்துத் தகப்பனார் அங்கு வந்து சேருவது... எல்லாம் ஒரே கலாட்டாதான். ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டு ஆனந்தமாயிருக்க விரும்பிய இளம் தம்பதிக்குப் பல இடையூறுகள். கடைசியில் ஹோட்டலுக்குக் கொடுக்கப் பணம் இல்லாமையால், ராதா — கிருஷ்ணன் வேஷம் போட்டுக் கொண்டு மஞ்சுளாவும், சிவாஜியும் வெளியேறுகின்றனர்! அவர்கள் ஓடுவதைப் பார்த்தவர்கள் அவர்களை ராதையும், கிருஷ்ணனுமாகவே நினைத்து வழிபெல்லாம் வணங்குகின்றனர்!' இப்படி எல்லாமே ஒரே கேலிக்கூத்து!

மஞ்சுளாவின் அண்ணனாக வந்து 'காதலிக்க வழி' சொல்லிக் கொடுக்கும் நாகேஷ் அனைவரையும் சிரிக்க வைக்கிறார். தன் நண்பனுக்கு, 'காதலிக்க வழி' சொல்லிக் கொடுக்கப் போக, அவன் காதலி வேறு யாரும் அல்ல, தன் தங்கைதான் என்று அறிந்ததும் அவர் அடைந்த அதிர்ச்சியில் கொட்டகையே அதிர்கிறது.

தந்தையால் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் மகனும் மருமகளும் திருட்டுத்தனமாகச் சந்திக்க முயலும் காட்சிகள் தமாஷாயிருக்கின்றன. இந்தக் கட்டங்களில் மஞ்சுளா நன்றாய் நடித்திருக்கிறார்.

குணசித்திர நடிகர் என்பதால் நகைச் சுவைப் பாத்திரத்தையும் ஏற்றுச் சோபிக்க முடியும் என்று உணர்த்த முற்பட்டிருக்கிறார் சிவாஜி. ஆனால் அபத்தச் சம்பவங்களும் பைத்தியக்காரப் பாவனைகளும் அளவுக்கு அதிகமாகி ஏமாற்றத்தில் முடிந்திருக்கிறது.

இவ்வண்ணப் படத்தின் திரைக்கதை, வசனம், டைரக்‌ஷன் ஆகியவற்றின் பொறுப் பேற்றிருப்பவர் அநுபவம் மிக்க ஏ. சி. திருலோகசந்தர். அந்த அநுபவமெல்லாம் எங்கே போயிற்றோ, புரியவில்லை. **— காந்தன்**

அன்பே ஆருயிரே



இன்பத் தென்றல்

குல்ஷன் நந்தா

4

நாளடைவில் ரூபாவுக்கும் அவள் கற்பனைக்காதலனுக்கும் இடையே கடிதப் போக்குவரத்து வளர்ந்து கொண்டே போயிற்று. இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு தடவை அவளுக்குக் காதல் கடிதம் வரலாயிற்று. தபால்காரர் தீனதயாள் தபால் பையுடன் ஹாஸ்டலுக்குள் நுழைந்துவிட்டால் போதும். மாணவிகள் அனைவரும் தங்களுக்கு வர வேண்டிய கடிதங்களை மறந்து, ரூபாவுக்கு வரும் நீல உறையையே ஆவலுடன் எதிர்நோக்கலாயினர். தீனதயாளும் இப்பொழுதெல்லாம் ரூபாவின் வாயைக் கிண்டுவதில்லை. உதடுகளில் குறுநகையாடக் கடிதத்தை நீட்டுவார். மலர்ந்த முகத்துடன் ரூபா அதை வாங்கிக்கொள்வாள். பிறகு அவ்வுறையிலிருந்து வரும் இலேசான நறுமணத்தைக் கண்களை மூடிக்கொண்டு நுகருவாள். அதன் போதையிலே அதற்கு முத்தமும் கொடுப்பாள். அதை மார்போடு ஒற்றிய வண்ணம் தன் அறையை நோக்கி ஓடுவாள். தன் படுக்கையில் படுத்துப் பாடப் புத்தகத்தில் மறைத்துக் கொண்டு அந்தக் காதல் கடிதத்தை மணிக்கணக்கில் படிப்பாள். அவளுடைய தோழிகள் அனைவரும் அந்தக் காதல் கடிதத்தைக் கேட்டு மகிழத் துடிப்பார்கள்.

ரூபாவின் காதல் விஷயம் கல்லூரி முழுவதற்குமே தெரிந்த விஷயம் ஆகி விட்டது. அவள் எப்பொழுதாவது தனது கடிதத்தில் சில தேர்ந்தெடுத்த பகுதிகளைத் தன் தோழிகளுக்குப் படித்துக் காட்டுவாள். அதைக் கேட்டு அவர்கள் நெடுமூச்சு விடுவார்கள். அவளுக்கு வரும் கடிதத்தில் காணும் காதல் வேகமும் துடிப்பும் தங்களுக்கு வரும் கடிதங்களில் காணாமல் தங்கள் விதியை நொந்து கொள்ளுவார்கள்.

இதுபோல் அவர்களுடைய உணர்வுகளைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் ரூபாவுக்குத்தான் என்ன இன்பம்! ஆனால் அஞ்சுவின் உள்ளத்தில் பொறி தட்டிய பொறாமைத் தீ நாளடைவில் துவேஷம் என்னும் காட்டுத் தீயாகப் பரந்து வளர்ந்தது. நிஷியும் ரஜியாவும்கூட அவளிடம் பொறாமை கொண்டனர்.

ஆனால் ரூபாவுக்குத் தனது அலுப்புச் சலிப்பையும் தாழ்வு மனப்பான்மையையும் போக்கிக்கொள்ள இது சிறந்த சாதனமாக அல்லவா அமைந்து விட்டது! அவள் தினம் காகிதமும் பேனாவுமாக அருவிக் கரையில் போய் அமருவாள். தனக்குத் தானே கடிதம் எழுதிக்கொள்வாள். மணம் பரப்பும் உறையிலே தனது முகவரியைக் குறிப்பாள். தானே எடுத்துச் சென்று தபாலிலும் சேர்ப்பாள்.

இடையேஎப்பொழுதாவது மிஸ்டர் தெரேஸாவைச் சந்திக்க நேர்ந்தால், உள்ளந்



தொடும் காதல் பாடல்களிலிருந்து இரண்டொரு வரிகளை இவனுக்கு அவள் எடுத்துச் சொல்வாள். ரூபா அவற்றை இடம் பார்த்துத் தன் கடிதங்களில் பொருத்தமாகச் சேர்த்துக்கொள்வாள். ஸிஸ்டர் தெரெஸாவுக்கு இந்தக் கற்பனைக் காதல் குழந்தைத்தனமாகப் பட்டாலும் சூதுவாதற்ற இந்தப் பரிமாற்றத்தை மனத்துள் வியந்து பாராட்டி முறுவலித்துக் கொள்வாள்.

ரூபா இந்தக் குறும்புச் செய்கையால் தன் மனத்தை மகிழ்வித்துக் கொண்டாள் என்றாலும் யோசிக்கப்போனால் அவளது தாழ்வு மனப்பான்மைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகவே தோன்றியது. அவள் இந்தக் கடிதப் போக்குவரத்தை மறந்து, தனது வறண்ட வாழ்க்கையைப் பற்றி யோசிக்கும் வேளையிலே ஒரேயடியாக வாடித் துவண்டு போவாள். பிறகு தன் வாட்டத்தை விரட்டியடிக்கத் தனக்குத் தானே எழுதிக்கொண்ட கடிதங்களைப் படித்துத் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளவும் முயல்வாள். இந்தக் கடிதங்களை யெல்லாம் உண்மையிலேயே ஓர் அரச குமாரன் எழுதியிருந்தால்....? சில தினங்களில் அவனே அவளைச் சந்திக்க வந்தால்...? — இப்படி ஓர் உணர்வை ஓடவிட்டு மதி கிறங்குவாள். அந்த மதி மயக்கத்தில் அவள் தனது கற்பனை உலகில் புகுந்து தனது கற்பனை அரச குமாரனைத் தேடவும் தொடங்குவாள். திடீரென்று கற்பனைச் சங்கிலி அறுந்து போகும். உண்மை நிலை விகவ ரூபம் எடுத்து அவளைக் குத்தித் துளைக்கும்; துயரம் பாம்பெனச் சீறிப் படமெடுத்துத் தீண்டும்.



நல்லவேளையாகப் பள்ளித் தேர்வு அவளைத் தடுத்தாட்கொண்டது. வாட்டத்தைப் போக்கி அவளை இராப் பகல் நன்றாகப் படிக்குமாறு தூண்டியது. மற்ற மாணவிகளும் அவளுக்குத் தொல்லை தருவதை நிறுத்திக் கொண்டார்கள். அஞ்சு மட்டும் படிப்புக்கு இடையேயும் பல முறை அவளிடம் பிரின்ஸைப் பற்றிக் கேட்டிருக்கிறாள். தனது கற்பனைக் காதல் அஞ்சுவை உறங்க விடவில்லை என்பதை ரூபா நன்கு உணர்ந்திருந்தாள். ரூபா சுற்றி வளைத்து ஏதாவது பேசுவாளே ஒழிய அவள் கேட்ட கேள்விக்கு நேரிடையாகப் பதில் சொல்ல மாட்டாள். அஞ்சுவை வாட்டி எடுப்பதில் அவளுக்கு அப்படி என்ன இன்பமோ?

கடைசிப் பரீட்சையும் முடிந்து விடவே, மாணவிகளின் அடங்கியிருந்த ஆர்வம் மீண்டும் தலைதூக்கியது. அவர்களது நாடி நரம்புகளில் புத்துணர்வு படபடத்தது. உதடுகள் துடிக்க, புன்னகை படர, அவர்கள் பழைய படி குறும்புகளில் இறங்கி 'அக்குறும்பு' செய்யலாயினர்.

எல்லோரும் ரூபாவைத் தேடலாயினர், தங்கள் குறும்புக்கு அவளைப் பாத்திரமாக்க. ஆனால் அவள் அங்கு இருந்தால் அல்லவோ அகப்படுவாள்? அவள் சிறிது நேரத்துக்கு முன்பே எங்கோ போய்விட்டிருந்தாள்! மாணவிகளுக்குச் சந்தேகம், அவள் தன் காதலன் பிரின்ஸைச் சந்திக்கத்தான் போயிருப்பாள் என்று! ஆனால் உண்மையில் அவள் தன் தாயாரைப் பார்க்கப் போயிருந்தாள்.

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்



பேஷண்ட்: எனக்கு ஒரே கவலையா இருக்கு டாக்டர். நேத்து இரவு ஏதோ ஒரு பெரிய பொருளைத் தின்பது போல் கனவு கண்டேன்.

டாக்டர்: வெறும் கனவுதானே கண்டீர்கள். அதற்குப் போய் இப்படிக் கவலைப்பட்டால் எப்படி?

பேஷண்ட்: நான் கவலைப்படுவது கனவு கண்டதற்காக அல்ல டாக்டர். இன்று காலையில் எழுந்து பார்த்தால் என் படுக்கையில் இருந்த தலையணையைக் காணவில்லை.

ரூபாவின் தாயார் தன் வேலைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பியபோது நன்றாக இருட்டி விட்டிருந்தது. தனது வீட்டில் விளக்கு எரிவதைக் கண்டதும் அவளுக்கு யோசனையாகி விட்டது. சட்டென்று கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தவளுக்கு அங்கே கண்ட காட்சி பெரு வியப்பை அளித்தது. அவளுக்குப் பார்வை சற்றுக் குறைவுதான் என்றாலும், எல்லாம் தெளிவாகவே தெரிந்தன. ஒவ்வொரு பொருளும் ஒழுங்காக அதனதன் இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. அறை நன்றாகக் கூட்டிப் பெருக்கி, மெழுகித் தீற்றித் துப்புரவாகத் தோற்றமளித்தது. அவள் பார்வை சமையலறைக்குள்ளும் சென்று நின்றது. அங்கே ரூபா நின்று கொண்டிருந்தாள்.

"மகளே, ரூபா! நீ எப்போது வந்தாய்?"

அன்னையின் அன்பில் தோய்ந்த குரலைக் கேட்டதும் ரூபா ஓடிவந்து அவளைத் தழுவிக் கொண்டாள். தாயாரும் தன் மகளின் முகத்தை இரு கைகளாலும் தடவிக் கொடுத்துத் திருஷ்டி கழித்தாள். "உன்னை யார் இந்த வேலைகளையெல்லாம் செய்யச் சொன்னது?" என்று செல்லமாகக் கடிந்தும்கொண்டாள்.

"எல்லாம் மூலைக்கொன்றாகக் கிடந்தன. ஒழுங்குபடுத்தி வைத்தேன்!" ரூபா தாயாரின் கையில் தொங்கிக் கொண்டிருந்த பையை வாங்கி மூலையில் மாட்டினாள். "அம்மா! சீக்கிரம் கைகாலைக் கழுவிக் கொண்டு வா, சாப்பிடலாம்!" என்றாள்.

"என்ன?"

"ஆமாம், அம்மா! சாப்பாடு தயார். இன்றைக்கு உன் பெண் கைச்சமையல்!"

"ஆமாம்,உனக்குப் பரீட்சை இல்லையோ?"

"இன்றைக்குத்தான் கடைசிப் பரீட்சை."

"பரீட்சையெல்லாம் நன்றாக எழுதியிருக்கிறாயோ?"

"என்ன அம்மா, அப்படிக் கேட்டுவிட்டாய்? அம்மாவின் ஆசீர்வாதம் துணையிருக்கும்பொழுது, எங்கேயாவது பரீட்சை தவறுமா?"

மகளின் பேச்சைக் கேட்டுத் தாயாரின் கண்களிலே ஓர் ஒளி பளிச்சிட்டது. ரத்தம் செத்து, வெளுத்த முகத்திலும் இலேசாகச் செம்மை படர்ந்தது. மகளின் உச்சி மோந்து ஆசி நல்கிய வண்ணம் அவளை மேரியின் படத்துக்கு எதிரே இட்டுச் சென்றாள். தன் உடலில் சிலுவைச் சின்னம் காட்டி மேரியின் தாள் பணிந்தாள். அவள் உள்ளம் என்ன என்ன வேண்டியதோ?

ரூபா அன்று தன் கையால் தாயாருக்காகச் சுவையான உணவு சமைத்திருந்தாள். அதைக் கண்டு தாயாரின் மகிழ்ச்சி எல்லை தாண்டி நின்றது. அம்மாவை உட்காரச் சொல்லி விட்டுக் கிண்ணங்களை எடுப்பதற்காக ரூபா அலமாரியைத் திறந்தாள். அதனுள்ளே பார்வையை ஓட்டியவள் அப்படியே வியந்து போய் வைத்த கண் வாங்காமல் நின்றாள். தையற் கூடையில் மிக அழகான விலையுயர்ந்த துணி ஒன்று கண்களைப் பறித்தவாறு காட்சி அளித்தது. ஆவல் மீதூரவே, ரூபா அந்தக் கூடையைத் திறந்து துணியைப் பார்த்தாள். வெள்ளை ஜார்ஜெட்டில் சிறப்பான ஜிகினா வேலைப்பாடு செய்யப்பட்ட அழகிய 'மாக்ஸி' என்று தெரிய வரவே, அவளால் பொறுக்க முடியவில்லை. அந்த 'மாக்ஸி'யை எடுத்து உடம்போடு ஒட்டி வைத்துக் கொண்டு கண்ணாடியில் நோக்கினாள்.

அதற்குள் தாயார் எழுந்து வந்து ரூபாவுக்குப் பின்னால் நின்று கொண்டாள்.

"இது யாருடைய 'மாக்ஸி' அம்மா?" ரூபா தாயாரைத் திரும்பிப் பார்த்து ஆவலோடு கேட்டாள்.

"என்னுடைய ரூபாக் கண்ணினுடையது தான்!" என்று கூறிய தாயார் மென்னகை புரிந்தாள்.

"நிஜமாகவா, அம்மா?" ரூபா மகிழ்ந்து போனாள். "இத்தனை விலையுயர்ந்ததா?"

"என் ரூபாவும்தான் என்ன, விலை மதிக்க முடிந்தவளா? விலையில்லா மாணிக்கம் அல்லவா?"

"ஏன் அம்மா! எனக்கு ஏன் முன்னமே சொல்லவில்லை?"

"கிறிஸ்துமஸ் அன்றைக்கு 'ஸர்பிரைஸ் கிஃப்ட்' கொடுக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்!"

ரூபாவின் விழிகள் மகிழ்ச்சியில் மிதந்தன. அவள் தன் தாயாரை உற்று நோக்கினாள்.

"என்னை என்ன, அப்படிப் பார்க்கிறாய்? இந்தஅம்மாவின் பேச்சிலே உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"அம்மா பேரிலே நம்பிக்கை இல்லையென்றால், அப்புறம் யார் பேரிலேதான் நம்பிக்கை வரும்? — அம்மா, நீ ரொம்ப நல்ல அம்மா! நான்தான் உனக்கு உதவாக்கரைப் பெண்ணாகப் பிறந்திருக்கிறேன்!"

"சட், பைத்தியக்காரி! அம்மாவிடம் போய் இப்படியெல்லாமா பேசுவார்கள்? நீ படித்துப் பெயர் எடுத்தால் அதுவே எனக்குப் பெரிது. என் முயற்சி பலன் அளித்ததாக மகிழ்வேன்!"


"அம்மா! நானும் அந்த நல்ல நாளைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். படிப்பு முடிந்ததும் நான் வேலை செய்யணும். நீ நிம்மதியா — ஹாயா' இருக்கணும். இத்தனை நாட்கள் நீ எனக்காகப் பட்ட துன்பம் அத்தனையையும் மறந்து இன்பமாக வாழணும். அப்படி நான் உனக்குப் பணிவிடை செய்யணும்!" சொல்லும்பொழுதே ரூபா உணர்ச்சி வசப்பட்டு அழுது விட்டாள்; அப்படியே தாயாரைக் கட்டிக் கொண்டாள்.

ரூபா தன் அறைக்கு வந்தபோது அஞ்சு ஏதோ ஒரு நாவலை வைத்துப் படித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். ரூபாவைப் பார்த்த

புதியவை! நுரை வளம் கொழிக்கும் பாண்ட்ஸ் ஷாம்பூகள்



நீண்ட கூந்தலை சுத்தம் செய்வது பற்றிய கவலை இனி வேண்டாம்! புதிய பாண்ட்ஸ் ஷாம்பூகள் வளமான நுரை கொழிக்கும் வண்ணம் விசேஷ கலவை முறைப்படி செழுமையாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மென்மையான, குமிழ் பொங்கும் நுரை வேரூன்றிய மயிர்க்கால்களிலிருந்து கூந்தலின் முனைவரை விரைவாகவும், மிருதுவாகவும் செயல்படுகிறது! நீளமான மயிரிழைகள் முழுமையாக சுத்தமடைகின்றன; மெதுவாக இழுப்பின் மெல்லிசை பாடுகின்றன. உங்கள் கூந்தலின் தேவைக்கேற்ற பாண்ட்ஸ் ஷாம்பூ வகையைத் தேர்ந்தெடுங்கள்: பிசுக்குள்ள கேசத்திற்கு லெமன், ஊட்டம் தேவைப்படும் கேசத்திற்கு எக், மங்கலான, சோகை படிந்த கேசத்திற்கு டானிக் மற்றும் இயல்பான கேசத்திற்கு மெருகூட்ட ப்யூடி ஷாம்பூ. குளிக்கும் நீரின் தரம் எதுவாக இருப்பினும் செழுமையான நுரை பொங்குவதை உணருவீர்கள். பாண்ட்ஸ் ஷாம்பூ உபயோகித்துப் பட்டுப் போன்ற கேசத்தின் பகட்டைப் பறை சாற்றுங்கள். கேசத்தின் பேரன்புப் பராமரிப்பு பெண்மைக்குத் தருகிறது ஒரு தனி வனப்பு!



பாண்ட்ஸ் ஷாம்பூகள்...

பாண்ட்ஸ் அளிக்கும் புதிய சிறப்புத் தயாரிப்புகள்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ.எஸ்.ஏ.யில் இணைக்கப் பெற்றது) HT-CP-8432

தும் அஞ்சு நாவலைப் படுக்கையில் வீசிவிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''இடையென்று எங்கே போய் விட்டாய்?'', ரூபாவின் முகத்தில் மலர்ந்த புன்னகையைப் பார்த்துவிட்டு அஞ்சு கேட்டாள்.

''பிரின்ஸைப் பார்க்கப் போய் வந்தேன். பரீட்சை முடிந்தது: கட்டுத் திட்டங்களும் தொலைந்தன!''

''...ஆமாம், இந்தப் பாக்கெட்...?'' ரூபாவின் கையிலிருந்த பொட்டலத்தைக் காட்டிக் கேட்டாள் அஞ்சு.

''கிறிஸ்துமஸ் பரிசு!... எங்கள் காதலுக்கு முதல் பரிசாகப் பிரின்ஸ் அளித்தது!'' ரூபா ஒவ்வொரு சொல்லிலும் ஓர் அழுத்தம் கொடுத்துக் கூறினாள்.

அஞ்சு சட்டென்று படுக்கையிலிருந்து தாவிக் குதித்தாள். ரூபாவின் கையிலிருந்த பொட்டலத்தைப் பிடுங்கிப் பிரிக்கலானாள். ரூபா என்ன தடுத்தும் அவள் கேட்கவில்லை.

பொட்டலத்தைத் திறந்ததும் ஜரிகை வேலை செய்த வெள்ளை ஜார்ஜெட்டில் தைத்த அழகிய 'மாக்ஸி' அவளுடைய கண்ணை அலங்கரித்தது.

''ரொம்ப விலையுயர்ந்த பரிசாகத் தோன்றுகிறதே! உன் 'பாய் ஃப்ரெண்ட்' பெரிய பணக்காரனோ?''

''என்ன அப்படிக் கேட்டு விட்டாய்?— பிரின்ஸ் இல்லையோ?'' அஞ்சுவின் முகத்தில் பார்வையைப் பதித்து அவளது உணர்வுகளை நாடி பிடித்தாற் பார்த்தவாறு ரூபா சொன்னாள்: ''அடியே! அவருக்கு இது ஒரு பெரிய விஷயமா? வைர நெக்லஸே தருவதாகச் சொன்னார்!''

''அப்படியா?''

''ஆமாம், நான்தான் வேண்டாம் என்று தடுத்து விட்டேன்!'' ரூபா தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு சொன்னாள்.

''யூ ஃபூல்! இத்தனை நல்ல சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடுவாயோ, அசடே!''

''நான் சரியென்று சம்மதித்து விட்டால், என்னைப் பேராசைக்காரி என்று நினைக்கமாட்டாரா? அவர் பார்வையில் நான் மட்டமாகித் தாழ்ந்துவிட மாட்டேனா? அதனால்தான்...''

''போடீ, அசடு கேண்டீனதும். காதல் விஷயத்திலே நீ பெரிய 'எக்ஸ்பர்ட்'தான். போ!''

''நிஜமாகச் சொல்லுகிறேன், அஞ்சு! இன்று வரை நான் காதலை வெறும் வேடிக்கை என்றுதான் எண்ணி வந்தேன். ஆனால் இப்பொழுது என்ன தோன்றுகிறது, தெரியுமோ? காதல் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? அப்படி ஓர் அரைகுறை வாழ்க்கை, உப்புச் சப்பற்ற வாழ்க்கை, — இங்கு யாருக்கு வேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறது. காதல் மகத்தானது. வாழ்க்கை வளம் கூட்டும் அருவிக்கொப்பானது. காதல் இல்லையேல்...'' சொல்லிக் கொண்டே வந்த ரூபா சட்டென்று நிறுத்தி விட்டாள்.

நறுமணம் கமழும் நீல உறை ஒன்று அந்தப் பொட்டலத்திலிருந்து அந்த நேரம் பார்த்துக் கீழே விழுந்ததுதான் காரணம்.

அஞ்சு சட்டென்று குனிந்து அதை எடுத்துக்கொண்டாள். அந்தக் கடிதத்தைப் படிக்க அனுமதி கோருபவள் போல் ரூபாவைப் பார்த்தாள். ரூபா அதற்குத் தடையொன்றும் கூறவில்லை. அஞ்சு அவசரம் அவசரமாக அந்த உறையைத் திறந்து கடிதத்தை எடுத்து மனத்துள் படிக்கலானாள். பிறகு உரக்கவே படித்தாள்:

> டியர் ரூபா!
>
> அன்பை ஏற்பாயாக.
>
> உன் அன்பான உருவத்தை இன்னும் அன்புடையதாக்குவதற்காகச் சாதாரணப் பரிசு ஒன்று அனுப்புகிறேன். பிடித்தால் கிறிஸ்துமஸ் அன்று இதை உடுத்திக்கொள். கிறிஸ்துமஸ் அன்று இரவு 'ஜெனார்க்'கில் உன்னை ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன்.
>
> உன் அன்புள்ள,
> பிரின்ஸ்

அஞ்சு கடிதத்தை மடக்கி உறைக்குள் வைத்தாள். ரூபாவின் ஒளிரும் முகத்தைக் கூர்ந்து நோக்கி, ''நாளை இரவு நீ அவனைக் காணப் போவாயா?'' என்று கேட்டாள்.

''போகத்தானே வேண்டும்? எத்தனை அன்போடு இந்தப் பரிசை அனுப்பியிருக்கிறார்? அதோடு இதுபோன்ற நல் இரவுகள் காதலர்களின் வாழ்க்கையிலே அடிக்கடி வரக் கூடியவையா என்ன?'' என்று கேட்டாள் ரூபா.

''யூ ஆர் ரைட், ரூபா! இதைவிட நேர்த்தியான தருணங்கள் நமக்கு இலேசில் கிடைக்காது. நாங்களும் உன் பிரின்ஸை நாளை பார்க்க வரலாம் அல்லவா?''

''ஓ, நோ!'' ரூபாவின் மனப் பதற்றம் குரலிலும் நன்றாகத் தெரிந்தது. (தொடரும்)



வேறு எந்த ஆரோக்கிய பானமும்
பரிபூரணமானது
அல்ல.
துடிப்புடனும்
சக்தியுடனும் விளங்க
உங்களுக்குத் தேவையான
இந்த 23 அத்தியாவசிய ஊட்டச்
சத்துக்கள் நிறைந்த
பரிபூரண பானம்
காம்ப்ளான்®
ஒன்றுதான்.
புரதம்
கார்போஹைட்ரேட்
கால்ஷியம்
லிப்பிடுகள்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு (cl வடிவில்)
பொட்டாஷியம்
இரும்பு சத்து
அயோடின்
வைட்டமின் 'ஏ'
வைட்டமின் பி1
ரிபோஃப்ளேவின்
நிகோடினமைடு
கால்ஷியம்
கோலின்
பென்டோதெனேட்
பைரிடாக்ஸின் (பி6)
வைட்டமின் பி12
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் ஸி
வைட்டமின் டி
வைட்டமின் ஈ
வைட்டமின் கே
அதோடு, இதர சிறுசிறு பொருட்கள், உடல் சீராக ஆரோக்கியமாக இயங்க உதவும்.
பாலையும் விட இன்னும் அதிகமான வைட்டமின்கள், புரதம், கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும் இதர அத்தியாவசிய ஊட்டச் சத்துக்களை காம்ப்ளான் அளிக்கிறது.
'பரிபூரண' போஷாக்கிற்கு டாக்டர்களால் பெரிதும் சிபாரிசு செய்யப்படுவது
சாப்பிட நேரமில்லையா?
சாதாரண ஆரோக்கிய நிலையில்
சரியாக சாப்பிடுவதில்லையா?
நோயால் சக்தி இழந்துவிட்டீர்களா?
காம்ப்ளான்
Glaxo
Complan
ECONOMY PACK
CMGC.16-303 TM


சிலைகள் பல, சிரிப்புக்கள் சில!
சிலை மயமான எதிர்காலம் நம் சிந்தையில் தெரிகிறது! என்று சிந்து பாடி மகிழ விரும்புகிறவர்களுக்கென இதோ:
''யார் சிலை சார் இது?'' ''இவர் ஒரு முன்னாள் அமைச்சர்...... இந்த நாட்டு மக்களுக்கு இவர் ஓர் அரிய சேவை பண்ணினார்........'' ''சிலை வைக்கும்படியா அப்படி என்ன பண்ணினார் ?'' ''பதவியேற்ற அன்றைக்கே ராஜிநாமா பண்ணிட்டார்!........''
''யார் இவர்?.... எதுக்காக இப்படி ஒற்றைக் காலிலே நிக்கிற மாதிரி சிலை பண்ணியிருக்காங்க?......'' ''இந்த ஊரிலே இருக்கிற எல்லாச் சிலைகளும் அப்புறப்படுத்திடணும்னு ஒத்தைக் காலிலே நின்னு, போராடி, வெற்றியும் அடைந்தாராம் இந்தப் பிரமுகர்!.....''
முன் யோசனையுள்ள ஒரு பிரமுகர் கொடுத்த போஸ்!
''எதுக்காக முகம் தெரியாதபடிக்கு இந்தச் சிலையைச் செதுக்கியிருக்காங்க?'' ''அந்தப் பிரமுகருக்குச் சுய விளம்பரம்னாலே பிடிக்காதுங்க...... ஆனாலும் அவருடைய நண்பர்கள் ரொம்ப வற்புறுத்தியதாலே இப்படிப் போஸ் கொடுத்திருக்காரு.......!''
''பத்தாயிரம் ரூபாய் செலவிலே உங்களுக்கு ஒரு சிலை வைக்கலாம்னு இருக்கோம்...... என்ன சொல்றீங்க?'' ''அந்தப் பத்தாயிரத்தை என்கிட்டே கொடுங்க; நானே அந்த இடத்திலே சிலைபோல் வந்து நிக்கறேன்!''
''என்ன இது, அமைச்சர் குளிக்கிற மாதிரி சிலை பண்ணியிருக்காங்க?......'' ''அவர் ரொம்ப பிஸி ஆசாமி...... அதனாலே குளிக்கிற போதுதான் போஸ் கொடுக்க முடிஞ்சுதாம்..........!''

3. தமிழிசை இயக்கம்

— .... சந்தம் எழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடும்தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர் - கவிமணி

“சங்கீத யோகம்'' என்ற தலைப்புடன், கல்கிப் பத்திரிகையின் இரண்டாவது இதழில், அதன் ஆசிரியர் எழுதிய கட்டுரை ஒன்று வெளியாயிற்று— ''ஆடல் பாடல்'' பகுதியில் ''கர்நாடகம்'' என்ற புனைபெயரில். 16-8-41 தேதிய அந்த இதழ் விநியோகமான அதே சமயத்தில், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் ஆதரவிலும், நன்கொடையுடனும், சங்கீத வித்வான்கள் மகாநாடு ஒன்று, அவர் நிறுவியதும் அவர் பெயரில் வழங்குவதுமான பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. அந்த மகாநாடு கூடியதைத்தான் சங்கீதத்துக்கு வாய்த்த யோகமாகக் கல்கி குறிப்பிட்டார்.

பொன்னியின் புதல்வர்



சுந்தா


நமிழகக் கலை வரலாற்றில் ''சிதம்பரம் மகாநாடு'' என்று புகழ்பெற்ற அந்த மகாநாட்டில், ரசிகமணி டி.கே.சியுடன் கல்கியும் கலந்து கொண்டார்.


அந்த மகாநாடு இயற்றிய தீர்மானம் ஒன்று, ''தமிழ் நாட்டில் தமிழர்களுக்காக நடக்கும் சங்கீதக் கச்சேரிகளில், தமிழ்ப் பாட்டுக்களுக்கு முக்கியமும், கௌரவமும் கொடுத்துப் பாடச் செய்ய வேண்டும்'' என்று சங்கீத சபைகளையும் அவைகளை ஆதரிப்பவர்களையும் கேட்டுக் கொண்டது.

அந்தத் தீர்மானத்தை எதிர்த்தும், கண்டித்தும் சென்னையில் கூட்டங்கள் நடந்தன. அவற்றில், சில சங்கீத வித்வான்களுடன், டி. எல். வெங்கட்ராமய்யர், டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற சங்கீத ரசிகர்கள், போஷகர்களும் கலந்து கொண்டார்கள். அவர்களுடைய எதிர்ப்பைக் கண்ட கல்கி, ''தமிழ்ப் பாட்டு இயக்கத்துக்கு விரோதமாக எப்போது எதிர்ப்புக் கூட்டங்கள் போட்டாகி விட்டதோ, அப்போது அதன் வெற்றியைப் பற்றிக் கவலையே வேண்டியதில்லை'' என்று எழுதினார்.

சிதம்பரம் மகாநாட்டை அடுத்து, இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அதே நோக்கத்துடன் தேவகோட்டையிலும் ஒன்று நடந்தது. சா. கணேசன், சின்ன அண்ணாமலை, டி. ஆர். அருணாசலம் முதலிய இளைஞர்கள் நடத்திய அந்த மகாநாட்டுக்கும், ராஜா அண்ணாமலைச் செட்டியார் ஆதரவும் உதவியும் அளித்தார்; அவரே அதைத் தொடங்கியும் வைத்தார். தலைமை வகித்தவர் டி.கே.சி. முதல் மகாநாட்டில் நிறைவேறிய அதே தீர்மானம் தேவகோட்டை மகாநாட்டிலும் நிறைவேறியது.

மகாநாட்டின் நோக்கத்தைச் செயல் வடிவில் நிறைவேற்றியது, எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரி. தமிழிசை இயக்கத்தின் ஆரம்ப வெற்றி என்று அதைக் கல்கி கொண்டாடி விமரிசனம் செய்தார் :





KALKI

DEEPAVALI SPECAIL NUMBER

இந்தக் கச்சேரி மூன்றரை மணி நேரம் நடந்தது. ஆரம்ப முதல் கடைசிவரையில் எல்லாம் தமிழ்ப் பாட்டுக்கள்தான். தமிழ்ப் பாட்டுக்கள் என்றால் துக்கடாக்கள் அல்ல; டாக்கிப் பாட்டுகளும் அல்ல. விஸ்தாரமான நிரவல், ஸ்வரங்களுடன், பாடக்கூடிய ஒன்பது தமிழ்க் கீர்த்தனங்கள்...

இனிய குரலில் எம். எஸ். நமது அற்புதமான கர்நாடக ராகங்களுக்கு உயிரும் உருவமும் கொடுத்து நம் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறார். சுருதியோடு இழைந்து கார்வை கொடுத்துப் படிப்படியாக மேலேறி ராகங்களின் ஜீவ ஸ்வரங்களைக் கான மழையாகப் பொழியும் சக்தியை அவரிடம் காண்கிறோம்.



இவ்வளவு இனிமையுடனும் வித்வத்துடனும் தமிழும் கலந்துவிட்டால் கேட்கவேண்டுமா?


முதல் பகுதியிலெல்லாம் கச்சேரியில் வித்வத் ததும்பிக் கொண்டிருந்தது... பல்லவி ராகம் முடிந்து பின்பகுதிக்கு வரும்போது, பாட்டு, பக்க வாத்தியம் என்பதெல்லாம் மறந்து போய்விட்டது. தமிழும், இசையும், சபையோரின் உள்ளமும் ஒன்றாய்க் கலந்துவிட்டன. கடைசியில் ''யாமறிந்த மொழிகளிலே'' என்ற பாரதியார் பாட்டைக் கேதார கௌளை ராகத்தில் பாடி எடுத்தபோது, பழனி ஆண்டவருக்குக் காவடி எடுக்கையில் பக்தர்களுக்கு உண்டாகும் ஆவேசத்தைப் போல், சபையில் பலருக்கு ஆவேசமே உண்டாகிவிட்டது. ''தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்பதில் நின்று அபூர்வ சங்கதிகளைப் போட்டுக் குலுக்கியபோது, சபையிலிருந்த ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ''ஆம் ஆம்'' என்ற எதிரொலி உண்டாயிற்று. (கல்கி இதழ் 1-11-41)

அவ்வித இசையும் எதிரொலியும், தேவகோட்டையைத் தொடர்ந்து, மற்றும் பல ஊர்களில், அவ்வித மகாநாடுகளிலும் விழாக்களிலும் எழுந்தன.

1943 மே மாதத்தில் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரின் துணையுடன், தமிழ் இசைச் சங்கத்தை நிறுவினார். அந்தச் சங்கத்துக்கு அவர்கள் இருவரும் தாமே தாராளமாய் வழங்







1. '' என்றுமுள தமிழிசைக்கு மன்றம் எழுந்தது காணீர் !''

2. சமரச ஏற்பாட்டினைத் தெரிவித்து அரியக்குடிக்குக் '' கல்கி '' எழுதிய கடிதம். (உதவி : ரோஜா முத்தையா)

3. 1943ல் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரின் துணையுடன் தமிழிசைச் சங்கத்தை நிறுவினார்.

4. '' உண்மையில் தமிழிசை இயக்கத்தை ஆரம்பித்து அதற்கு அஸ்திவாரம் போட்டுத் திறப்பு விழாவும் நடத்தியவர் ரசிகமணி அவர்கள்தான்.''

5. '' தமிழிசை இயக்கம் மிகத் தீவிரமான எதிர்ப்புக்கு உள்ளான போது அது அடியோடு விழுந்துவிடாமல் தாங்கி நிலைநாட்டியவர்கள் என் நண்பர் ஸ்ரீ டி. சதாசிவமும் அவருடைய மனைவியார் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களும்தாம்.''

யும் பிறரிடம் திரட்டியும் நான்கு லட்சம் ரூபாய் நிதி அமைத்தார்கள்.

அச்சங்கத்தின் ஆதரவில், முதலாவது தமிழிசை மகாநாடு, அந்த ஆண்டு இறுதியில், ஒரு பெரிய திருவிழாவைப் போல் பன்னிரண்டு நாட்கள் நடைபெற்றது. அதற்குத் தலைமை வகிப்பதற்காக டி. கே. சிதம்பரநாத முதலியார் குற்றாலத்திலிருந்து வந்தபோது, அவரை எழும்பூர் நிலையத்தில் பல அன்பர்களுடன் சேர்ந்து மாலை இட்டு வரவேற்றார் கல்கி. தமது பத்திரிகையின் அடுத்த இதழின் அட்டையில் அவருடைய வருகைத் தோற்றத்தை வெளியிட்டு, ''தமிழர் பண்பாட்டின் உருவம்'' என்று அவரை வர்ணித்தார். அதற்கும் அடுத்த புத்தாண்டு இதழில், அந்த மகாநாட்டின் சிறப்பைச் சிறப்புத் தமிழில் வர்ணித்தார்:

ஆதி சிவன் பெற்று, ஆரிய மைந்தன் வந்து பணி செய்த தமிழ்த் தாயை வாழ்த்துகிறேன். மூன்று குலத் தமிழ்வேந்தர்கள் போற்றி வளர்த்த தமிழ்த் தாய்க்கு வாழ்த்துக் கூறுகிறேன். தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ் நாட்டிலே வளர்ந்து தமிழ் நாட்டிலே சிறந்த கர்நாடக சங்கீதக் கலையை வாழ்த்துகிறேன். கர்நாடக சங்கீதத்தின் அன்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறுகிறேன்.

அன்றொரு நாள் பாரதியார் தமிழ்த் தாயின் வாயிலாகப் புலம்பினார்:

''..... என்றந்தப் பேதை உரைத்தான்!
இந்த வசை எனக்கு எய்திடலாமோ!''

எதைக் குறித்துப் பாரதியார் இவ்விதம் வருந்தினார்? ''மேல் நாட்டுப் புதுக் கலைகளைத் தமிழில் சொல்ல முடியாது. சொல்லும் சக்தி தமிழுக்கு இல்லை'' என்று யாரோ ஒரு பேதை உரைத்தது பாரதியாரின் காதில் விழுந்தது. உடனே அவருக்குக் கோபம் மூண்டது. ''கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!'' என்று வெதும்பினார்.

தமிழ்த் தாயின் மேல் ஏற்பட்ட வசைகளுக்குள்ளேயே மிகக் கொடியது, ''தமிழ் மொழி சங்கீதக் கலைக்கு இசைந்த பாஷை இல்லை'' என்பதாகும். கூறத் தகாதவர் கூறிய இந்தக் கொடிய வசையானது சென்னையில் கூடிய தமிழிசை மகாநாட்டு இன்னிசை வெள்ளத்தில் முழுகியே போய்விட்டது.

அந்த மகாநாட்டின் மேடையில் ராஜாஜி, ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் ஷண்முகம் செட்டியார், வி. என். அண்ணாதுரை, பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோரிடையே உரை நிகழ்த்தும் பெருமையைக் கல்கி அடைந்தார்.

பன்னிரண்டு நாட்களில் நடந்த பதிமூன்று கச்சேரிகளில், குரலிசைக் கலைஞர்கள் எட்டுப் பேர்: எம். எஸ். சுப்புலக்ஷ்மி, டி. கே. பட்டம்மாள், வசந்தகோகிலம், கே. பி. சுந்தராம்பாள், மதுரை மணி ஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம், தண்டபாணி தேசிகர், எம். கே. தியாகராஜ பாகவதர்.

இவர்கள் எல்லாரும், சங்கத்தின் நிபந்தனைப்படி, தொடக்கத்திலும் முடிவிலும், இடையில் பெரும்பாலும் தமிழில் பாடிக் கச்சேரி செய்தார்கள். இவர்களுடன் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், முசிரி சுப்பிரமணிய ஐயர், செம்மங்குடி சீனிவாச அய்யர் ஆகியோர் தமிழிசைக் கச்சேரி செய்யவில்லையே என்று கல்கி வருத்தப்பட்டார்.

அவர்களில் ராமானுஜ அய்யங்கார், தமது குரு பூச்சி சீனிவாச அய்யங்காரின் கட்டளைப்படி தொடக்கத்தில் மட்டும் ஒரு தெலுங்கு வர்ணம் பாடிவிட்டு, மற்று எல்லாவற்றையுமே தமிழ்ப் பாட்டுக்களாய்ப் பாடத் தயாராயிருந்தார். தமிழிசைச் சங்கத்தின் நிபந்தனைக்கும் அய்யங்காரின் குரு பக்திக்கும் பங்கம் இல்லாதபடியான யோசனை ஒன்றைக் கல்கி தெரிவித்து அவருக்கு ஒரு கடிதம் எழுதினார்:

(சென்னை 16–11–43)... குருவினுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வது மிகவும் முக்கியமான விஷயம்தான். ஆனால், ''மாதா பிதா குரு தெய்வம்'' என்று பெரியோர்கள் முதலில் மாதாவை வைத்திருக்கிறார்கள். தமிழ் நமக்கெல்லாம் தாய் பாஷை அல்லவா? தாய் மொழிக்கு மரியாதை செய்வதும் அவசியந்தானே?

தங்களுடைய விரதத்துக்குப் பங்கம் இல்லாமல் தாங்கள் இவ்விதம் செய்யலாம் என்பது என் யோசனை:


அதாவது கச்சேரியின் ஆரம்பத்தில் பக்க வாத்தியங்கள் இல்லாமல் ஆழ்வார்களின் பாசுரம் ஒன்றைப் பாடுங்கள். பிறகு, பக்க வாத்தியங்களுடன் வர்ணம் ஆரம்பித்துப் பாடுங்கள். இடையில் இரண்டு தியாகராஜ கீர்த்தனங்களும் சேர்த்துக் கொண்டு பாடலாம்.

மேற்கண்ட யோசனையைத் தாங்கள் அவசியம் ஒப்புக்கொண்டு தமிழிசை மகாநாட்டில் கச்சேரி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்விதம் தாங்கள் செய்தால் தமிழ் நாட்டில் அனாவசியமாக வளர்ந்து கொண்டிருக்கும் சங்கீத விவாதம் முடிவடையும்....

இந்த யோசனையை அய்யங்கார் ஏற்கவில்லை.



ஒரு முட்டாளை இனம் கண்டுகொள்ள ஆறு லட்சணங்கள்: காரணமே இல்லாமல் கோபம்; பயனில்லாத பேச்சு; முன்னேற்றத்துக்கு உதவாத மாறுதல்; குறிக்கோள் இல்லாத விசாரணை; முன்பின் தெரியாதவரிடம் நம்பிக்கை வைத்தல்; நண்பர்களை விரோதிகளாகக் கருதுதல்.
- ஓர் அராபியப் பழமொழி. - 'பாணன்'.



கட்டழகு வதனத்தில்
ஸ்ரீ குங்குமம்
பொட்டழகு பொலிந்திட
Shree KUMKUM
Shree KUMKUM DELUXE
ஸ்ரீ காஸ்மெடிக்ஸ்
19. கௌரவ்
இண்டிஸ்ட்ரியல் எஸ்டேட்.
குர்லா, பம்பாய் 400 070
தந்தி: SRICOSMO

தமிழிசைக்கு ஒரு பக்கம் ஆதரவும், இன்னொரு பக்கம் எதிர்ப்பும் வளர்ந்து கொண்டிருந்தன. சங்கீத வித்வத் சபையின் எதிர்ப்புப் பலமாகவே இருந்தது.

தமிழிசை சம்பந்தமான விவாதத்தில் கல்கி பெருவாரியாக ஈடுபட்டு, அந்த இயக்கத்துக்கு ஆதரவாக நயந்தும், சினந்தும், நகைத்தும், நகைப்பூட்டியும் பல கட்டுரைகள் எழுதினார். அவற்றில் இருபத்தேழு கட்டுரைகளைப் பின்னர் சின்ன அண்ணாமலை தொகுத்து, ''சங்கீத யோகம்'' என்ற மகுடத்துடன் தமது தமிழ்ப் பண்ணைப் புத்தகமாக வெளியிட்டார்.

அந்த விவாதத்தில் ஈடுபட்டிருக்கையிலேயே, திருச்சி வானொலி நிலையத்தின் மீது ஒரு சாடு சாடினார் கல்கி. அதன் ஒலிபரப்புக்களில் தமிழ்ப் பாட்டுக்கள் குறைவாய் இருந்ததை அவர் சுட்டிக் காட்டி, அந்த நிலையம் யாருக்காக, எதற்காக நடக்கிறது என்று கேட்டார். அதைக் காவிரிக் கரையிலிருந்து கோதாவரிக் கரைக்கே அனுப்பி விடலாமே என்றார். அந்தத் தாக்குதலுக்குப் பக்க பலமாய் வந்த ஏராளமான கடிதங்களை அவர் வெளியிட்டார். அவருடைய அந்தப் பிரசாரப் போருக்கு உடனேயே ஓரளவு நற்பலன் கிடைத்தது.

1946ம் ஆண்டுத் தொடக்கத்தில் பொதுவாகத் தமிழிசை இயக்கத்துக்கும் நற்பலன் கிடைத்தது. அதுவரை பிணங்கி இருந்த முசிரி சுப்பிரமணிய ஐயர், புத்தாண்டு தினத்தில் தமிழிசைச் சங்கத்தின் விழாவில் கச்சேரி செய்தார். அதைக் கல்கி, தமிழ்க் கலை உலகில் சமரசத்தை நிலைநாட்டிய சிறப்பான சம்பவம் என்று பாராட்டி எழுதினார். அந்தப் பாராட்டுக் கட்டுரையின் தலைப்பு, ''முற்றுப்புள்ளி'' – அதாவது தமிழிசை விவாதத்தின் முடிவைக் குறிக்கும் புள்ளி.


அதுவே ''சங்கீத யோகம்'' நூலின் இறுதிக் கட்டுரையுமாகும். அந்த நூலின் முகவுரையில், இரண்டு பேர்களின் வகையான ஆதரவைச் சிறப்பாகக் கல்கி குறிப்பிட்டுள்ளார்:

தமிழிசை இயக்கத்துக்கு ஆதரவு தந்து உதவி புரிந்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கத்தான் இருக்கிறார்கள். எனினும் தமிழிசை இயக்கம் மிகத் தீவிரமான எதிர்ப்புக்கு உள்ளாகி இருந்தபோது, அது அடியோடு விழுந்து விடாமல் தாங்கி நின்று நிலைநாட்டியவர்கள் யார் என்பதை உண்மையாகச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய நண்பர் ஸ்ரீ சதாசிவமும் அவருடைய மனைவியார் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களும்தான் என்று சொல்ல வேண்டும்.

ஸ்ரீமதி எம். எஸ். பழைய கர்நாடக சங்கீத வித்வத் பரம்பரையைச் சேர்ந்தவர். தியாகராஜ கிருதிகள், தீக்ஷிதர் கீர்த்தனங்கள், தெலுங்கு ஜாவளிகள், பதங்கள் ஆகியவற்றில் குழந்தைப் பிராயம் முதல் பயிற்சி பெற்று அபிமானமும் கொண்டவர். நமது சங்கீத வித்வான்களில் பெரும்பாலோரைப் போல் அவரும் ஸ்ரீ தியாகராஜரையே சங்கீத பரமாச்சாரியாராகக் . கொண்டிருப்பவர். தியாகராஜ ஆராதனை தினத்தன்று அவர் பயபக்தியோடும் ஆசார அனுஷ்டானத்தோடும் பூஜை முதலியவைகள் செய்து தியாகராஜ கீர்த்தனங்களை ஆத்மார்த்தமாகப் பாடி மெய்ம்மறந்திருப்பது வழக்கம்.

அத்தகையவர் தமிழிசை இயக்கத்தின் நியாயத்தை உணர்ந்து உற்சாகத்துடன் அவ்வியக்கத்தில் ஈடுபட்டார். புதிது புதிதாகப் பல தமிழ்க் கீர்த்தனங்களைக் கற்றுக் கொண்டும், தாமாகவே மெட்டுகள் அமைத்துக் கொண்டும் கச்சேரிகளில் பாடிப் பிரபலப்படுத்தினார்.

''கச்சேரிகளில் பல்லவிக்கு முன்னால் தமிழ்ப் பாட்டுப் பாடக் கூடாது; அப்படிப் பாடினாலும் ஒன்று இரண்டுதான் பாடலாம்'' என்னும் நிர்ப்பந்தத்தை ஒப்புக்கொள்ள



காண்டேகர் காண்க!

பிரபல மராத்தி எழுத்தாளர் திரு வி. எஸ். காண்டேகருக்கு, 1974ம் ஆண்டுக்கான ஒரு லட்ச ரூபாய்ப் பரிசைப் 'பாரதீய ஞான பீடம்' அளித்துள்ளது.

காண்டேகர், எழுதத் தொடங்கும் முன்பு உலாவச் செல்வார். அப்படி ஒரு முறை கிருஷ்ணா நதிக் கரையில் உலாவச் சென்றிருந்த போது விஷப் பாம்பு ஒன்று அவரைத் தீண்டிவிட்டது. அந்தப் பாம்புக் கடியால் அவருக்குத் தலைவலி வந்து விட்டது! அதைப் போக்கிக் கொள்ளத் தினமும் தாமே ஊசி போட்டுக் கொள்கிறார்.

ஊசி மருந்தைச் செலுத்தாவிடில், அவருக்குத் தலைவலி வந்துவிடுகிறதாம்!

காண்டேகர் ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தில், அவ்வப்போது தோன்றும் கற்பனைகளை எழுதி வைத்துக் கொள்பவர். அதிலிருந்து ஆயிரக்கணக்கான கதைகள், பல நாவல்கள் எழுதலாம்!

ஆதாரம்: கா.ஸ்ரீ.ஸ்ரீ. எழுதிய 'நான் கண்ட நாவலாசிரியர்'

பிரசுரம்: 'புத்தக உலகம்' — ஏ. சுவாமிநாதன்

மறுத்து. அவ்வாறு கட்டாயப்படுத்தும் சங்கீத சபைகளில் கச்சேரி செய்யவும் மறுதளித்தார்.

1947ல் எழுதிய அதே முகவுரையின் இன்னொரு பகுதியில், உரிய ஒருவருக்கு உரிய பெருமை அளித்தார் கல்கி:

உண்மையில் தமிழிசை இயக்கத்தை ஆரம்பித்து, அதற்கு அஸ்திவாரம் போட்டுத் திறப்புவிழாவும் நடத்தியவர் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்தான். தமிழ் நாட்டில் சென்ற பதினைந்து ஆண்டுகளில் தமிழ்ப் பற்று வளர்ந்து பெருகுவதற்கும், உண்மைக் கவிதை உணர்ச்சி பரவுவதற்கும், தமிழகத்தின் பழம் பெரும் செல்வமான பரதநாட்டியக் கலை புத்துயிர் பெறுவதற்கும் ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் எப்படிப் பொறுப்பாளியோ, அதுபோலவே தமிழிசை இயக்கத்துக்கும் அவரே பொறுப்பாளியாவார்.

தமிழிசைக்கு டி.கே.சி.தான் அஸ்திவாரம் போட்டார் என்பது உண்மையே. எங்கே எப்போது அதைப் போட்டார் என்றால் — கல்கியின் மனத்திலே 1933 ஆம் ஆண்டு வாக்கில் போட்டார். அந்தக் காலத்தில் டி. கே. சி.யும் கல்கியும் சேர்ந்தே சங்கீதக் கச்சேரிகளுக்குச் செல்வார்கள். அப்போதெல்லாம் முன்னவர் புரியாத மொழிகளில் கீர்த்தனை கேட்பதில் உண்டாகும் அலுப்பையும், தமிழ் பாடல்களைக் கேட்பதில் உண்டாகும் ஆனந்தத்தையும் சொல்லிக்கொண்டே இருப்பார். அவருடைய கருத்து கல்கிக்கு உடன்பாடாய் இருந்ததோடு, அவரே பிள்ளைப் பருவம் முதல் எண்ணி வந்ததாயும் இருந்தது. சிறிது காலத்துக்குப் பிறகு, தமிழிலும் இசையிலும் பற்றும் தேர்ச்சியும் கொண்ட ஹரிஜன் தம்பதியரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அந்நால்வரும் இணைந்தும் தனித்தனியாகவும் தமிழிசைப் பிரசாரம் செய்தார்கள்.— சாஸ்திரியின் மனைவியார் விசாலாட்சி அம்மாள், தாமே உதாரணமாய்ப் பாடிக் காட்டிப் பிரசாரம் செய்தார்; மேடைப் பேச்சின் மூலம் டி. கே. சி.; எழுத்து மூலம் கல்கி. அவ்விதப் பொது பிரசாரத்துடன் அவர்கள் நிற்காமல், நேரிலும் பாடகர், பாடகிகளை அணுகி, தமிழ்ப் பாட்டுக்களை அதிகமாகப் பாடும்படி வற்புறுத்தினார்கள்.

அந்த நால்வரில் கல்கியே மிக அதிகமாகப் பிரசாரம் செய்தார், செய்ய முடிந்தது. கையிலே சக்தி வாய்ந்த பேனா இருந்தது; செலாவணி மிக்க பத்திரிகை ஒன்றும் இருந்தது.

கல்கியின் அக்காலத் தமிழிசைப் பிரசாரத்துக்கு உதாரணமாக 17—12—33 தேதிய ஆனந்தவிகடனில் அவர் எழுதிய ஒன்றைப் பார்க்கலாம்:

...எல்லாவற்றிலும் முக்கியமான சீர்திருத்தம், கச்சேரிகளில் இப்போது தமிழ் மொழியை ஹரிஜனங்களைப் போல் ஒதுக்கி வைத்திருக்கிறார்களே, அதை மாற்றுவது தான்.

சூரியன் மேற்கே உதித்தாலும் உதிக்கும்; இமயமலை ஆகாயத்தில் பறந்தாலும் பறக்கும். ஆனால் நமது சங்கீத வித்வான்கள் ராகம் பல்லவிக்கு முன்னால் தமிழ்ப் பாட்டுப் பாட மாட்டார்கள். பாடினால் மண்டை வெடித்துப் போகும் என்று சாபம் ஏதாவது உண்டோ, என்னமோ? இந்த மூட சம்பிரதாயத்தின் அடிமைத் தனத்திலிருந்து நமது சங்கீதக் கலையை விடுதலை செய்ய வேண்டும்...

சங்கீதத்தின் உயிர் பாவம் அல்லவா? பொருள் தெரியாத சங்கீதத்தில் பாவம் எப்படி இருக்கும்? ஒருவேளை வித்வான் பொருள் தெரிந்து பாவத்துடன் பாடினாலும், கேட்கிறவர்கள் அதை எப்படி நன்கு அநுபவிக்க முடியும்?...

எந்தப் பிரபல சங்கீத வித்வான் ராகம் பாடுவதற்கு முன்னால் தமிழ்க் கீர்த்தனம் பாடி முதன் முதலாக வழி காண்பிக்கப் போகிறாரோ, அவர் சங்கீதத்துக்கும் தமிழுக்கும் ஒரு மகத்தான ஊழியத்தைச் செய்தவராவார். அத்தகைய பாக்யத்தையும் பெருமையையும் எந்த வித்வான் அடையப் போகிறாரோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கல்கியின் அந்த ஆவல் விரைவிலேயே நிறைவேறியது — இரண்டே வாரத்தில். ஏற்கனவே குறிப்பிட்ட தமிழ் அன்பர் மகாநாட்டை 'யொட்டி, முத்தைய பாகவதர் விளக்க உரைகளுடன் இசைக் கச்சேரி நிகழ்த்தினார். அதில் அவர் பல்லவிக்கு முன்னால் மட்டும் அல்ல, முழுக்க முழுக்கத் தமிழ்ப் பாட்டுக் களையே பாடினார்.

அந்தக் கச்சேரி நிகழ்ந்த நாளை, ''தமிழ் நாட்டில் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் மறுமலர்ச்சி வரலாற்றில் ஒரு முக்கியமான தினம்'' என்று கல்கி மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டு எழுதினார்.

ஆனால் அந்த முக்கிய தினம் ஒரே நாள் திருநாளாக நின்று போயிற்று. முத்தையா பாகவதரைத் தொடர்ந்து வேறு யாரும் தமிழிசைக் கச்சேரி செய்ய வில்லை. சில வித்வான்கள் மட்டும், ''கர்நாடகம்'' பாராட்டி எழுதுவார் என்ற எண்ணத்துடன் இன்னும் கொஞ்சம் தமிழ்த் துக்கடாக்களைச் சேர்த்துக் கொண்டார்கள்.

கல்கியும் சளைக்காமல், டி. கே. சி. யின் மூல பலத்துடனும், சாஸ்திரி தம் பதியரின் பக்கபலத்துடனும், தமிழிசைப் பிரசாரத்தை ஒவ்வொரு ''ஆடல் பாடல்'' பகுதியிலும் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தார்.

அந்த ஆனந்த விகடன் நாட்களை முன் குறிப்பிட்ட ''சங்கீத யோகம்'' கட்டுரையின் தொடக்கத்தில் கல்கி திரும்பிப் பார்த்து நினைத்துக் கொண்டார்:

''கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்கள் அதிகம் பாடவேண்டும்'' என்ற பல்லவியைச் சில சிநேகிதர்களுடன் நானும் வெகு நாட்களாய்ப் பாடிக்கொண்டு வந்திருக்கிறேன்... பலன் கொஞ்சம் ஏற்படத்தான் செய்தது; ஆனால் போதிய அளவு இல்லை. செவிடன் காதில் ஊதிய சங்காக முடியுமோ என்றுகூடச் சந்தேகப்படும்படி இருந்தது.

ஆனால், எதிர்பாராத முறையில் இந்தக் கட்சிக்குப் பிரமாதமான ஆதரவு இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஒரு பெரிய தனவந்தர் —தமிழ் நாட்டிலேயே பெரிய தனவந்தர் என்றுகூடச் சொல்லலாம் — தமிழ்ப் பாட்டுக் கட்சியை ஆதரிக்கத் தொடங்கி யிருக்கிறார்... தமிழுக்கு யோகம்தான் — கேட்பானேன்? சங்கீதத்துக்கே யோகம்தான்!

இதில் குறிப்பிட்டுள்ள ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார், அவரைப் போலவே தமிழ்ப் பற்றுடைய செல்வந்தர்கள், செல்வாக்கு உடையவர்கள், ஆள் கட்டும் நிறுவனக் கட்டும் உடையவர்கள் — இவர்களுடைய ஒருமித்த பலத்தினால் ஆக்கமும் ஊக்கமும் கொண்டதாய்த் தமிழிசை இயக்கம் வளர்ந்து வெற்றி அடைந்தது. அவர்களுடன் சேர்ந்து அதற்குத் துணை புரிந்த பெருமையுடன், முன்பு ஏழு வருட காலம் தமது பேனா பலம் ஒன்றினாலேயே முன்னோடியாய் ஆயத்த இயக்கம் ஒன்றை நடத்திய பெருமையும் கல்கிக்கு உரியது.


''இசை வளர்த்த சான்றோர்'' என்ற மகுடத்துடன் கல்கியின் உருவப் படம், 1967ல் தமிழிசைச் சங்கத்தின் வெள்ளி விழா மலரில் வெளியாயிற்று. சங்கத்தின் பண் ஆராய்ச்சிக் குழுவின் ஆரம்ப உறுப்பினர் என்ற முறையில் அவருடைய பெயரும், பணியும் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன. 1974ல் வெளியான பண் ஆராய்ச்சி வெள்ளி விழா மலரின் முன்னுரையில், ராஜா முத்தைய செட்டியார், தமிழிசை இயக்கத்தில் தமது தந்தையார் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாருக்கு ஒத்துழைப்பும் உதவியும் நல்கியவர்களில் ஒருவராகக் கல்கியை நினைவுகூர்ந்துள்ளார்.

இவை யெல்லாம் தமிழிசைக்குக் கல்கி செய்துள்ள அரும் பணிக்கு ஓர் அங்கீகாரம்தான். ஆனால், இவற்றுக் கெல்லாம் மேலான அங்கீகாரம், தமிழிசையைக் கேட்குந்தோறும், கல்கியை அறிந்தவர்களின் இதயத்தில் அவரைப் பற்றிய நினைவு — இசை எழுகிறதே, அதுதான்.

தமிழிசைச் சங்கத்தின் பணிகளில், தமது இறுதிக் காலம் வரை, பதினொரு ஆண்டுகள் கல்கி ஈடுபட்டிருந்தார். அதன் வளர்ச்சியின் ஒரு சிறப்பான கட்டம், 1952 இறுதியில், தமிழிசைக்கு ஓர் ஆலயமாகவும், தமிழிசைச் சங்கத்தை நிறுவியவருக்கு ஒரு நினைவுச் சின்னமாகவும், சென்னை நகரில் ராஜா அண்ணாமலை மன்றம் எழுந்ததாகும். அந்த மன்றத்தில் முதலாவதாக நடைபெற்ற தமிழிசை விழாவை முன்னிட்டுத் தமது பத்திரிகையின் 19–4–53 தேதி இதழை ஒரு சிறப்பு மலராகக் கல்கி வெளியிட்டார்.

அந்த மலரிலே அவருடைய தனி நடையில் ஒரு தலையங்கம். அதற்கு அவர் சூட்டிய தலைப்பு: ''என்றும் உள தமிழிசைக்கு மன்றம் எழுந்தது காணீர்!''

(தொடரும்)



கைகளைக் கொண்டு உழைப்பவன் பாட்டாளி;
கைகளோடு மூளையையும் பயன்படுத்தி உழைப்பவன் தொழில் வினைஞன்;
கைகள், மூளை இவற்றுடன் இதயத்தையும் செலுத்தி உழைப்பவன் கலைஞன்!

-ஜாபி நிஸர் — 'பாளன்'

கொஞ்சம் துணைக்கு வருகிறீர்களா?

ஜோதிர்லதா கிரிஜா

என் கைக்கடிகாரத்தில் மணி ஏழரை ஆகிக் கொண்டிருந்தது. எட்டு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்து விடுவேன் என்று மாமாவிடம் சொல்லியிருந்தேன். என் மாமா இரவு பத்து மணிக்கு மேல்தான் வீட்டுக்குத் திரும்பி வருவார். ஆயினும் என் மாமி வாசலில் வந்து கவலையோடு நிற்கத் தொடங்கி விடுவாள். எட்டுமணிக்குள் நான் போய்ச் சேராவிட்டால் என்ற நினைப்பால் நானும் கவலைப்படலானேன். என் தோழி வாசுகியும் அவள் கணவரும்என்னுடன் துணைக்காகப் பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். நான் எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. நான் வண்டியில் ஏறுவதைப் பார்த்து விட்டுப் போவதாக அவர்கள் சொன்னார்கள். அன்று எங்கள் அலுவலகத்தில் ஒரு சின்ன ஆண்டுவிழா — மனம் மகிழ் மன்ற விழா. அதில் நான் பங்கு ஏற்கவில்லையாயினும் வேடிக்கை பார்த்ததில் நேரமாகி விட்டது. ஏழுக்கெல்லாம் முடிந்திருக்க வேண்டிய விழா தாமதமாகத் தொடங்கப் பெற்றமையால் ஏழரைக்குத்தான் முடிந்தது.

''குமரி தனிவழியே போனாலும் கொட்டாவி தனிவழியே போகாது என்பது சரியாகத்தான் இருக்கிறது'' என்றாள் வாசுகி.

''இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்தப் பழமொழி ஏற்பட்ட காலத்திலேயே கூடக் குமரிகள் தனிவழியே போயிருக்கிறார்கள் என்றுதானே? அதனால் நீங்கள் இருவரும் இப்போது உங்கள் வழியே போகலாம். நான் தனியாகப் போய்க் கொள்ளுவேன்'' என்றேன்.

பெஞ்சில் உட்கார்ந்திருந்த சுந்தரம் எழுந்து வந்தார். ''என்ன பேச்சு இது கம்மா, போகிறேன், போகிறேன் என்று? உங்களைத் தனியாக இங்கே விட்டு விட்டுப் போனால் அப்புறம் எங்களுக்கு நிம்மதியாக இருக்காது. உண்மையைச் சொல்லப் போனால் உங்களை வீட்டில் சேர்ப்பித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். ஆனால் இன்று நாங்கள் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டிய நிலையில் இருக்கிறோம். எங்கள் வீட்டுக்கு இன்றிரவு ஒரு விருந்தாளி—அதாவது சாப்பிடாத விருந்தாளி — வருவதாக இருக்கிறார்....''

நான் கவலையுடன் வாசுகியைப் பார்த்தேன். ''உண்மையாகத்தான் சங்கரி. சாப்பிடாத விருந்தாளிதான். உனக்காக அவர் அப்படிச் சொல்லவில்லை. வீட்டுக்குப் போய் ஒரு கறி மட்டும் செய்தால் போதும். இரவில் சப்பாத்திதான் சாப்பிடுகிறோம். அது கூட ஊரிலிருந்து வந்திருக்கும் என் தங்கை செய்து வைத்திருப்பாள்'' என்று வாசுகி சொன்னது எனக்கு ஆறுதலாகவா அல்லது உண்மையாகவேயா என்பது தெரியவில்லை. நான் பேருந்தின் வழித் தடத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

மணி எட்டே முக்காலை நெருங்கியபோது என் ஏழு நாடிகளும் ஒடுங்கி விட்டாற் போன்ற வலுக் குறைவுக்கு ஆளாகிப் போனேன். எங்கள் மாமாவின் வீடு கல்லூரி விடுதித் தெருவில் இருந்தது. அதை அடைய ஒன்று துரைசாமி முதலியார் தெரு வழியே செல்ல வேண்டும், அல்லது தண்டவாளத்தின் வழியே நடந்து ஒரு சின்னக் குட்டிச்சுவரின் மீது ஏறிக் குதிக்க வேண்டும். நான்தோறும் இரண்டாவதாகச் சொன்னதைத்தான் நான் காலையிலும் சரி, மாலையிலும் சரி செய்வது வழக்கம். ஏனென்றால் துரைசாமி முதலியார் தெரு வழியாகப் போவது சுற்றான வழி. அதிக நேரம் எடுக்கும்.

அவ்வாறு நான் அந்தக் கல்லூரி விடுதியை ஒட்டினாற்போல் ஓடும் தண்டவாளத்தை ஒட்டி நடக்கும்போதெல்லாம் விடுதியின் சுற்றுச் சுவருள் உட்கார்ந்து கொண்டிருக்கும் சில மாணவர்கள் ஏதாவது சொல்லி என்னை வம்புக்கு இழுப்பதுண்டு. ஆனால் நான் அவர்கள் பேச்சில் எதையுமே கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாமலும், குனிந்த தலை நிமிராதவாறும் அவர்களைக் கடந்து சென்று விடுவது வழக்கம். இயல்பாக முரட்டுத்தனமுள்ள நான் எப்படித்தான் என் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டிருந்தேனோ, எனக்கே தெரியாது. அவ்வாறு நான் நடக்கும்போது சில நேரங்களில், 'ஏரிக்கரை மேலே போறவளே பெண்மயிலே' என்ற பாட்டைச் சில மாணவர்கள் கூட்டாகப் பாடுவதுண்டு. இன்னும் சில நேரங்களில் 'ஹல்லோ மிஸ்... ஹல்லோ மிஸ், எங்கே போறீங்க?' என்ற பாட்டும் கேட்பதுண்டு. ஆனால் நான் திரும்பியே பார்ப்பதில்லை.


இதெல்லாம் இப்போது என் நினைவுக்கு வந்து என்னை அலைக்கழிக்கலாயிற்று. பகல் நேரத்திலேயே அவ்வளவு கொட்டம் அடிக்கும் அந்த மாணவர்கள் இரவு ஒன்பது மணிக்கு மேல் நான் அந்த ஒற்றையடிப் பாதையிலே — மனித நடமாற்றம் அவ்வளவாக இராத போது — நடந்து சென்றால் இன்னும் எப்படியெல்லாம் என்னைச் சீண்டுவார்களோ என்று நினைத்தபோது எனக்கு நெஞ்சு உலர்ந்து போயிற்று.

என்னைவிட வாசுகி மிகுதியாகக் கவலைப்பட்டாள். 'பயம் ஒன்றுமில்லையே?' என்று அடிக்கொரு தடவை கேட்டுக் கேட்டு என் அச்சத்தை மேலும் மேலும் வளரச் செய்தாள். முடிவில் ஒன்பதே காலுக்கு வண்டி வந்தது. எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள். பெண்கள் இரண்டே பேர்கள் தாம் — நானும் இன்னொருத்தியும். அவள் நடுத்தர வயசுப் பெண்மணி. எங்களை ஏற விடாமல் ஆண்களின் கூட்டம் முட்டிக் கொண்டு ஏறியபோது பாதிப் பேருக்கு மேல் ஏறுவதற்குள்ளாகவே இரட்டைக்

குமுறிய நடத்துநரைப் பார்த்து வாசுகி யின் கணவர் மட்டும் கத்தியிரா விட்டால், பெண்களாகிய நாங்கள் இருவரும் விடப் பட்டிருப்போம். அவர் கத்திக் கூப்பாடு போட்டதன் பிறகுதான் ஆண்களின் கூட் டம் நாங்களும் தொற்றிக் கொள்வதற்கு வழி செய்தது. ஒருவாறு முக்கால்வாசிப் பேரை ஏற்றிக் கொண்டு வண்டி கிளம்பிற்று. வாசுகியும் சுந்தரமும் கைகளை ஆட்டி விடை பெற்றார்கள். நான் பெருமூச்சு விட்டேன். ஆனாலும் நெஞ்சு 'பக் பக்'கென்று அடித்துக் கொண்டிருந்தது. முன்னால் சென்ற வண்டி களை முந்த வேண்டும் என்ற தேவையோ அல்லது பின்னால் வரும் வண்டிகளை முந்த விடாது அடிக்கும் தேவையோ இல்லாத அந் தக் காலத்தில், ஏராளமான பயணிகள் ஏறிக் கொண்டு விட்ட எரிச்சலில் பயணச் சீட் டுக்கள் கொடுக்கும் சாக்கில் ஓர் ஓரமாகப் பேருந்தை நிறுத்திப் போட்டு எங்களைப் பழி தீர்த்துக் கொள்ள முற்பட்டார். என் இதயம் இன்னும் கால தாமதம்ஆகிக் கொண் டிருந்தது கண்டு மேலும் வேதனைப் பட்டது.

பெண்களின் இருக்கைகளில் ஆண்கள் நிரம்பி வழிந்தார்கள். பெண்களுக்கு என்று சில இருக்கைகளை ஒதுக்கி வைத்திருக்கையி லேயே அவற்றில் உட்கார்ந்து கொண்டு பார்த்தும் பாராததுபோல் இருக்கிறவர் களும், அரைக் கண் மூடித் தூங்குவது போலப் பாசாங்கு செய்கிறவர்களும், பார்த் துக்கொண்டே, 'நிற்கட்டுமே' என்பதுபோல் அழிச்சாட்டியமாக உட்கார்ந்து கொண்டிருப் பவர்களுமாகப் பெண்களின் இருக்கைகள் நிரம்பியிருந்தது கண்டு என்னுள் எரிச்சல் கிளர்ந்தது. நிற்பதற்கு வலுவில்லை என்றில்லை. ஆண்களின் கூட்டத்தில் இடிபடுதல் அரு வருப்பாக இருந்தது. ஆனால் உரசாமல் நிற்கக்கூடிய நிலையிலும் கூட வேண்டு மென்றே உரசும் ஆண்களுக்கு நடுவில் நிற்பது எரிச்சலையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது. நான் தவித்துப் போனேன். என்னுடன் ஏறிய பெண்மணிக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்பது வண்டிக்குள் ஏறிய இரண்டே நிமிடங்களுக்கெல்லாம் அவள் போட்ட கூப்பாட்டிலிருந்து வெளியா யிற்று. 'யோவ், நீங்கள்ளாம் அக்கா தங் கச்சிங்களோட பொறந்தவங்தானய்யா ? பொம்பளைங்க சீட்டிலே குந்திக்கிட்டு ஆணி யடிச்ச மாதிரி அங்கிட்டும் இங்கிட்டும் பராக்குப் பார்க்கிறீங்களே, மனுசங்கதானா நீங்க?' என்ற அவள் கூச்சல் வண்டியை ஒரு கலக்குக் கலக்கியது. யாரும் எழுந்து இடம் விடத் தயாராக இல்லை. முடிவில் அவள் நடத்துநர் உதவியை நாடினாள். நடத்துநர் குரல் எழுப்பியதன் பிறகுதான் எங்களுக்குப் பெண்களின் இருக்கைகளில் இடம் கிடைத் தது. அந்தப் பெண் பிள்ளை படிக்காதவளாக இருந்தது நல்லதாகப் போயிற்று. அதனால்







குடியிருப்பவர்: ஏன் ஸார் மழை பெய்தால் இப்படி வீடு ஒழுகுகிறதே. மேலே உள்ள அந்த ஓட்டைகளைத் தயவு செய்து அடைக்கக் கூடாதா?

வீட்டுக்காரர்: அடைக்கலாம். ஆனால் வெயில் காலத்தில் அந்த ஓட்டைகள் வழியாக ஜிலுஜிலுவென்று உங்களுக்குக் காற்று வருவது தடைப்பட்டு விடுமே என்று பார்க்கிறேன். — சரஸ்வதி பஞ்சு

தான் அவளால் அவ்வளவு இல்லாடித்தனமாகப் பேசுவதற்கும் உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கும் முடிந்தது. நான் நிம்மதியாக உட்கார்ந்தேன். கடிகாரத்தைப் பார்த்ததும் மறுபடியும் என்னுள் பீதி பரவிற்று.

முடிவாகப் பேருந்து ஒன்பதரை மணிக்குப் புறப்பட்டது. வழியில் இறங்க வேண்டியவர்கள் குரல் கொடுத்தால் அல்லாது எங்கும் நிற்காமல் ஓடிற்று. நடுவழியில் அதற்காகக் காத்துக் கொண்டிருந்தவர்களை நடத்துநர் சட்டை செய்யவில்லை. கவலைப்பட்டுக் கொண்டே தற்செயலாக எனக்கு இடப்புறம் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது. வழக்கமாக அந்த வழித் தடத்தில் பயணம் செய்யும் வாலிபன் ஒருவன் நின்றிருந்தான். அவன் எங்கள் தெருவில்தான் இருந்தான். நானும் அவனும் பல நாட்கள் ஒரே பேருந்தில் காலையிலும் மாலையிலும் பயணம் செய்வதும் உண்டு. அவன் நான் இறங்கும் இடத்தில்தான் இறங்குவான். ஆனால் அவன் எந்த அலுவலகத்தில் பணி செய்கிறான் என்பது எனக்குத் தெரியாது. அவனைப் பற்றி வேறு எதுவுமே தெரியாது. பெண்களின்மீது மோதிக்கொண்டு பயணம் செய்வான். அவர்களின் அர்ச்சனைகளை வாங்கிக் கட்டிக்கொள்வான். அவர்களின் பார்வைகளைத் தற்செயலாகச் சந்தித்துவிட்டால் கண் அடிப்பான் என்பவை மட்டுமே அவனைப் பற்றி எனக்குத் தெரிந்தவை. எனக்கு வேர்த்துக் கொட்டியது. அந்தப் பத்து மணி இருட்டில் அவனோடு தனியாகத் தண்டவாளத்தின் ஓரமாக நடக்க வேண்டும் — பத்து நிமிடங்கள் நடக்க வேண்டும் — என்பதை நினைத்துப் பார்த்தபோது இதயமே துடிக்க மறந்தாற் போன்ற நிலைக்கு நான் ஆளானேன்.

சில நாட்களில் அவனும் நானும் காலையில் அந்தத் தண்டவாளத்தை ஒட்டி நடக்க நேரும்போது நான் அவனை முந்த விட்டுவிட்டு மிக மெதுவாக நடந்திருக்கிறேன். அல்லது அவனை முந்திக்கொண்டு ஓட்டமும் நடையுமாகப் போயிருக்கிறேன்.

அவன் ஒரு போக்கிரி என்பதைப் பற்றி எனக்கு ஐயமே இல்லை. மாணவர்கள் தொலைவில் இருந்து கொண்டு பெண்களைச் சீண்டுகிறவர்களானாலும் இயல்பாக நல்லவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் பத்து மணிக்கு விடுதி இருளில் ஆழ்ந்து கிடக்கும். யாரும் சுற்றுச் சுவரின்மீது உட்கார்ந்து கொண்டிருக்கமாட்டார்கள். அதனால் இவனோடு நடந்துபோகும் போது இவன் ஏதும் வம்பு செய்தாலோ கொண்டாலோ என் உதவிக்கு வருவதற்கு எந்த மாணவனும் அருகே இருக்க மாட்டான்..... இப்போது என்ன செய்வது என்று கேள்வி என்னைத் திகிலுக்குள் அமுக்கிற்று.

கடைசியில் ஓர் எண்ணம் என் மனத்தில் எழுந்தது. எங்கள் பேருந்து அந்தப் பெரிய புகைப்பட நிலைய நிறுத்தத்தில் நின்றபோது பெருமளவுக்குக் கூட்டம் குறைந்துவிட்டதையும் எல்லோருக்குமே உட்கார இடம் கிடைத்திருந்ததையும் நான் கவனித்தேன். அந்தக் காவாலிப் பயல் எனக்கு இடப் பக்கத்து இருக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். என் இதயத் துடிப்பு அதிகரித்தது.

சட்டென்று திரும்பிய அவன் கண்கள் விரிந்தன. வழக்கம் போல் அவன் பார்வையில் ஒரு போக்கிரித்தனம் வந்து கவிந்தது. நான் துணிச்சலோடு அவனை ஏறிட்டுப் பார்த்தேன். எங்கள் பார்வைகள் சந்தித்துக் கொண்ட அந்த நேரத்தை எனது எண்ணத்தைச் செயல்படுத்துவதற்குப் பயன்படுத்த உடனே முடிவு செய்தேன்.

இயல்பாக அவனைப் பார்த்துப் புன்னகை செய்தேன். ''என்னங்க, எங்க தெருவிலே தானே நீங்களும் இருக்கீங்க? கொஞ்சம் எங்க வீடு வரைக்கும் எனக்குத் துணையாய் வர முடியுமா?'' என்று கேட்டேன். நான் அப்படிக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் அவன்தான் தொடரப் போகிறானே....!

அவன் பார்வையில் இருந்த போக்கிரித்தனம் பொட்டென்று அவிந்தது. அவற்றில் ஒரு வியப்புத் தெரிந்தது. ''அதுக்கென்ன ? வர்றேனே ?'' என்ற பதில் பளிச்சென்று அவனிடமிருந்து வந்தது.

நாங்கள் இறங்க வேண்டிய இடம் வந்ததும் அவன் எனக்கு வழிவிட்டு ஒதுங்கியவாறு தானும் இறங்கினான். ''வாங்க, போகலாம்'' என்றான். வழியில் ஏதும் இடர் நேராதிருக்க அருளுமாறு வேண்டிக் கொண்டே அவனுடன் நடக்கலானேன்.


அவன் கௌரவமான இடைவெளியில் நடந்து கொண்டே, ''இன்னிக்கு ஏன் இவ்வளவு லேட்டு ?'' என்று கேட்டான். நான் சொன்னேன்.

'' நீங்க உங்க ஆபீஸிலே என்னவாயிருக்கீங்க ?'' என்று கேட்டான். சொன்னேன்.

தன்னைப் பற்றியும் சொன்னான். எங்களது சம்பிரதாய உரையாடல் சில விநாடிகளுக்குள் முடிந்துவிட்டது. மேற்கொண்டு என்ன பேசுவது என்று தோன்றாததாலோ என்னவோ அவன் பேசாமல் நடந்து கொண்டிருந்தான். நான் 'பக் பக்' என்று இதயம் அடிக்க, அவனோடு நடந்து கொண்டிருந்தேன். முடிவில் எங்கள் தெருவை அடைந்தோம். என் வீடு வந்தது. வாசலில் மாமி நின்று கொண்டிருந்தாள். அவன், ''நான் வரட்டுமா?'' என்று கைகூப்பி விடைபெற்றுக் கொண்டான்.

'' ரொம்ப தாங்க்ஸ்ங்க உங்களுக்கு'' என்று அவனுக்கு உளமாரவே சொல்லி விடை கொடுத்தேன்.

''நம்புவதே வழி என்ற மறைதனை நாமின்று நம்பி விட்டோம் !'' என்று பாரதியாரின் அடிகள் எனக்குப் புது வேகத்துடன் புரியலாயிற்று.



CMTH-14-152 TAM

டாக்டர்கள் கூறுகிறார்கள், 3 மாதங்கள் ஆனவுடன் உங்கள் குழந்தைக்குப் பால் மட்டும் போதாது. சீரான வளர்ச்சி பெற உங்கள் குழந்தைக்குத் தேவை ஒரு திட உணவு— பாரெக்ஸ்.



இதோ, வளரும் உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ் வழங்கும் நன்மைகள்:

வளர்ந்துவரும் உங்கள் குழந்தைக்குத் தேவையான பாரெக்ஸ் அளவு

உங்கள் குழந்தையின் வயது	பாரெக்ஸ் அளவு
3 - 6 மாதங்கள்	1 - 2 தேக்கரண்டி - தினசரி இருமுறை
6 - 9 மாதங்கள்	3 - 4 தேக்கரண்டி - தினசரி மும்முறை
9 மாதங்கள் - 3 வயது	4 - 6 தேக்கரண்டி - தினசரி நான்கு முறை

பாரெக்ஸ்

சீரான உடல் வளர்ச்சிக்கு உங்கள் குழந்தையின் முதலாவது திட உணவு—3 மாதங்கள் ஆனவுடன்



க்ளாக்ஸோ

CMGF-47 203- TM



திறமைமிக்க திருமதி ஜெயகுமாரி பாஸ்கரன்

சொல்பவர்: கி. வா. ஜகந்நாதன்

சில ஆண்டுகளுக்கு முன், பொன்னாச்சி என்று நினைக்கிறேன். அங்கே ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றிருந்தேன். அதே நிகழ்ச்சியில் பங்கேற்க வந்திருந்த ஸ்ரீமதி ஜெயகுமாரி பாஸ்கரன், என் முறை வருவதற்கு முன் தம் சொற்பொழிவை நிகழ்த்தினார். அப்போதுதான் நான் முதல் தடவையாக இவர் பேச்சைக் கேட்டேன். 'திறமையும் ஆர்வமும் இணைந்த ஒரு நல்ல சொற்பொழிவைக் கேட்டோம்' என்ற எண்ணம் என் மனத்தில் தோன்றியது. இவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று அப்போதே நினைந்தேன். என் ஆருடம் பலித்து விட்டது. இன்று, சமயச் சொற்பொழிவு மண்டபங்களிலும், பட்டி மன்றங்களிலும் ஸ்ரீமதி ஜெயகுமாரியின் பெயர் பளிச்சிடுவதைக் கண்டும் கேட்டும் மகிழ்கிறேன். சமய அறிவும் இலக்கியத் திறமையும் இவர் பேச்சுத் திறமையில் நன்கு இணைந்து பரிமளிக்கின்றன.

கிறிஸ்தவக் கான்வெண்டில் படிக்கும்போது இவருக்குப் புதிய ஆகமமும் பழைய ஆகமமும் அத்துபடி. திருமணமான பிறகு தேவாரம் படித்தார். முறையே இசை பயின்றார். பள்ளிக்கூட நாட்களில் பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்று மேடைப் பேச்சின் ஆர்வத்தை மனத்தில் வளர்த்துக் கொண்டார். பிறகு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் சமயச் சொற்பொழிவுகளையும் இலக்கியப் பேருரைகளையும், புராண விரிவுரைகளையும் கேட்கும்போதெல்லாம் இவருக்கு, நாம் ஏன் இந்தத் துறையிலேயே தம் மேடைப் பேச்சின் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளக் கூடாதென்று தோன்றியது. வாரியார் சுவாமிகளையே மனத்துள் குருவாகக் கற்பனை செய்து கொண்டு, ஓர் ஏகலைவன் போலத்தம்மை இந்தச் சொற்பொழிவுத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார். நல்ல வெற்றியையும் கண்டு விட்டார்!

1973ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள சில நண்பர்கள் ஒரு நல்ல சமயச் சொற்பொழிவாளரைத் தங்கள் நாட்டுக்குச் சில நாட்கள் அனுப்பி வைக்க வேண்டினார்கள். எனக்கு ஜெயகுமாரியின் பெயர்தான் நினைவுக்கு வந்தது. இலங்கையில் ஜெயகுமாரிக்கு வெகு சிறந்த வரவேற்பு. மாலையில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்வார். காலையில் ஆங்காங்கு சுற்று வட்டாரத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் சொற்பொழிவாற்றுவார். மாலை நிகழ்ச்சி முடிந்ததும், பக்கத்து ஊர்க்காரர்கள், தங்கள் ஊர்க் கோயில்களில் இரவு பத்து மணிக்கு ஒரு நிகழ்ச்சியை அறிவித்துவிட்டு இவரை அழைத்துப் போவார்கள்.

இப்படி இலங்கையில் உள்ள மணிபல்லவம் என்ற ஊருக்கு அந்த ஊரைச் சேர்ந்த நாகபூஷணம் என்பவர் அழைத்துச் சென்றபோது இரவு மணி ஒன்று. இவர் பேச்சைக் கேட்க நல்ல கூட்டம் அந்த நேரத்திலும் கூடியிருந்தது. அபிராமி அந்தாதியைப் பொருளாக எடுத்துக்கொண்டு பிரமாதமாக வெகு நேரம் அந்த வேளையிலும் பேசினாராம்!

கந்த புராணம் பற்றி உரையாற்றுவது இவருக்குக் கைவந்த கலை. திருப்புகழ் இசையுடன் இந்த நிகழ்ச்சித் தொடரைப் பரிமளிக்கச் செய்வார். பெரியபுராணமும் ராமாயணமும் இவருக்கு மிகவும் பிடித்தமான விஷயங்கள். திருப்பாவை, திருவெம்பாவை அத்துபடி. சமீபத்தில் ஒரு மாத காலம், சென்னை, ரங்கநாதர் சன்னிதியில் காலையில் திருப்பாவை விளக்கவும் மாலையில் ஏகாம்பரேசுவரர் கோவிலில் திருவெம்பாவை சொற்பொழிவும் நிகழ்த்திச் சிறந்த பாராட்டைப் பெற்றார்.

முக்கூர் சீனிவாசாச்சாரியார், சே. தா. ராமலிங்கம் பிள்ளை போன்ற பெரியோர்களை அணுகி, இந்த விளக்க உரைக் கலையை அவ்வப்போது பயின்றது இவருக்கு இப்போது நல்ல பலனைக் கொடுக்கிறது.

தமிழகத்தில் உள்ள திருத்தலங்களில் உள்ளவர்கள் எல்லோருக்கும், ஏதாவது உற்சவ காலத்தை யொட்டி அவர்கள் ஊரில் ஜெயகுமாரியின் சொற்பொழிவைக் கேட்கும் வாய்ப்பு ஆண்டுதோறும் ஏற்படும்.

பெரியகுளத்தில் ஒரு நிகழ்ச்சி. பிட்டுக்கு மண் சுமந்த விழா. ஆற்றின் நடுவில் மணற்பரப்பில் மேடை அமைத்து அவ்விழா நடக்கும். சொற்பொழிவும் அந்த மேடையில். அருகே காட்டாறு. இவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிறார். மணற்பரப்பில் நல்ல கூட்டம். திடீரென்று



தொலை நோக்கில் :
கலையழகுடைய அருவி
கானத் தெவிட்டாக் காட்சி
மலைவாசனை மேகக் கன்னி
மணந்தருந்த காட்சி !

அண்மையில் :
அருவிநீர் பொழிவுமாம்
ஆனந்தமாய்த் தலையிலே
அச்சமற்றிருக்கும் பேரும்
அக்காளின் இடையிலே !

சேலட்டை வண்ணப் படங்கள்: நராலிங்கம்



விழா அமைப்பாளர் இவரை அவசி உடனே சொற்பொழிவை நிறுத்திக் கரைக்கு வர வேண்டினார்கள். இவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் பேச்சை அந்தக் கட்டத்திலேயே முடித்து எழுந்தார். கூட்டமும் கலைந்தது. இவர் கரைக்கு வந்த சில நிமிடங்களில் அந்த ஆற்றின் நடுவே ஒரே ஆரவாரம். தடதடவென்ற சப்தம். காட்டாற்று வெள்ளம். பக்கத்து மலைச்சாரலில் மழை பெய்திருக்கிறது என்பதைத் தகுந்த நேரத்தில் உணர்ந்த உள்ளூர்க்காரர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

இந்த அமர்க்களத்தில் விழா அமைப்பாளர்களிடமிருந்து சன்மானத்தைக் கூட வாங்கிக்கொள்ளாமல் இவர் ஊர் திரும்பி விட்டார். பணம் அப்புறம் மணியார்டரில் வந்தது.

"சிவம் பெருக்கும் செல்வி" என்ற விருதைக் காலஞ்சென்ற திருவாசகமணி பாலசுப்பிரமணியம் கொடுத்திருக்கிறார். 'முத்தமிழ் வல்லவி' என்ற பட்டத்தைக் கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு விழாவில் வழங்கியிருக்கிறார்.

பட்டிமன்றம், கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில் இவருக்கு அலாதி விருப்பம். கட்டை வண்டியானாலும் சரி, விமானமானாலும் சரி, ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகளில் காலம் தவறாமல் கலந்து கொள்ளும் சுபாவம் உள்ளவர்.

மிசார் பாங்கியில் பணியாற்றும் இவர் கணவர்தான் இவருக்கு எங்கும் துணை. அவருடைய விடுமுறை நாட்களெல்லாம் மனைவியின் இத்தகைய சமயப் பணிக்குப் பயன்படுகின்றன. இது எனக்கு மிகவும் திருப்தியளிக்கும் ஒரு விஷயம்.

இன்றென்று, மற்றவர்களின் சொற்பொழிவுகளைக் கூர்ந்து கவனிப்பார் ஜெயகுமாரி. அவ்வப்போது குறிப்புகள் எடுத்துக் கொள்வார். தாம் இத்துறையில் வளர வேண்டும்; இன்னும் வளர வேண்டும் என்ற ஆர்வம் இத்தகைய செயல்களில் தென்படுகின்றது.

அடக்கம் நிறைந்தவர். ஒவ்வொரு தடவையும் புதுப் புதுப் பேச்சாளர்களைத்தான் வரவழைப்பது என்ற விதிமுறையைக் கையாளும் விழா அமைப்பாளர்கள்கூட, இவர் விஷயத்தில் தங்கள் கொள்கையைத் தளர்த்திக்கொண்டு இவரை மீண்டும் மீண்டும் அழைப்பதிலிருந்து இவரது நாவன்மையை ஊகித்துக் கொள்ளலாமே!

கேட்டு எழுதியவர் : **கோமதி ஸ்வாமிநாதன்**




உடலுக்கழகு உடைகள்—அவை, நாளெல்லாம், நாளுக்குநாள் புதுமையுடன் மிளிர்வது அவசியம்.
அழகு? யாருக்கு வேண்டும்?
நீடித்து நிற்கும் அழகான துணிகளுக்கு-டெபிலைஸ்ட் குறியைப் பார்த்து வாங்குங்கள்
'டெபிலைஸ்ட்' துணிகள், சுருக்கம் விழாதவை என நிரூபணம் பெற்றவை. கசங்காது, எனவே நாளெல்லாம் நீடித்த புதுமைத் தோற்றம். உலகெங்கும் நம்பகம் பெற்ற 'டெபிலைஸ்ட்' சின்னம், நீங்கள் தேர்ந்தெடுக்கும் துணிகள் மீது இருக்கிறது.
இந்தியாவின் முன்னணியில் நிற்கும் மில்களான அரவிந்த், பாம்பே டையிங், பின்னி, டிஸிஎம், மஃபத்லால், ஸ்ரீ அம்பிகா, டாடா மற்றும் தாக்கர்ஸே ஆகிய மில்கள் 'டெபிலைஸ்ட்' குறியை உபயோகிக்கின்றன. நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மீட்டர் துணியிலும் 'TEBILIZED' சின்னம் இருக்கிறதா என்று பார்த்து வாங்குங்கள்.
TESTED CREASE RESISTANCE
TEBILIZED®
MINIMUM IRONING • DURABLE GOOD LOOKS
TEBILIZED®
துணிகள் சுருக்கம் விழாதவை என நிரூபணம் பெற்றவை— நீடித்த நல்ல தோற்றத்திற்கு.
டிரேட் மார்க் உரிமையாளர்கள்—
மேட்டூர் பியர்ட்ஸெல் லிட்.,
த.பெ. எண் 7, சென்னை 600 001.
Sista's-MBT-336/75 K-Tam

12. ரமேஷ் கைது!

மரியதாஸ்புரத்தில், எய்ட்மென்த் கிராஸ் ரோட்டில் பத்தாம் எண் வீட்டின் முன்னுல் கூட்டம் 'ஜே, ஜே' என்று அலைமோதிற்று. எல்லாருமே ஒரே சமயத்தில் உள்ளே புக முயன்ருர்கள். அதைத் தடுத்து நிறுத்தப் போலீஸ் வளையம் அரும் பாடு பட்டது.

"என்ன ஸார் ஆச்சு?" என்று கூட்டத்தில் புதிதாக வந்து கலந்துகொண்ட யாரோ கேட்டார்கள்.

"என்ன ஆச்சு? உயிர் போச்சு... அம்புட்டுத்தான்" என்று யாரோ சிரித்தார்கள்.

"டாக்டரு செத்துப் பூட்டாராமே, எப்படி?"

"தொட்டியிலே விழுந்திட்டாராம்!"

"கிழவங்க எல்லாமே தொட்டியிலே இல்லாட்டா குளியலறையிலே விழுந்துதான் சாவருனுக—"

"அட போய்யா! பெரிசா வயசைக் கண்டுட்டே!.... டாக்டருக்கு என்னய்யா வயசு ஆயிப்போச்சு இப்ப... நாப்பது... நாப்பத்திரண்டு... அதுக்கு மேலே சொல்ல முடியுமாய்யா... இது திட்டமிட்டு நடந்திருக்கு."

"நாலரை மணிக்கு யாரோ வந்தாங்களாம்.... கொழாய் ரிப்பேர் பண்ணற ஆள் மாதிரி இருந்ததாம். 'ஐயா வரச் சொன்னுக'ன்னனும்....வேலைக்காரி, 'சரி, மேலே போ... மாடியிலேதான் ஐயா குளிச்சிக்கிட்டிருக்காரு'ன்னு போயிட்டாளாம். கொஞ்ச நாழி கழிச்சு டாக்டரோட பெஞ்சாதி 'டீ' எடுத்துக்கினு போனுக்கே...கண்ணராவி.... கண்ராவி... டாக்டரய்யா தொட்டியிலே மூழ்கிக் கிடக்கிருராம். கால் இரண்டும் மேலே நீட்டிக்கிட்டிருக்காம். மூஞ்சி முக்குளிச்சுக் கிடக்காம்...."

"இன்னய்யா அநியாயம்... காலைக் கீலைப் புடிச்சு மேலே இளுத்திருப்பாங்களோ?"

"அப்படித்தான் போலீசு சந்தேகப்படுது. துப்பறியும் நாய்கூட வந்திருக்குது... அதோ அதோ பாருங்க... நாய் மோப்பம் பிடிச்சுக்கிட்டு மாடிப் படியிலே இறங்கி வருது—"

"ஏய்... ஏய்.... நாயிடா... சீலி...ஹாய் சீலி—"

"சைலன்ஸ்! யாரும் நாய் பேரைச் சொல்லிக் கத்தக்கூடாது!" என்று போலீஸ் அதட்டுகிறது. கூட்டம் 'கப்சிப்' ஆகி வைத்த கண் வாங்காமல் இறங்கி வரும் ராட்சத நாயைப் பார்க்கிறது. சீலி யாரையுமே இலட்சியம் செய்யாமல் மாடிப் படியின் இருபுறமும் மோப்பம் பிடித்துக் கொண்டே இறங்கிக் கேட்டைப் பார்த்துப் போகிறது. பிறகு வலப்பக்கம் திரும்பித் தெருவோடு போய், கோடியில் திரும்பி... சற்றுத் தொலைவில் ஒரு பஸ் ஸ்டாப்பில் போய் நின்றுவிடுகிறது. வருகிற பஸ்களை எல்லாம் மோப்பம் பிடித்து விட்டுப் படுத்துவிடுகிறது....

"அவ்வளவுதான் இதோட சமர்த்து! படுத்துக்கிடுச்சே!" என்கிருன் பின்னேடு வந்த கூட்டத்தில் ஒருவன்.

"அப்போ? இதுவரையில் கொலைகாரன் வந்திருக்கிருன். பஸ் வந்திருக்கிறது. ஏறிப் போய் விட்டான்."

"விடியற்காலை வேளை வேறு ஆயிற்று? மில்லிலே ஷிப்ட் முடிஞ்சு கூட்டமா தொழிலாளர்கள் பஸ் ஏற வந்திருப்பாங்க. இவனும் நைஸாகக் கலந்துகொண்டு ஏறிப் போயிருப்பான்."

"இனிமேல் கண்டு பிடிக்கிறது ஏது?"

"போங்க எல்லாம்! கூட்டம் போடாதீங்க" என்று விரட்டுகிறது போலீஸ்.

சீலி திரும்பிவிடுகிறது, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு!

டாக்டர் பணிக்கர் வீட்டு மாடி வராந்தாவில் நின்று முகவாயைத் தடவியபடி சீலி திரும்பி வருவதையே யோசனையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் சேகர். பின்பக்க அறையில் மிஸஸ் பணிக்கர் நெஞ்சு வறண்டுபோய்க் கேவும் குரல் விட்டு விட்டுக் கேட்டது!



'எப்படி நடந்தது இது? குழாய் ரிப்பேர்க் காரனாக வந்தவன் யார்?'—

''அண்ணா!'' என்று மெல்லிய குரல் கேட்டது. திரும்பினான். பீதி நிறைந்த முகம் ஒன்று தெரிந்தது. மாலதி! 'என்ன?' என்று கேட்பது போலப் புருவத்தை உயர்த்தினான். மாலதியின் பின்னால் தொங்கிய தலையுடன் நின்ற ரமேஷின் மீது அரைக் கணம் அவன் பார்வை ஊர்ந்து திரும்பியது.

''ஒன்றுமில்லே. நானும் ரமேஷூம் வீட்டுக்குப் போகிறோம். அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். வரட்டுமா?'' என்றாள் மாலதி.


''என்ன மாலதி திடீரென்று? உள்ளே பிணம் கிடக்கிறது. மிஸஸ் பணிக்கர் இடி விழுந்து போய்க் கிடக்கிறாள். உன்னை விட்டால் அவளுக்கு ஆறுதல் சொல்ல யார் இருக்கிறார்கள்?'' என்று கண்ணைச் சிமிட்டினான் சேகர். ''இறுதிச் சடங்குகளெல்லாம் முடிகிற மட்டும் நீ இங்கேதான் இருக்கணும்.''

''இல்லே, அண்ணா! இங்கே இருக்கவே பயமாக இருக்கிறது. மதுர பவனத்திலிருந்து இந்த வீடுவரையில் கொலைக் கரம் நீண்டு வந்து விட்டது... இந்தச் சுவருக்கும், கதவுகளுக்கும் கூடக் காதும் கண்ணும் இருக்குமோ என்று பயமாக இருக்கிறது.''

''நீ எதற்காகப் பயப்பட வேண்டும்? கொலையாளி கறுப்பா, சிவப்பா என்றே உனக்குத் தெரியாதே!''

''உண்மை. ஆனால் நம்ம ரமேஷூக்கு ஓரிரு விஷயங்கள் தெரியுமே. தாரிணியைக் கொன்றது யார் என்பதை ரமேஷிடம் டாக்டர் சொல்ல ஆரம்பித்ததைக் கொலையாளி மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்திருக்கிறான். டாக்டர் வாயிலிருந்து தன் பெயர் வெளிவரு முன்னால் அதைத் தடுப்பதற்காக வேட்டை நாயை அவர்களிடையே விரட்டி இருவரையும் பிரித்தான்... மறுநாள் டாக்டரும், ரமேஷூம் எங்கே சந்தித்து விடுவார்களோ என்று அஞ்சி டாக்டரைத் தீர்த்துக் கட்டிவிட்டான். ஆனாலும் அவனுக்கு ரமேஷ்மீது சந்தேகம் இருந்து கொண்டுதான் இருக்கும். அவர் வாயையும் அவன் அடைக்க விரும்பலாம்.... ஓ, கடவுளே! அவருக்கு மட்டும் ஏதாவது ஆகிவிட்டால் அப்புறம் நான் உயிரோடேயே இருக்க மாட்டேன்....'' என்றபோது மாலதிக்கு அழுகையே வந்து விட்டது.

சேகர் அவள் அருகில் வந்து அவள் தோளின் மீது கையை வைத்து ஆதரவாக அழுத்தினான். பிறகு தணிந்த குரலில் ''பயப்படாதே! ரமேஷூக்கு அவனால் எந்த ஆபத்தும் வராது. காரணம் கொலைகாரனின் பெயர் வெளிப்படுவதற்கு முன்பே டாக்டரின் வாய் அடைக்கப்பட்டு விட்டது. இந்தக் கொலையையே வெகு நேரம் யோசித்து வேறு வழியில்லாத நிலையில்தான் செய்திருப்பான்... அடுத்த கொலையையும்



ரேகா சந்திரநாத்

அனாவசியமாக வெறும் ஊகத்தின் மீது செய்து மாட்டிக் கொள்ள மாட்டான். என்ன ரமேஷ்!''

''நீ சொல்வது சரிதான்!'' என்றான் ரமேஷ்.

''மாலு! இன்னும் பத்து நிமிஷ வேலை தான் இங்கே. உள்ளே பஞ்சாயத்தார் பிரேத விசாரணை செய்து கொண்டிருக்கின்றனர். போலீஸ் புகைப்பட நிபுணர் ஒருத்தர் 'ஆல் ஆங்கிள்ஸ்' புகைப்படங்கள் எடுத்து முடித்துவிட்டார். வாட்டர் ஷெரம் எக்ஸ்பர்ட் ஒருவர் வந்திருக்கிறார். அவருடைய ரிப்போர்ட்டும் வந்து விட்டால் பிரேதத்தைத் தகனத்துக்கு அனுப்பிவிட்டு நாம் கிளம்பிவிடலாம்.''

''இந்தக் கண்ணராவிக் காட்சிகளை யெல்லாம் நான் பார்க்கத்தான் வேண்டுமா?''

''வேண்டாம். ஆனால் இங்கே இப்போது ஓர் அற்புதமான நாடகம் ஒன்று நடக்கப் போகிறது. அதை மட்டுமாவது பார்த்து விட்டுப் போ. அதில் இரண்டு பேர் பிரமாதமாக நடிக்கப் போகிறார்கள். ஒரு நடிகர் ஏற்கெனவே இங்கு இருக்கிறார். ஓ, அதோ மற்றொரு நடிகரும் வந்து விட்டார். பார்!''

சேகர் இப்படிச் சொல்லி வாய் மூடினதும் அந்த வீட்டு வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. அதன் கதவு தடால் என்று திறந்தது. ''டாக்டர்! மை டியர் டாக்டர்!'' என்று கதறிக்கொண்டே ஓர் உருவம் அதிலிருந்து இறங்கி உள்ளே ஓடி வந்தது. அவர் பின்னால் ஜெயராம், மாஜி நீதிபதி!

''ஓ! மிஸ்டர் கோவிந்து...'' என்று கூவினாள் மாலதி.

''எங்கே என் டாக்டர்; எங்கே என் டாக்டர்'' — மாடிப் படி, பக்கச் சுவர்களெல்லாம் அதிர்ந்தன. ''யார் அவரைக் கொன்றது?''

புயலாகப் பாய்ந்து வந்த கோவிந்துவுக்கு வழிவிட்டு எல்லோரும் சடசடவென்று ஒதுங்கினார்கள். படி ஏறி வந்ததுமே நீளக் கிடக்கும் பணிக்கரின் உடலைப் பார்த்துவிட்டார் கோவிந்து. ''நீங்களா இப்படிக் கிடக்கிறீர்கள் டாக்டர்?'' என்று ஒரு கத்துக் கத்தினார் கோவிந்து. ''ஓ டாக்டர் இது எப்படி உங்களுக்கு நேர்ந்தது?'' அடுத்த கணம் குபீரென்று பாய்ந்து சென்று பிரேதத்தைக் கட்டிக் கொண்டு மூர்ச்சையாகி விட்டார் கோவிந்து.

''தண்ணீர்! தண்ணீர்!'' என்று யாரோ கத்தினார்கள். விநாடிப் பொழுதில் எங்கிருந்தோ தண்ணீர் வந்தது. யாரோ கோவிந்துவை மார்பில் சாய்த்துக் கொண்டு முகத்தில் தண்ணீரை அடித்தார்கள்.

''மிஸ்டர் கோவிந்து! நீங்களும் என்னை விட்டு விட்டுப் போய்விடாதீர்கள்'' என்று மிஸஸ் பணிக்கர் கதறுவது கேட்டது. ''அழாதீர்கள் அம்மா — வெறும் மூர்ச்சைதான்'' என்று யாரோ தேற்றினார்கள்.

சேகர் புன்னகையுடன் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு நின்றான்.

கோவிந்து நீர் சொட்டும் இமைகளை விலக்கிப் பார்த்தார். சுற்றி நின்ற எல்லார் மீதும் பார்வை ஊர்ந்து நகர்ந்தது. ''ரமேஷ்! இன்ஸ்பெக்டர் சேகர் — நீங்களெல்லாம் இருந்தும் என் அன்புக்கு உரியவர்கள் ஒவ்வொருவராகப் போய்க் கொண்டிருக்கிறார்களே!'' என்று கதறினார்.

''அழாதீர்கள் ஸார். அவ்வளவுதான் அவருக்குப் போட்டிருந்த விதி!'' என்றான் சேகர்.

''விதியா இது?'' என்று அதட்டும் குரலில் சொன்னார் கோவிந்து. ''சதி! இன்ஸ்பெக்டர்! பயங்கரமான சதி! சதி செய்துதான் என் மனைவியையும் டாக்டரையும் கொன்றிருக்கிறார்கள்....நான் சும்மா விடப் போவதில்லை. அவர்களை.... உலகத்தின் எந்தக் கோடிக்குப் போயிருந்தாலும் தேடிப்பிடித்து வந்து இந்தக் கையாலேயே பழிக்குப் பழி வாங்காவிட்டால் என் பெயர் கோவிந்து இல்லை—'' கோவிந்து இடக் கையால் வலக் கையை ஓங்கி அடித்துக் கொண்டார்.

''வீணாகச் சபதம் செய்யாதீர்கள் மிஸ்டர் கோவிந்து! அது ஒருநாளும் நிறைவேறப் போவதில்லை'' என்றான் சேகர் சாவதானமாக.

''ஏன் நிறைவேறாது?''

''முதலில் இந்த இரண்டு 'இழப்பு'க்களும் கொலைகளே அல்ல!''

''என்ன, என்ன!'' என்று தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார் கோவிந்து.

''எஸ், மிஸ்டர் கோவிந்து! இவற்றைக் கொலை என்று போலீஸ் நம்பவில்லை. கொலை என்று தீர்மானிக்கவோ துளியாவது சந்தேகப்படவோ சிறு தடையம்கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை. தாரிணிக்கு விரோதிகளே கிடையாது!''

''ஆனால் இது? டாக்டரின் மரணம்? இது நிச்சயம் கொலைதான்'' என்றார் கோவிந்து.

''ஆனால் எங்கள் வாட்டர் ஷெரம் எக்ஸ்பர்ட் அப்படிச் சொல்லவில்லையே! 'தொட்டிக்குள் வழுக்கி விழுந்து விட்டார்' என்றும் 'எழுந்திருக்க முடியாதபடி உடம்பு தொட்டியில் மாட்டிக் கொண்டு விட்டது' என்றும் சொல்கிறாரே! மூச்சுத் திணறித் தண்ணீரைக் குடித்துத்தான் டாக்டர் இறந்திருக்கிறார்!''


ரமேஷும் மாலதியும் சேகரை வியப்புடன் பார்த்தார்கள்; கோபாலும் ஜெயராமும் பார்த்தார்கள்; நீதிபதியும் மற்றவர்களும் பார்த்தார்கள். எப்போது வந்தது வாட்டர் எக்ஸ்பர்ட் ரிப்போர்ட்?

''ஸார்...! யாரோ குழாய் ரிப்பேர்க்காரன் போல வந்தானாமே—'' என்று கேட்டார் நீதிபதி. ''அதையும் விசாரித்து விட்டேன். — பிளம்பர் மேலேயே வரவில்லையாம்; திரும்பிப் போனதை வேலைக்காரியே பார்த்தாளாம்—'' என்றான் சேகர்.

'அண்ணா ஏன் இன்று ஒரே பொய் மயமாகப் பேசுகிறான்?' என்று மாலு தன்னையே கேட்டுக் கொண்டாள். சற்று முன்னால்தானே இந்த மரணங்களைக் கொலை என்றான்?

''இன்ஸ்பெக்டர்! டாக்டரை யாரும் கொலை செய்யவில்லை என்றாசொல்கிறீர்கள்?'' என்று நிதானமாகக் கேட்டார் கோவிந்து.

''நான் அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றான் சேகர்.



நீதிபதி: உன்னை அடித்த ஆளை வர்ணிக்க முடியுமா?
குற்றவாளி: அவன் என்னை அடிச்சதே, நான் அவனை வர்ணிச்சதாலேதானே!

- சசி

தீபாவளித் திருநாள்!

அக்டோபர் 18 முதல் நவம்பர் 1 வரை

தீபாவளியை நீங்கள் கோலாகல மாகக் கொண்டாட, மகளிர்க்கு ஏற்ற மகத்தான புடவைகள். காஷ்மீர், பெனாரஸ் 'கட்வொர்க்', வெங்கடகிரி, போச்சம்பள்ளி, கத்வால், உறையூர், மைசூர், முர்ஷிதாபாத், காஞ்சிபுரம், பெங்கால், ஆரணி, கும்பகோணம், கேரளா புடவைகள், முண்டுகள். என்ன வேண்டும் உங்களுக்கு? எல்லாம் கிடைக்கிறது.


மற்றும் வேஷ்டிகள், ரெடிமேடு சட்டைகள்.

காட்டன் சட்டைகள்:
ரூ. 18 முதல் ரூ. 25 வரை.


சில்க் சட்டைகள்:
ரூ. 50 முதல் ரூ. 120 வரை.

இன்றே உங்கள் குடும்பத்துடன் வந்து தேவைகள் அனைத்தையும் வாங்கி மனம் மகிழுங்கள்.

- ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடை உண்டு



தேசிய ஒருமைப்பாடு கடை



நாங்கள் வழங்கும் குழந்தைகளின் அன்பளிப்புத் திட்டத்தினல் ஒவ்வொரு குழந்தைக்கும் எதிர்பார்ப்பதைவிட அதிகத் தொகை கிடைக்கிறது

குழந்தைகளின் நல்வாழ்விலே அக்கறை கொண்டுள்ள பெரியோர்களுக்கெனவே எங்களது இந்த அன்பளிப்புத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டம் எப்படி இயங்குகிறது என்பதைப் பாருங்கள். ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் 15 வயது நிரம்பாத குழந்தைக்கு, குறைந்தது 50 யூனிட்டுகளின் மதிப்புள்ள ஒரு அன்பளிப்பு சர்டிபிகேட்டைக் கொடுங்கள். குழந்தையின் பெயரிலுள்ள யூனிட்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் வருமானம் மேலும் அதிகமான யூனிட்டுகளில் மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது.

பெருகி வளரும் வட்டி!

இவ்வாறு செய்யப்பட்ட முதலீடு ஆண்டுதோறும் தொடர்ச்சி பெற்றுப் பெருகுகிறது!

அந்தக் குழந்தை 21வது வயதை அடையும்வரை யாரும் அந்தப் பணத்தை தொடமுடியாது. இதனால் அந்தக் குழந்தைக்கு பெரிய தொகை தேவைப்படும் போது எவ்வித சிரமமுமின்றி கிடைக்கிறது. மாறாக, யூனிட் முதலீட்டுக்கு உரிமையாளராகவும் இருக்கிறார்.

இதுவே அதன் பெரிய சிறப்பான அம்சமாகும். மேலும் பல ஆண்டுகளாக யூனிட்டுகளிலிருந்து கிடைக்கும் டிவிடெண்ட் (லாபப்பங்கு) படிப்படியாக அதிகமாகிக்கொண்டே வந்திருக்கிறது. நாங்கள் தொடங்கியபோது 6.1 சதவிகிதமாக இருந்த டிவிடெண்ட் இந்த ஆண்டில் 8.6 சதவிகிதத்திற்கு உயர்ந்திருக்கிறது. இது மட்டுமல்ல!

பரிசுகள்! வியக்கத்தக்க பரிசுகள்!

21-ம் வயதை அடையும் வரை ஒவ்வொரு ஆண்டும் ஒரு பெரிய பரிசுத் தொகையை வெல்லும் வாய்ப்பும் கிடைக்கிறது. ஒவ்வொரு ஆகஸ்டு மாதத்திலும் ஒரு குலுக்கல் நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பரிசுகள் வழங்கப் படுகின்றன. அவருக்குப் பரிசு கிடைக்காவிட்டால் மனந்தளரத் தேவையில்லை. ஏனெனில் அடுத்த ஆண்டில் பரிசு கிடைக்கப் போகிறது என்று எதிர்நோக்கலாம்.

மற்றொரு விசேஷம். ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டு சமயத்தில் நாங்கள் அவருக்கு ஒரு கார்டு அனுப்புகிறோம். அவருக்குச் சொந்தமான யூனிட்டுகளின் எண்ணிக்கை, அந்த ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட அதிகப்படியான யூனிட்டுகளின் எண்ணிக்கை, அப்போது அமுலிலிருக்கும் யூனிட்டுகளின் விலை—போன்ற பல விவரங்களை அந்தக் கார்டில் குறித்து அனுப்புகிறோம்.

நினைவு மலர்ந்து என்றும் மகிழ

21-வது வயதை அடையும் வரை எல்லா ஆண்டுகளிலும் உங்கள் பாசத்தை நினைவூட்டும் ஒரு கருவூலமாக விளங்கும் இந்தக் கார்டு. அவருடைய வாழ்நாள் முழுவதும் நன்றிப் பெருக்கைக் காட்ட அவருக்கு ஒரு அரிய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே தீர்மானமாக யோசித்து செயல்படுங்கள். ஆம், நீங்கள் அன்பு சொரிந்து, அக்கறை காட்ட ஒரு சிறிய ஆணோ அல்லது ஒரு சிறிய பெண்ணோ உங்களுக்கு அவசியம் இருப்பார்கள்.

மற்ற விவரங்களுக்கு அருகாமையிலுள்ள எங்களது அலுவலகத்தில் தொடர்பு கொள்க.

யூனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியா

45, வீர் நரிமன் ரோடு, பம்பாய் 400 001.
9, மேத்யூ ரோடு, பம்பாய் 400 004.
8, கவுன்சில் ஹவுஸ் ஸ்ட்ரீட், கல்கத்தா 700 001.
6, பார்லிமெண்ட் ஸ்ட்ரீட், புது டில்லி 110 001.
சிலால் பாங்க் பில்டிங், ஃபோர்ட் கிளேஸிஸ்,
சென்னை 600 001.

Sista's-UT-410 A/75 Tam



ஒவ்வொரு
ஆண்டும்
பெரிய
பரிசுகளை
வெல்லும்
வாய்ப்பு
21-ம் வயதில்
ஒரு
பெருந்
தொகை
ஒவ்வொரு
புத்தாண்டிலும்
உங்களை
நினைவு கொள்ள,
வாழ்நாள் முழுதும்
நன்றி உணர்வோடு
வாழ விசேஷ
வாய்ப்பு

வட்ட மேஜை

சீடைசிப் பக்கக் கட்டுரையில் குறிப்பிட்டது போல் தனுஷ்கோடி எக்ஸ்பிரஸ் அரியலூரில் விபத்துக்கு உள்ளாகவில்லை. அரியலூரில் விபத்துக்குள்ளானது தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்தான்.

சென்னை—33
27—9—75 ஆர். கிருஷ்ணன்

தமிழ் நாட்டுக்குத் தருவிக்கப்பட்டுள்ள தாய்லாந்து அரிசியின் தரம் சந்தி சிரிக்கிறது!

உலையில் கழுவிப் போடும் வரை பிரமாதமான அரிசி என்று நினைக்கும் நாம், உலையில் வேகும் போதே அதன் குடலைப் பிடுங்கும் நாற்றம் வீடெல்லாம் — வீதியெல்லாம்....

கொஞ்சம் ஏமாந்தால் குழைந்து கஞ்சியாகிப்போகும்.

சாப்பிடும் போது மூக்கைப் பிடித்துக்கொண்டு சாப்பிட வேண்டும்.

இப்படிப் புகழ் மணம் பரப்பும் அரிசி நமக்குத் தாய்லாந்திலிருந்து தானமாக வரவில்லை. கோடிக்கணக்கான அந்நியச் செலாவணியை விழுங்கிக் கொண்டு வந்திருக்கிறது. அரிசி வாங்கும் அதிகாரிகள், வாங்குமுன் அதன் சாப்பாட்டு ருசி — வாடை முதலியவற்றைப் பார்க்கக் கூடாதா ?

சென்னை — 81
29—9—75 எஸ். வசந்தி

பஞ்சாப் அடைந்த படபடப்பு!

எழும்பூர் மைதானத்தில் மேற்கத்திய ரயில்வே ஹாக்கி குழுவினருக்கும் பஞ்சாப் போலீஸ் கோஷ்டியினருக்கும் இறுதி ஆட்டம் தொடங்க அரை மணி நேரம் இருந்தது. அச்சமயம் ஆட்டோ ரிக்ஷாவில் பஞ்சாப் போலீஸ் ஆட்டக் குழு மானேஜர் ராஜகுமார் வந்து இறங்கினார்!

முருகப்பா தங்கக் கோப்பை நிர்வாகக் காரியதரிசி திரு கே. ஆர். சுப்பிரமணியத்தை அணுகி, ''ஸார்! நான் உடனே ஒரு ஸ்பெஷலிஸ்டிடம் போக வேண்டும்! எனக்கு டென்ஷன் காரணமாக பிளட்பிரஷர் இருக்கும் போலிருக்கு!'' என்றார்.

''ஆட்டக்காரர்களுக்குத்தான் 'டென்ஷன்' ஏற்படும் என்பார்கள்! உம் மானேஜருக்கே இந்த நிலையானால்......'' என்று அதிசயித்தார் சர்வ தேச ஹாக்கி நடுவர் கொலஸ்.

முருகப்பா தங்கக் கோப்பை இறுதி ஆட்டம் இரண்டு ஆட்டக்காரர்களின் 'டென்ஷ'னைக் கண்டனவே தவிர ஆட்டம் வெற்றி தோல்வியின்றியே முடிந்தது. கடைசியில் பஞ்சாப் போலீஸ் குழு 'பூவா தலையா?' சோதனையில் வெற்றியைத் தேடிக் கொண்டது!





ஆட்ட முடிவு இப்படியானாலும் சர்வதேசப் புகழ்பெற்ற ஆட்டக்காரர்களின் ஆற்றலைக் கண்டு ரசிக்க முடிந்ததே! அதைச் சொல்லுங்கள்!

வெற்றி பெற்ற பஞ்சாப் போலீஸ் குழுவினர் எங்கு போனாலும் அவர்கள் ஊர் சமையலைச் சமைக்க ஒரு சமையல்காரரையும் உடன் அழைத்துச் செல்கிறார்கள். ''அவ்வாறிருந்துமாடென்ஷன்?'' என்று கேட்கத் தோன்றுகிறதா?

அருணாசலம் கோப்பைக்கான பெண்கள் போட்டியில் சென்ற வருஷத்தைப் போலவே இந்த வருஷமும் கேரளக் குழு வெற்றிவாகை சூடியது! செமி பைனலில் ஐந்து 'கோல்' கண்ட ரமணி எல்லோரது கவனத்தையும் கவர்ந்தாள்.

திருவனந்தபுரம் கல்லூரி ஒன்றில் 'Pre-technical' பயிலும் ரமணிக்கு இளம்வயதிலேயே ஹாக்கி ஆட்டத்தின் நுணுக்கங்கள் அனைத்தும் படிந்திருப்பது தனிச் சிறப்பு.

-- குண்டுமணி

Hurry! Save over Rs. 250

Rallifan




Extended up to November 6, 1975

See the benefits no other brand has matched !

Now

Substantial price reductions* on table and ceiling fans



Deluxe 400 mm ~~Rs. 434~~ Rs. 375

Tristar 1200 mm ~~Rs. 430~~ Rs. 349

Delite 400 mm ~~Rs. 349~~ Rs. 310

Similar reductions on other sizes of ceiling fans.

Next

Reductions up to 20% on all Ralli Appliances and fans until December 31, 1975, and 10% thereafter, up to August 31, 1976



Rallimix ~~Rs. 785*~~ Rs. 687*


(*Maximum recommended selling prices, inclusive of excise, local taxes extra)

In 1978

A factory-fresh fan—in exchange for the old—for only Rs. 150**



OLD



NEW

** plus prevailing taxes

Triple benefits when you purchase just one fan! Rallifan

U-RF (P) 22

வேலிக்கு வெளியே

போட்டிக் கதை
~7~

ஜெயா

குறுக்கும் நெடுக்குமாகப் பின்னியிருந்த முள் வேலியினுள் தலையை நுழைத்து ஆட்டுக் குட்டி வீட்டுத் தோட்டத்துக்குள் புக முயன்றது. தலை உட்பக்கமும் உடல் வெளிப் பக்கமுமாகக் கழுத்து முள்ளில் மாட்டிக் கொண்டது. இதைக் காணப் பொறுத பத்மா ஓடிப் போய் அதைக் காப்பாற்றத் துடித்தாள். ஆனால் மறுநொடியே அவள் மனம் மாறியது. தன்னை அடித்து விரட்டவே ஓடி வருகிறாள் என்று ஆட்டுக்குட்டி பயந்து, தப்பிக்கும் அவசரத்தில் முள்ளில் கீறிக் கொண்டுவிடுமோ என்ற ஆதுரம் அவளைத் தடுத்தது. வேடிக்கை பார்த்தாள்.

சிறிது நேரம் சும்மாயிருந்த ஆட்டுக் குட்டி தலையை இருபுறமும் திருப்பிப் பார்த்தது. அரவம் ஏதும் கேட்கவில்லை. ஆட்களையும் காணோம்என்ற துணிவில் பச்சைப் பசேலென்றிருந்த பசுந் தளிரை மென்று தின்னும் நைப்பாசையில், தன் உடலில் முள் குத்துவதைப் பொருட்படுத்தவில்லை. உட்பக்கம் இருந்த தலையைச் சற்றுக் கீழே தாழ்த்தியது. வலது முன்னங்காலை நுழைக்க முயன்றது; முடியவில்லை. இன்னும் கொஞ்சம் தலையைத் தாழ்த்திச் சிரமப்பட்டுப் பின்னங் கால்களைத் தரையில் உதைத்து எம்பியது. முழுக் கழுத்தும் உட்பக்கம் வந்துவிட்டது. உடலும் கால்களும் வெளிப்புறம். வெகு சுலபமாக முதலில் முன்னங் கால்களையும் பின்பு பின்னங் கால்களையும் இழுத்துக் கொண்டு விட்டது. தொப்பெனப் புல்லில் விழுந்த மறு விநாடியே சுதாரித்து எழுந்து விட்டது. சற்று நின்ற இடத்திலேயே தாமதித்து விட்டுக் கொள்ளை ஆசையுடன் தளிரை மேயத் தாவியது.

பத்மாவுக்கு இதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. சின்னஞ்சிறு ஆட்டுக்குட்டி எத்தனை பிடிவாதத்துடன் காயங்களையும் பொருட்படுத்தாமல் முயற்சி செய்து வெற்றி பெற்றுவிட்டது! பிறர் வீட்டுத்தோட்டத்தில் மேய்வது தவறு என்ற சட்ட ஞானம் அதற்குத் தெரியாது. யாதும் ஊரே, யாவரும் கேளிர்! எதிரே பசுமை – அது போதும் அதற்கு. கொஞ்சம் கூடப் பயமோ, பதற்றமோ இல்லாமல் ஆசை தீர மேய்கிறது. பசுந் தளிரும் அதற்காகவே காத்திருந்தது போல் தலை சொல்லாமல் இரையாகிறது.

''நன்னாயிருக்குடீ. ஆடு மேயறதை வேடிக்கை பார்க்கிற அழகு. கல் எடுத்து அடிச்ச விரட்டாம கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருக்கியேடீ.''

தாயின் குரல் கேட்டுப் பத்மா சிரித்துக் கொண்டே எழுந்து ஆட்டுக் குட்டியை விரட்டினாள். அது தோட்டத்துக்குள்ளேயே பாய்ந்து பாய்ந்து ஓடியது. அதற்கு வெளியே போகத் தெரியவில்லை. நாற்புறமும் வேலி. பத்மா பரிவுடன் அதை வந்த நுழை வாயில் பக்கமாக விரட்டினாள். சிறிது சிரமப்பட்டாலும் ஆட்டுக் குட்டி அதில் நுழைந்து வெளியேறிவிட்டது. அதற்கு என்ன திமிர்? வெளியேறியதும், ஓட்டமோ பதற்றமோ இல்லாமல் அழகு நடை பயில்கிறது. வேலிக்கு உட்பக்கம் பத்மா, வெளிப்புறம் ஆட்டுக் குட்டி! அது இப்போது விடுதலை பெற்றுவிட்டது. மாட்டிக் கொண்டிருப்பது பத்மாதான்.





இந்தக் கற்பனை மனத்தில் எழுந்ததும், பத்மா வாய்விட்டுச் சிரித்தாள்.

"வர வர உனக்குப் புத்தியே கெட்டுப் போச்சு. பைத்தியம் மாதிரி தனக்குத் தானே சிரிச்சுண்டு..... வாம உள்ளே."

"அம்மா! அத்துமீறி உள்ளே நுழைந்த ஆடு நம்ம எல்லையைத் தாண்டியதும், ராஜ நடை போடறதைப் பார்த்தியா? அதைப் பார்த்ததும், எனக்கு......"

"அந்தக் கடன்காரன் ஞாபகம் வந்துடுத்தோ?"

"ஏம்மா! தப்பு பண்ணினவனே பயப்படாதபோது, நாம ஏன் பயந்து ஒளியணும்?"

"அவன் ஆம்பளே. நீ பொம்பளே. அது தான் காரணம். வாயாடினது போதும். போய் வேலையைப் பாரும்!"

மூட்டையிலிருந்து அரைப் படி அரிசி எடுத்து வைத்துக் கொண்டாள் பத்மா, கல் பொறுக்கிச் சுத்தம் செய்ய! அப்பப்பா! எத்தனை சொக்டான், குட்டி குட்டியா புழு!

"அம்மா! முதல்லே, அரிசி மூட்டையைக் காற்றில்லாத ஸ்டோர் ரூமிலிருந்து ஹால்லே இழுத்துப் போடணும். எக்கச்சக்கமான சொக்டானும் புழுவுமாப் போச்சு, அரிசி."

"சரி வா. ஒரு கை பிடி. மூட்டையை இழுத்துப் போடலாம்."

"அம்மா காற்றோட்டமா இருந்தால் அரிசி புழுக்காது. மனசும் புழுங்கறதில்லையா?..... என்னை ஏனம்மா வீட்டுக்குள்ளேயே பூட்டி வைச்சிருக்கே?"

"நன்னாயிருக்கும் உதாரணம்! காற்றோட்டம் வேணும்னு அரிசியை ஹால்லே போட்ட மாதிரி பணப் பெட்டிக்கும் நகை நட்டுக்கும்கூடக் காற்று வேணும்னு நடுத் தெருவிலே இறைச்சுட்டு வாயேன்."

"நான் என்ன பணப் பெட்டியா? நகை நட்டா?"

"அது திருட்டுப் போச்சுன்னா சம்பாதிச்சுக்கலாம். நீ இழக்கக் கூடாததை இழந்துட்டா திரும்ப வருமாடீ? மனசை அலைய விடாதே. நாங்களும்தான் முயற்சி பண்ணறோம். சீக்கிரத்திலே உன் கழுத்திலே தாலி ஏற, வேளை வரவேண்டாமா?"

துரத்தத் துரத்த ஆட்டுக்குட்டி தோட்டத்திலேயே துள்ளிக் குதித்ததைப் போல், 'மனசை அலையவிடாதேடீ'ன்னு தாய் சொல்லச் சொல்லப் பத்மாவின் மனம் மறக்க வேண்டியதையே நினைத்து மருகியது. துன்பமான இன்பம் மனத்தில் இழைந்தோடியது. முகாரி ராகம் கேட்டதைப் போல. அவனுடைய தொடர்பின் விளைவு துன்பத்தைக் கொடுத்து விட்டாலும், அவனைப் பற்றிய நினைவு இன்றும் அவள் மனத்தில் இன்பத்தையே தந்தது. விவரம் தெரிந்தபிறகு ஏற்பட்ட முதல் ஆண் நட்பு. அவள் மீது பெற்றோர் பொழிந்த பாசத்தைவிடச் சகோதரர்கள் செலுத்திய அன்பைவிட அவன் காட்டிய அன்பே நெஞ்சில் இனித்தது.

"பத்மா! சந்தியா காலம் வந்துடுத்து. சுவாமிக்கு விளக்கேற்றிவிட்டு வந்து வீணையை



வாசி. நான் கோவிலுக்குப் போயிட்டு வந்துடறேன்!''

பாயை விரித்து வீணையை எடுத்து வைத்தாள். தஞ்சாவூரில் ஸ்பெஷல் ஆர்டர் கொடுத்துச் செதுக்கியது. தன் மகளின் இசைப் பயிற்சியில் அத்தனை ஆர்வம் இருந்தது தந்தைக்கு. சக்திக்கு மீறியே செலவழித்தார்.

அழகான வீணை! அழகுடன் போட்டியிட்ட கம்பீரம்!

அழகாயிருப்பதெல்லாம் கம்பீரமாகவும் இருக்கின்றன. அவள் மட்டும் அழகாயிருந்தும் கம்பீரமாக இருக்க முடியவில்லை. தலை குனிவு ஏற்பட்டுவிட்டது, அவனால். அவன் செய்த காரியத்தால் அல்ல; செய்யத் தவறிய குற்றத்தால். பத்மாவின் மீது அவனைப் பெற்றவர்கள் பழி சுமத்தியபோது அவன் நடந்ததைச் சொல்லத் தவறியதால். ஆண் பிள்ளையாக நடந்து கொள்ளாமல், பெட்டையாய் நெட்டை மரமாய் நின்றுவிட்டதால் இன்று தகாத பழியைச் சுமந்து கொண்டு பத்மா வீட்டுக்குள் புழுங்குகிறாள். அமைதியின்றித் தவிக்கிறாள்.

அலை பாயும் உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்க வல்ல அருமருந்து இசை. அதிலும் கலைவாணியின் மடியில் தவழும் தெய்விகமான வீணை தரும் நாதம். அந்த நாளில் எதிரில் அமர்ந்து கொண்டு, தலையை ஆட்டி, தாளம் போட்டு அவளது வாசிப்பில் தன்னையே மறந்து லயித்துவிடுவான் அவன். அப்படித்தான் தொடர்பு ஏற்பட்டது அவர்கள் இருவருக்குமிடையே. அவள் வாரிக் கொடுத்தாள் இன்னிசையை; அவன் தன்னையே அடிமைப் படுத்திக் கொண்டான். தன் வாசிப்பை அணு அணுவாக ரசிக்க ஒருவன் கிடைத்து விட்ட பெருமிதம் பத்மாவுக்கு!

ஒரு சமயம், 'ரகுவம்சா சுதா' ஊத்துக்காடு வேங்கட சுப்பையரின் 'அலை பாயுதே', 'ஆடாது அசங்காது வா' பாடல்களை வாசிக்கச் சொன்னான். அவளும் வாசித்துவிட்டு மத்தியமாவதி எடுத்தாள். அவன் ஓடி வந்து கையைப் பிடித்தான். ''ப்ளீஸ்! முடிச்சுடாதே. இன்னும் வாசி.''

அந்த ஸ்பரிசம் அவளுள் இத்தனை காலமாயில்லாத வேறோர் உணர்ச்சியை உருவாக்கி விட்டது. அவன் தொட்ட இடம் தித்தித்தது. பருவத்தின் பரிணாமம் பத்மாவைப் பதுமையாக்கிக் காட்டியது. பதுமையின் பளபளப்பில் இளைஞனொருவன் அறிவுக் குருடனானான். அவன் நிழலைப் பார்த்து நடந்தான். அவள் நினைவில் வாழ்ந்தான். அவள் நெருக்கத்துக்காகப் பெருமூச்சு விட்டான். நீட்டோலை எழுதி நெஞ்சத்தை விண்டுரைத்தான். அவள் அதை நெருப்பிலிட்டாள். அவன் மீண்டும் எழுதினான். அவள் அதை அவன் முகத்தில் வீசினாள். மறுபடியும் மறுபடியும் கடிதங்கள். கரையாத கல்லும் கனிந்துருகும் காதற் காவியங்கள். அவள் இதயம் அசைந்தது. தடுமாற்றம் தலைதூக்கியது. குலையாத உள்ளம், கலையாத பருவம், கட்டுப்பாட்டை மறந்து பதில் எழுதிவிட்டது.

அவள் இசைக் கல்லூரிக்குப் போய்க் கொண்டிருந்தாள். நிழலாக அவனும் பின் தொடர்ந்தான். தயங்கி, தடுமாறி, இறுதியில் நடுங்கிப் பயந்து கடிதத்தை நீட்டியபோது எதிர்ப்பட்ட மூன்றாமவரை அவள் பார்க்கவில்லை. அவன் பார்த்துவிட்டான். பயந்து போய் அவன் கடிதத்தை வாங்கிக் கொள்ளவில்லை. அவன் கையிலிருந்து விடுபட்ட கடிதம் காற்றில் பறந்து அந்த அந்நியரின் காலடியில் விழுந்தது. அவர் அதை எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

மறு நாளே அமர்க்களம். ஊரையே கூட்டி விட்டாள், அவன் தாய். ''என் பிள்ளை டாக்டருக்குப் படிக்கிறான். லட்சணமாயிருக்கிறான். லட்ச ரூபாய் சொத்துக்கு ஒரே வாரிசு. தெவச மந்திரம் ஓதித் தெருத் தெருவா அலையறவன் பொண்ணுக்கு என்ன தைரியம் இருந்தால் இப்படி என் பிள்ளைக்குக் காதல் கடிதாக எழுதுவா? அந்தத் தைரியம் அவளுக்குக் கொடுத்தது யாரு? அவளைப் பெத்தவங்க. அவங்க தரித்திரம் விடியப் பணக்காரப் பையனுக்குக் காதல் கடிதாக எழுதி மயக்கும்படி அவளைத் தூண்டிவிட்டிருக்காங்க, த்தூ!''

அவனுடைய தந்தையோ பத்மாவின் வீட்டுப் படியேறி வந்து தன் பணத்தையும் அந்தஸ்தையும் ஞாபகப்படுத்தி எச்சரித்து விட்டுப் போனார். பத்மாவின் பெற்றோருக்குப் பதில் பேச வழியில்லாமல் போய்விட்டது. ஊராரும் பத்மா செய்ததுதான் தவறு என்று முடிவு கட்டித் தூற்றினார்கள்.

பத்மாவின் வருத்தமெல்லாம், அவன் வாய் திறந்து ஏதுமே பேசவில்லையே என்பது தான். கன்னிப் பெண்ணுக்குக் களங்கம் கற்பிக்கப்படும் போதுகூட, நடந்ததைக் கூற அவன் முன் வரவில்லையென்றால், மனிதனா அவன்? அவனாகவே வீட்டுக்குள் வந்தான். வீணை இசையில் தன்னை மறந்தான். அவளோடு இணைந்து வாழ ஆசைப்பட்டுப் பல கடிதங்களை எழுதினான். அந்தக் கடிதங்கள் யார் கண்ணிலாவது தென்பட்டு விட்டால் தனக்குக் களங்கம் ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தில் அவற்றை எரித்தாள். ஒன்றுகூட விடாமல் தீக்கிரையாக்கினாள். அந்தச் செய்கையே இப்போது அவள்மீது களங்கம் ஏற்படச் சாதகமாகிவிட்டது.

பத்மாவின் அப்பா மானஸ்தர். அவதூறும் ஏச்சும் பேச்சும் எழுந்தபோது ஸ்தம்பித்த நிலையில் வாய் அடைத்துப் போனவர் இன்னமும் ஊமையாகவே இருக்கிறார்..... பத்மாவிடம் பேசுவதே இல்லை; அவன் வசிக்கும் தெருவிலிருந்த நாலைந்து உபாத்தியாயங்களையும், அந்தத் தெருப் பக்கமே போகக் கூச்சப்பட்டுக் கொண்டு, நிறுத்திக் கொண்டு விட்டார். அவருடைய பூர்வீகச் சொத்தான அந்த வீட்டையும் விற்றுப் பணமாக்கி அவள் திருமணத்தை உடனடியாக முடிக்க அலையாய் அலைகிறார்.

மனம் எங்கோ அலை பாய, விரல்கள் தடுமாற, பத்மாவின் வீணை வாசிப்பு அபஸ்வரம் தட்டியது. சலிப்புடன் நிறுத்திவிட்டு நிமிர்ந்தாள். எதிரே அவன் அமர்ந்து பரிகாசமாகச் சிரிப்பது போன்ற பிரமை தட்டியது. அவன் செய்தது துரோகம்தான். அவன் வாழ்வையே கறைப்படுத்தி விட்டான். தன்



உலகிலேயே பண்படுத்தப்படாத மிகப் பெரிய பிரதேசம் உனது தொப்பிக்குக் கீழேதான் உளது!

— செயின்ட் ஜஸ்ட் குரல் - ரா. பா



இந்த
தீபாவளிக்கு
குமரன்
பட்டுப் புடவைகள்
பாவாடைகள்
வாங்கி மகிழுங்கள்
• கண் கவர் வண்ணங்கள்
அநேக டிசைன்கள்
• நவநாகரீக நங்கைகள்
தேர்ந்தெடுப்பது குமரன்
பட்டுப் புடவைகளே!
• உற்பத்தி விலைக்கே வாங்கிட,
இன்றே விஜயம் செய்வீர்!!
குமரன் சில்க்ஸ்
(பனகல் பார்க் எதிரில்)
தி. நகர், சென்னை-600017
போன் : 443544
தயாரிப்பு நிலையங்கள் :
காஞ்சீபுரம் & ஆரணி
Sarath-KS



முதலில் மீண்டும்
உபயோகிக்கத்தக்க இந்த
அழகிய பேக்கை வாங்குங்கள் —
அதற்காகத் தனியாக
ஒன்றும் பணம் கொடுக்க வேண்டாம்!

5-தடவை நிரப்பிக் கொள்ளக் கூடிய பாலி-
பையிலிருந்து அவ்வப்போது அதில் மீண்டும்
நிரப்பிக்கொள்ளுங்கள்...ஒவ்வொரு முறையும்,
35% க்கும் அதிகமாக நீங்கள் சேமிக்கிறீர்கள்.

உயர்ந்த சேமிப்புக்கென
ஒரு கி.பயில் மற்றும்
இரு கி.பயில் பேக்குகளும்
கிடைக்கின்றன.

பிஜ்

கோத்ரெஜ் தயாரிப்பு

தன்னிகரற்ற க்ளீனிங் பவுடர் • உன்னதமான சேமிப்புத் திட்டம்

CMGS-68-172 Tam

மனிதன் தன்னைத்தானே மதிப்பீடு செய்து கொள்ளும்போது தன்னுடைய லட்சியங்களின் அடிப்படையில் எடை போடுகிறான். பிறரை எடை போடும்போது அவர்களது சாதனைகளின் அடிப்படையில் மதிப்பிட முன்வருகிறான்! — ஹெரால்ட் நிகல்சன் - ஆர்பி



அந்தஸ்தையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள ஏழைப் பெண்ணின் இதயத்தைக் காலில் போட்டு மிதித்துவிட்டான். இருந்தும், அவளால் அவனை மறக்க முடியவில்லை.

"பத்மா! என்ன குருட்டு யோசனை வீணை வாசிக்காம?"

பத்மா திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாள். கமலா! இவள் எப்போது வந்தாள்? வந்ததுகூடவே தெரியவில்லையே. கமலா அவளுடைய பள்ளித் தோழி. அவள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வசிப்பவள்; அவளுக்கு நடந்ததெல்லாம் தெரியும். பத்மாவுக்கு ஆறுதல் கூறியவள் அவள் ஒருத்திதான்!

"பத்மா! வீட்டிலே வேறு யாருமில்லையே? ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்."

கமலாவைப் பத்மா உன்னார்ந்து பார்த்தாள். அவள் என்ன வெடி குண்டைத் தூக்கிப் போடப் போகிறாளோ என்ற பயம் நெஞ்சில் வெள்ளமாகப் பெருகியது.

"பத்மா! நேத்திக்குச் சாயங்காலம் அவன் வீட்டுக்கு யாரோ சில புது மனுஷா வந்திருந்தா. அவாளை நான் இதுவரையிலும் நம்மூரிலே பார்த்ததில்லே. வெளியூராகத்தான் இருக்கணும். ஒரு மணி நேரத்தில் திரும்பிப் போயிட்டா. காதும் காதும் வைச்ச மாதிரி அவன் வீட்டிலே அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாகிறதோன்னு நினைக்கிறேன்."

"பெண் பார்த்துவிட்டு வந்தாச்சா?"

"அவன் அம்மா, அப்பா பார்த்திருக்கலாம். ஆனா இவன் இந்த ஒரு வாரமா வீட்டை விட்டு எங்கேயுமே வெளியே போகலே. காலேஜுக்குக்கூட."

"நீ பார்த்தியா?"

"அவனைத்தானே? இன்னைக்கு(?) கரையிலே நேத்திக்குக் காலம்பறப் பார்த்தேன். பாவம்! அவன் முகம் பேயறைஞ்ச மாதிரி வெளுத்தது. அவன் மனசிலே என்ன வேதனையோ! அவனம்மாதான் ஒரு பத்திரகாளியாச்சே. அந்த வீட்டிலே அவள் வைத்ததுதான் சட்டம். அவளை எதிர்த்து அவன் பேச மாட்டான். சுபாவமே அப்படி. எப்பவும் அடங்கிப் போயிடுவான். அவள் இழுத்த இழுப்புக்கு அவன் அப்பாவே இழுபடுகிறபோது, அவனால் என்ன செய்ய முடியும்?"

"இதைச் சொல்லத்தானா ஓடி வந்தே?"

"அதில்லேடீ பத்மா! எனக்கென்னவோ அவன் நல்லவன்தான்னு தோணுது. உன்னை வீட்டுக்குள்ளே முடக்கி வச்சுக்கா. உங்க அப்பா, அம்மா. அவாளும் தன்னைத்தானே முடக்கிக் கொண்டு வாடுவதங்குகிறான். இப்படியே அவனை விட்டுடக் கூடாதுன்னுதான் அவனுக்குக் கல்யாணம் செய்துவைக்க அந்தப் பத்ரகாளி அவசரப்படறா. வேறெருத்தி வந்துட்டா, அவன் மனசிலேயிருந்து உன்னைக் கெல்லி எறிந்துவிடலாமோன்னோ?"

"எங்கம்மா அடிக்கடி சொல்வா, 'அவன் ஆம்பளை, நீ பொம்பளை'ன்னு. நீ சொல்றபடி அவனுக்கு என்மேலே உண்மையான அன்பிருந்தா இப்படியா பொம்பளை மாதிரி வாயைப் பொத்திண்டு என்னைக் காட்டிக் கொடுத்திருப்பான்? ஆம்பளையா அடிச்சுப் பேசித் தன் ஆசையைச் சொல்லியிருக்கவேண்டாமா?"

"கமலா, இருட்டிப் போச்சு. வீட்டுக்குப் போம்மா" என்று கூறியவாறே கோவிலுக்குச் சென்றிருந்த பத்மாவின் தாய் வந்தாள். மத்யமாவதி வாசித்து வீணையை மர பீரோவில் எடுத்து வைத்தாள் பத்மா. கமலா போய்விட்டாள். கோவிலுக்குப் போய் வந்தால் தினமும் கடைச் செய்தி கொண்டு வருவாள் பத்மாவின் தாய். ஒரு வாரமாகத் தன் வீட்டுக் கதையே ஊர்ச் செய்தியாகிவிட்டதால், அவள் திரும்பி வந்ததும் பெருமூச்சு விட்டு ஆசுவாசப் படுத்திக் கொள்வாள். இன்று அந்தப் பெருமூச்சும் காணோம்! ஏதாவது புதிய குழப்பமோ? அல்லது அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்ட செய்தி அவளுக்கும்எட்டியிருக்குமோ? பத்மாவிழித்தாள்.

"பத்மா! அவன் வீட்டை விட்டு ஓடிப் போயிட்டானாம்."

"ஓடிப்போனவனுக்கு ஒன்பதாமிடத்தில் குரு. அகப்பட்டுக் கொண்ட எனக்கு அஷ்டமத்திலே சனி."

"பத்மா! இரையாதே. கிட்டவா. ஓடினவன் சும்மா போகலே. அந்தப் பத்ரகாளியின் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டுப் போயிருக்கானாம்."

"என்னம்மா சொல்றே?"

"அவ அவசரமா பணக்கார இடத்திலே பெண்ணைப் பார்த்து நிச்சயம் பண்ணிட்டாளாம் நேத்திக்கு. அவன் பெண்ணைக்கூடப் பார்க்கலே. அவன் ஒரு கடிதாசு எழுதி வெச்சுட்டு நேத்தி ராத்திரியே போயிட்டானாம். இன்னும் விஷயம் யாருக்கும் தெரியாது. அவர்கள் வீட்டு வேலைக்காரி என்னிடம் ரகசியமாச் சொன்னா."

"கடிதாசா? யாருக்கு?"

"உனக்கில்லேடீ. அவன் அம்மாவுக்குத்தான். நிச்சயம் செய்திருக்கும் கல்யாண ஏற்பாடுகளை நிறுத்திவிட்டு உனக்கும் அவனுக்கும்தான் கல்யாணம்னு பேப்பரிலே அவன் அப்பா விளம்பரம் கொடுத்தாலேதான் வீடு திரும்புவேன்னு எழுதியிருக்கானாம். ஒரே பிள்ளையாச்சே. அந்த ராக்ஷஸி சோறு தண்ணி இல்லாமே சுருண்டு கிடக்கிறாளாம். என்னாகப் போகுதோ? பிரகதீசுவரர் மனசு வைச்சா எல்லாம் நல்லபடியா முடியும்."

தோட்டத்துக்குள் நுழைந்து பயிரை மேய்ந்துவிட்டு, துரத்தியதும் மிரண்டு ஓடிய ஆட்டுக்குட்டி, வேலியைத் தாண்டியதும் ராஜநடை போட்ட காட்சி பத்மாவின் மனத்தில் நிழலாடியது. அதன் துணிவைப் பார்த்தாள். மீண்டும் சமயம் பார்த்துத் தோட்டத்துக்குள் நுழையும்போலத்தான் தெரிந்தது!



மானமறவன்!

கடைசிப் பக்கம்

— கண்ணதாசன் —

தீந்தமிழ்ச் சாறு; தெளிந்தநல் லாறு
செய்முறை நேர்த்தி தெரிந்தநல் லறிஞன்
ஆன்றவிந் தமைந்த அன்புடை வள்ளல்
அன்னைநா டுயரத் தன்னையீங் களித்தோன்

கல்லா மையதனைக் கருவறுக் கின்றவன்
இல்லா மைதனை இல்லா தாக்குவோன்
நல்லோர் இதயம் நாடும் நாயகன்
நாளைக் காமலே நாடமைக் கின்றவன்

மானத் தமிழர் மன்றிடைத் தோன்றிய
ஞானமா ணிக்கம்; நறுமணத் தென்றல்
தேசநல் வாரிசாய் நிலைத்து நிற்பவன்
பாரதத் தேருக்குப் பண்புசால் சாரதி
ஒடிந்து விழுந்த உலக்கைத் துண்டுகள்
தாக்கிய நிலைத்தும் தாங்கும் மன்னவன்!

ஏழ்மையிற் பிறந்து ஏழ்மை உணர்ந்து
ஏழைகள் உயர இதயம் விரித்தவன்
குழப்பக் குட்டையிற் குதிக்க நினைத்தவர்
குழம்பிச் சோர்வுறக் குழப்பம் தீர்த்தவன்!


படித்தவ னல்லன்; பல்கலைக் கல்வி
முடித்தவ னல்லன்; நால்வகை வேதம்
குடித்தவ னல்லன்; கொள்கை நிலத்தில்
வெடித்து வந்தவன்; வெள்ளை நெஞ்சினன்!
அவனால் பாரதம் அமைதி யுற்றது
அவனால் பாரதம் அறிவுநீங் கிற்று!

பாரத தேசம் பட்டினி ஒழிந்து
பாரில் உயரப் பறக்குநாள் வரைக்கும்
வாழிய வென்று வாழ்த்துமிப் பாட்டு
ஏழைக் கவிஞனின் இதயத் துடிப்பு!

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

டிஸ்கான்

40% எஃகினை மீதப்படுத்தும் உறுதியான பிடிப்பு




டிஸ்கான் பார்கள் ரீ-இன்ஃபோர்ஸ்ட் காங்க்ரீட் வேலைகளுக்கு வலிமையளிக்கின்றன. 40% எஃகினை மீதப்படுத்த உதவுகின்றன. கட்டிடங்கள், இணைப்புப்பாலங்கள் அணைக்கட்டுகள், சிலர்வாயர்கள், அஸ்திவாரங்கள், நீர்ப் பாசனத் துறை மற்றும் மின்சார சம்பந்தக் கட்டிட வேலைகளில் டிஸ்கான் கோல்ட் ட்விஸ்டெட் பார்கள் சிக்கனத்தை ஏற்படுத்துவதோடு வலிமையூட்டுகின்றன.

சொந்தமாகவே நம் நாட்டிலேயே தயாரிக்கப்படும் ஹை ஸ்ட்ரெங்க்த் பார் டிஸ்கான் மட்டுமே ஆகும். இது டாடா ஸ்டீலின் அதிநவீன விஞ்ஞான முறைகளின் விளைப்பயனாகும். ரூர்கியில் உள்ள ஸ்ட்ரக்சரல் எஞ்ஜினீயரிங் ரிஸர்ச் ஸெண்டர் மூலம் உள்கட்டு ஆராய்ச்சித் திறன், வேலைத்திறன் இவற்றை க்ரிப் பார்த்துறையில் பயன்படுத்தி டாடா ஸ்டீல் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை மீதப் படுத்த உதவியுள்ளது.

ஒவ்வொரு டிஸ்கான் க்ரிப் பாரும் ஐஎஸ்ஐ தரநிர்ணயம் ஐஎஸ் 1786க்குட்பட்டுள்ளது. மேற்பட்ட விவரங்களுக்கு எழுத

வேண்டிய முகவரி:
தி டைரெக்டர் ஆஃப்
மார்க்கெட்டிங் & ஸேல்ஸ்
தி டாடா அயர்ன் அண்ட்
ஸ்டீல் கம். லிட்.
43, சௌரிங்கீ ரோடு,
கல்கத்தா 700016.

டாடா ஸ்டீல்



TIS-9089

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
[illegible] 75 [illegible]